# வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2017–2018

### 1. முன்னுரை

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையானது அனைத்துத் துறைகளுக்கும் தாய்த் துறையாக விளங்குகிறது. அடித்தட்டு மக்களுக்கான அரசின் முகமாக செயல்படுகிறது. பொதுமக்களின் அனைத்து நிலைகளிலும் இத்துறையின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாததாகிறது. இத்துறை, சமூக மேம்பாட்டிற்கு பல்வேறு பணிகளை வழங்கி திறம்பட நிர்வகிக்கிறது. மேலும், அரசின் முக்கிய உடமைகளான நிலம், கனிமவளம், புராதான சின்னங்கள், நீர்நிலை ஆதாரங்கள், ஆகியவற்றினை பாதுகாப்பதிலும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது.

இத்துறையானது விவசாயிகள், மாணவர்கள், வேலை வாய்ப்பில்லாதவர்கள், பணிபுரிபவர்கள்,

சமூகத்தின் அடித்தட்டு மக்கள், தொழில்முனைவோர் மற்றும் தொழிற்சாலை ஆகியோருக்கான சேவைகள் வழங்குவது மற்றும் தேவையான சான்றிதழ்களான சாதிச்சான்றிதழ், பிறப்பு சான்றிதழ், இறப்பு சான்றிதழ், வாரிசுச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், நில உடமைகளில் உரிய திருத்தம் மற்றும் பல்வேறு உரிமங்கள் வழங்குவதன் மூலம் அவர்களின் மேம்பாட்டிற்கு இத்துறை வழிவகுக்கிறது. மேலும், இந்திய தேர்தல் ஆணையம் நடத்தும் அனைத்து வகையான தேர்தல்களிலும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் பங்கு மகத்தானது.

இத்துறை தொடங்கப்பட்டது முதல், இயற்கை சீற்றம் மற்றும் மனித சக்தியால் ஏற்படும் அழிவுகளிலிருந்து மீட்பு பணியை முன்னின்று மேற்கொள்கிறது. இயற்கை சீற்றத்தின்போது பாதிக்கப்படும் மக்களை மீட்டு, நிவாரணம், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்தல் பணிகளை அளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இத்துறை, பேரிடர் மேலாண்மை சம்மந்தமான எல்லா பணிகளையும் மேற்கொள்வதில்

இத்துறை மையமாக விளங்குவதால் தமிழக அரசால் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை என தற்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 1.1 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் பாரம்பரியம்

பண்டைய காலங்களில், நிலவருவாய் என்பது, ஒரு இறையாண்மை அரசுக்கு முக்கிய வருவாய் ஆதாரமாக விளங்கியது. தற்போதைய, வருவாய் நிர்வாகத்தை போன்றே மௌரியர் மற்றும் குப்தர் கால அரசவையின்போது, நில வருவாயானது, அரசு அலுவலர்கள் மூலமாக வசூல் செய்யப்பட்டது. அதன் பின்னர், மான்யமாக வழங்கப்பட்ட பிரம்மதேயா, தேவதானாம், அக்ரகார நிலங்களிலிருந்து பெறப்பட்ட வரியே, வருவாய் ஆதாரமாக விளங்கியது. அதனைத் தொடர்ந்து, சுல்தானியர்கள் ஆட்சிக் காலத்தில் கிட்டத்தட்ட **300** வருடங்கள் வரை ஜாகீர்தாரர்கள், சுபேதார்கள் மற்றும் இனாம்தாரர்கள் ஆகிய இடைநிலை அலுவலர்கள் மூலமாக வருவாய் ஆதாரங்கள் வசூலிக்கப்பட்டு வந்தன.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நிர்வாகத்தில் ஒரு முறைப்படியான நிர்வாகத்திட்டம் ஷெர்ஷா சூரி ஆண்ட காலத்தில் **(1540–1545)** துவங்கப்பட்டது எனலாம். அந்த முறையானது சற்று மேம்படுத்தப்பட்ட நிலையில் மொகலாய மன்னர்களில் முக்கியமானவராகக் கருதப்படும் அக்பர் **(1556–1605)** காலம் வரை தொடர்ந்தது. அக்பரின் ஆட்சிக் காலத்தில் நிதித்துறை அமைச்சராக விளங்கிய இராஜாதோடர்மால் நில அளவை மற்றும் வருவாய் தீர்வை மதிப்பீடு முறையை கொண்டுவர முக்கியக் காரணமானவர். இதன் மூலம் அரசின் தேவையின் அடிப்படையில், நிதி ஆதாரத்தினை நிர்ணயம் செய்யவும், வருவாயினைப் பெருக்கிடவும் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இப்பணிக்காகவே, மொகலாயர்கள் ஆட்சிக் காலத்தில் அரசின் நேரடி நிர்வாக அலுவலர்களாக மாகாண ஆளுநர்கள், அமில், நிலஅளவுகள் பற்றி அறிந்திருக்கும் அதிகாரியான காணுங்கோ, நில தீர்வை நிர்ணயம் செய்யும் ஜாகீர்தார்கள், அவர்களின் கீழ் வரிவசூல்

அலுவலர்களும், இடைத்தரகர்களும் செயல்பட்டனர். மேலும், விவசாயிகளின் சார்பாக முக்கதம்ஸ் (Muqaddams) சௌத்ரிகள் (Chaudharys) செயல்பட்டனர்.

வருவாய் நிர்வாகம் மேலும் மெருகூட்டப்பட்டு ஆங்கிலேயர் ஆட்சியில், காரன்வாலிஸ் காலத்தில் (1793), வருவாய் நிர்வாகமானது "நிலையான நிலவரித்திட்டம்" என்ற முறையிலும், சர்.தாமஸ்மன்றோ காலத்தில் (1802) 'ரயத்துவாரி' முறையாகவும் நிருவகிக்கப்பட்டது. மேலும், அவர்கள் முகலாயர்களுடைய மரபுவழி விவசாயத்திட்ட முறையினையும் ஏற்றுக்கொண்டனர்.

கிழக்கிந்திய கம்பெனியால் உருவாக்கப்பட்ட வருவாய் வாரியம், வருவாய் நிர்வாகத்தில் முக்கிய ஆதிக்கம் செலுத்தியதன் மூலம் கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகத்திற்கு பெரிதும் உதவியது. ஆங்கிலேயர்கள் காலத்தில் வருவாய் வசூலுக்கும், பொது நிர்வாகத்திற்குமான அமைப்பு முறையை கண்டறிந்தனர். அதன் அடிப்படையில், ஆங்கிலேய அரசாங்கத்தால், 1786–ஆம் ஆண்டில் வங்காளத்திலும் மதராஸ்

மாகாணத்திலும் "வருவாய் வாரியம்" அமைக்கப்பட்டது. ஆங்கிலேய அரசு அன்றைய வழக்கிலிருந்த முறையையும் நிலம் சார்ந்த சட்டங்களையும் தங்கள் வழக்கத்திற்கு ஏற்றாற்போல் வடிவமைத்தனர். ஆங்கிலேயர் காலகட்டத்தில் அனைத்து துறைகளின் மையப்புள்ளியாக விளங்கிய வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சுதந்திரத்திற்கு பிறகு இன்றளவிலும் விளங்கி வருகிறது.

இந்நிலையில், வருவாய் நிர்வாகத்தினை செயல்படுத்தி வந்த "தமிழ்நாடு வருவாய் வாரியம்" 1980–ஆம் ஆண்டு கலைக்கப்பட்டு முதலில் 3 ஆணையரகமாகவும் பின்னர் படிப்படியாக 5 ஆணையரகமாக உருவாக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு தற்போது இயங்கி வருகிறது.

## 1.2 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை

இத்துறையின் கீழ் வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு ஆணையரகம், நில நிர்வாக ஆணையரகம், நிலச்சீர்திருத்த ஆணையரகம், நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையரகம் மற்றும் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட

இயக்குநரகம் ஆகிய ஐந்து ஆணையரகம்/ இயக்குநரகம் கொண்டுள்ளது.

**வருவாய் நிர்வாக ஆணையரகம்,** வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் தலைமையின்கீழ் இயங்குகிறது. இவர் பொது நிர்வாகம், சமூகபாதுகாப்பு திட்டங்களை செயல்படுத்துதல், இயற்கை இடர்பாடுகளின் போது நிவாரணம் மற்றும் மறு சீரமைப்பு உள்ளிட்ட பேரிடர் மேலாண்மையை கவனித்தல், சான்றிதழ்கள், உரிமங்கள் வழங்குதல், தேசிய மக்கள் தொகை பதிவேடு தயாரித்தல் மற்றும் விலையில்லா வேட்டி சேலை விநியோகித்தல் ஆகிய பணிகளை கண்காணிக்கிறார்.

**2014**–இல் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை, வருவாய்த்துறை ஆணையர் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இம்முகமை பேரிடர் தொடர்பான பணிகளைச் செய்துவருகிறது.

**நில நிர்வாக ஆணையரகம்,** நில நிர்வாக ஆணையர் தலைமையின் கீழ் இயங்குகிறது. இவர் நில எடுப்பு, நில உரிமை மாற்றம், பிற துறைகளுக்கு நில மாற்றம் செய்தல், நில ஒப்படை மற்றும் வீட்டுமனை ஒப்படை மற்றும் நிலப்பட்டாக்கள் வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்கிறார். மேலும், இவ்வாணையரகம் அரசு நிலங்களின் பாதுகாவலனாக செயல்படுவதோடு மட்டுமில்லாமல் நில ஆக்கிரமிப்புகளை அகற்றுதலுக்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

**நிலச்சீர்திருத்த ஆணையரகம்,** நிலச்சீர்திருத்த ஆணையர் தலைமையின் கீழ் இயங்குகிறது. இவ்வாணையரகத்தில் விவசாய நில உச்சவரம்பு, குத்தகைதாரர் உரிமைகள், உபரி நிலங்களை விவசாய பயன்பாட்டிற்காக ஒப்படை செய்தல் மற்றும் உழவர் பாதுகாப்பு திட்டம் ஆகிய விவசாய சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையரின் தலைமையில் இயங்குகிறது. இவ்வாணையரகத்தில் நகர்ப்புற நில** (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் **1978–**இன்படி கையகப்படுத்தப்பட்ட நகர்ப்புற மிகைப்பற்று நிலங்கள் தொடர்பான பணிகளும், **24** மாவட்டங்களில் நகர்ப்புற நிலவரி தொடர்பான பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரகம்,** நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் தலைமையின் கீழ் இயங்குகிறது. இத்துறை நில அளவை, நிலப்பதிவேடுகளை கணினி மயமாக்குதல், புல அளவுகளை கணினிமயமாக்குதல், உலக செயலாக்க அமைப்பு (குளோபல் பொசிஷனிங் சிஸ்டம்) மற்றும் நிலப் பதிவேடுகளை மேம்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்கிறது.

## அட்டவணை–1.1

## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் உள்ள பணியாளர்களின் விபரம்

| துறை தலைவர்கள் | முதலாம் நிலை அலுவலர் | இரண்டாம் நிலை அலுவலர் | மூன்றாம் நிலை அலுவலர் | நான்காம் நிலை அலுவலர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் துயர் தணிப்பு | 8 | 4163 | 12970 | 33351 | 50492 |
| நில நிர்வாகம் | 8 | 21 | 82 | 33 | 144 |
| நில சீர்திருத்தம் | 4 | 15 | 56 | 16 | 91 |
| நில அளவை மற்றும் நிலவரி திட்டம் | 9 | 289 | 3162 | 746 | 4206 |
| நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி | 1 | 55 | 261 | 77 | 394 |
| **மொத்தம்** | **30** | **4543** | **16531** | **34223** | **55327** |

மாவட்ட நிர்வாகத்தின் தலைவரான மாவட்ட ஆட்சியரோடு இணைந்து மாவட்ட வருவாய் அலுவலர்கள், சார் ஆட்சியர்கள்/ வருவாய் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், நில அளவை உதவி இயக்குநர்கள், மண்டல துணை வட்டாட்சியர்கள், நில அளவை துறை ஆய்வாளர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம உதவியாளர்கள் மற்றும் பிற பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

## 2. வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் ஆணையரகம்

இவ்வாணையரகம் வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் தலைமையில் இயங்கி வருகிறது. அவரின்கீழ் இணை ஆணையர் (வருவாய் நிர்வாகம்), இயக்குநர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) மற்றும் இயக்குநர் (பேரிடர் மேலாண்மை) ஆகியோருடன் பிற அலுவலர்களும் பணியாற்றி வருகின்றனர்.

வருவாய் நிர்வாகம், நிலவருவாய், உரிமங்கள் வழங்குதல், சமூகப்பாதுகாப்புத் திட்டம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆகிய அனைத்து பணிகளையும் செயல்படுத்தி வருகிறது. களப்பணி நிருவாகத்தின் கட்டமைப்பு பின்வருமாறு அமைந்துள்ளது.

### 2.1 மாவட்ட நிர்வாகம்

தமிழ்நாட்டில் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையின்கீழ் **32** மாவட்ட அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட நீதிபதி அவரின் கீழ் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட அளவிலான பல துறையைச் சார்ந்த அலுவலர்கள்

மாவட்ட ஆட்சியருக்கு துணை புரிகின்றனர். மாவட்ட அளவில் அரசின் முகமாக மாவட்ட ஆட்சி தலைவர் விளங்குகிறார். மாவட்டத்திற்கு தேவையான அனைத்துத் துறைப்பணிகளும் மாவட்ட ஆட்சியரின் மேற்பார்வையில் செயல்படுத்தப்படுகின்றன.

### 2.1.1 வருவாய்க் கோட்ட நிர்வாகம்

ஒவ்வொரு மாவட்டத்திலும், நிர்வாகம் செம்மையாக செயல்படுவதற்கு ஏதுவாக கோட்டங்களாக பிரிக்கப்பட்டு சார் ஆட்சியர்/ கோட்டாட்சியர் தலைமையின் கீழ் இயங்கி வருகின்றன. வருவாய் நிர்வாகம், சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு, நில நிர்வாக மேற்பார்வை, கிராம நிர்வாகம் போன்ற பொறுப்புகளை, 85 வருவாய்க் கோட்டாட்சியர்கள் நிர்வகித்து கண்காணித்து வருகின்றனர்.

### 2.1.2 வருவாய் வட்ட நிர்வாகம்

வட்டாட்சியரின் தலைமையின் கீழ் இயங்கிவரும் வட்ட நிர்வாகம் பொதுமக்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. 290 வருவாய் வட்டங்கள் மூலமாக அரசின் பல்வேறு சேவைகள்

பொதுமக்களை சென்றடைகின்றன. இவற்றில் முக்கியமாக நில நிர்வாகம், பட்டா, சிட்டா, அடங்கல் மற்றும் நிலம் தொடர்பான சான்றுகள், பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் மாணவ மாணவியர்களுக்கு தேவையான சான்றிதழ்கள், சாதிச்சான்றிதழ்கள், இருப்பிடச் சான்றிதழ்கள், வருமானச் சான்றிதழ்கள் போன்ற பல்வேறு சான்றிதழ்கள் வருவாய் வட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

### 2.1.3 குறுவட்ட நிர்வாகம்

ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள வருவாய் கிராமங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு பிர்கா என்று கூறப்படும் குறுவட்டங்களாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் மொத்தம் **1,189** குறுவட்டங்கள் வருவாய் ஆய்வாளரின்கீழ் இயங்கிவருகின்றன. கிராம நிர்வாகம் செம்மையாக செயல்படுவதற்கு இவ்வருவாய் ஆய்வாளர்களின் பணி முதன்மையானது.

### 2.1.4 கிராம நிர்வாகம்

அரசின் பல சேவைகளை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் பொறுப்பு வருவாய் நிர்வாகத்தின்

அடித்தளமாக இயங்கிவரும் கிராம நிர்வாகத்தையே சாரும். இம்மாநிலத்தில் உள்ள **16,682** வருவாய் கிராமங்களுக்கு, கிராம நிர்வாக அலுவலர்கள் மூலமாக கிராம நிர்வாகம், இயற்கைச் சீற்றங்கள் மற்றும் பேரிடர் காலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதுடன் பேரிடர் நிகழ்வுக்குப்பின் உடனடியாக மறுசீரமைப்பு பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசிற்கு சொந்தமான புறம்போக்கு நிலங்களை பாதுகாத்தல், கிராம ஆவணங்கள் மற்றும் கிராம கணக்குகளான, அடங்கல், சிட்டா, நில அளவீடு புத்தகம் பராமரித்தல் மற்றும் நிலவரி வசூல் செய்தல் ஆகியவை கிராம நிர்வாக அலுவலர்களின் மிக முக்கியப் பொறுப்புகள் ஆகும்.

## 2.2 வருவாய் நிர்வாக பணியாளரமைப்பு

வருவாய் நிர்வாகத்துறையில் துணையாட்சியர் பணி நிலை முதல் கிராம உதவியாளர் நிலை வரையுள்ள **50,000**–க்கும் மேற்பட்ட பணியிடங்கள் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை–2.1**
**வருவாய் நிர்வாக பணியாளரமைப்பு**

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | துணை ஆட்சியர் | 465 |
| 2. | வட்டாட்சியர் | 1,729 |
| 3. | துணை வட்டாட்சியர் | 1,890 |
| 4. | கண்காணிப்பாளர் /சுத்த நகல் கண்காணிப்பாளர்/ உதவி கணக்காளர் | 87 |
| 5. | உதவியாளர் (வருவாய் ஆய்வாளர் உட்பட) | 6,737 |
| 6. | இளநிலை உதவியாளர் | 3,019 |
| 7. | தட்டச்சர் / சுருக்கெழுத்து தட்டச்சர்/ காசாளர்/ தொலைபேசி இயக்குபவர் | 1,476 |
| 8. | ஓட்டுநர் | 948 |
| 9. | பதிவுரு உதவியாளர் / பதிவுரு எழுத்தர் / நகல் எடுப்பவர் | 790 |
| 10. | அலுவலக உதவியாளர் | 3,520 |
| 11. | காவலர் / மசால்சி / தோட்டக்காரர் / துப்புரவாளர் | 682 |
| 12. | கிராம நிர்வாக அலுவலர் | 12,616 |
| 13. | கிராம உதவியாளர் | 16,533 |
| | **மொத்தம்** | **50,492** |

## 2.3 நிர்வாக உள்கட்டமைப்பினை பலப்படுத்துதல்

மாவட்டத்தில் எளிதில் அணுகமுடியாத கிராமங்களில் வாழும் அடித்தட்டு நிலையில் உள்ள மக்களுக்கும் அரசின் சேவைகள் சென்றடைய வேண்டும் என்ற அடிப்படையில் நிர்வாக உள்கட்டமைப்பினை கீழ்க்கண்டவாறு பலப்படுத்த நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

### 2.3.1 ஆட்சி எல்லைகளை மறுசீரமைத்தல்/ வட்டங்களைப் பிரித்தல்

பொதுமக்கள் வட்டம் மற்றும் வருவாய் கோட்ட தலைமையிடங்களை எளிதில் அணுகும் பொருட்டும், அரசின் சேவைகளை விரைந்து பெறவும் புதிய வட்டங்கள் மற்றும் வருவாய் கோட்டங்களை அரசு உருவாக்கி வருகிறது.

அதன்படி, 2012–2013–ஆம் ஆண்டில் 9 வட்டங்களும், 2013–2014–ஆம் ஆண்டு 25 வட்டங்களும், 2014–2015–ஆம் ஆண்டு 15 வட்டங்களும், 2015–2016 –ஆம் ஆண்டு 16 வட்டங்களும் மற்றும் 2016–2017–ஆம் ஆண்டில் 5 வட்டங்களுமாக என மொத்தம் 70 வட்டங்களும், 9 வருவாய் கோட்டங்களும் 2011–2017 வரை புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது தமிழ்நாட்டில் 32 மாவட்டங்களும், 85 வருவாய் கோட்டங்களும், 290 வருவாய் வட்டங்களும், 1,189 குறுவட்டங்களும், 16,682 வருவாய் கிராமங்களும் உள்ளன.

## அட்டவணை–2.2
## மாவட்டங்களில் உள்ள வருவாய் கோட்டங்கள், வட்டங்கள், குறு வட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்களின் விவரங்கள்

| வ. எண். | மாவட்டம் | வருவாய் கோட்டங்களின் எண்ணிக்கை | வட்டங்களின் எண்ணிக்கை | குறுவட்டங்களின் எண்ணிக்கை | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | அரியலூர் | 2 | 4 | 15 | 175 |
| 2. | சென்னை | 2 | 10 | 40 | 55 |
| 3. | கோயம்புத்தூர் | 3 | 10 | 38 | 295 |
| 4. | கடலூர் | 3 | 10 | 32 | 883 |
| 5. | தருமபுரி | 2 | 7 | 23 | 470 |
| 6. | திண்டுக்கல் | 3 | 9 | 40 | 359 |
| 7. | ஈரோடு | 2 | 9 | 34 | 375 |
| 8. | காஞ்சிபுரம் | 4 | 13 | 68 | 1137 |
| 9. | கன்னியாகுமரி | 2 | 4 | 18 | 188 |
| 10. | கரூர் | 2 | 6 | 20 | 174 |
| 11. | கிருஷ்ணகிரி | 2 | 7 | 29 | 636 |
| 12. | மதுரை | 3 | 10 | 51 | 604 |
| 13. | நாகப்பட்டினம் | 2 | 8 | 31 | 523 |
| 14. | நாமக்கல் | 2 | 7 | 32 | 391 |
| 15. | பெரம்பலூர் | 1 | 4 | 11 | 152 |

| வ. எண். | மாவட்டம் | வருவாய் கோட்டங்களின் எண்ணிக்கை | வட்டங்களின் எண்ணிக்கை | குறுவட்டங்களின் எண்ணிக்கை | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 16. | புதுக்கோட்டை | 3 | 12 | 45 | 757 |
| 17. | இராமநாதபுரம் | 2 | 8 | 38 | 400 |
| 18. | சேலம் | 4 | 13 | 44 | 631 |
| 19. | சிவகங்கை | 2 | 9 | 39 | 521 |
| 20. | தஞ்சாவூர் | 3 | 9 | 50 | 754 |
| 21. | நீலகிரி | 3 | 6 | 15 | 54 |
| 22. | தேனி | 2 | 5 | 17 | 99 |
| 23. | தூத்துக்குடி | 3 | 9 | 41 | 468 |
| 24. | திருச்சிராப்பள்ளி | 4 | 11 | 43 | 502 |
| 25. | திருநெல்வேலி | 3 | 15 | 60 | 559 |
| 26. | திருப்பூர் | 3 | 9 | 33 | 350 |
| 27. | திருவள்ளூர் | 4 | 12 | 54 | 706 |
| 28. | திருவண்ணாமலை | 2 | 11 | 52 | 1064 |
| 29. | திருவாரூர் | 2 | 8 | 28 | 500 |
| 30. | வேலூர் | 3 | 13 | 53 | 841 |
| 31. | விழுப்புரம் | 4 | 13 | 56 | 1459 |
| 32. | விருதுநகர் | 3 | 9 | 39 | 600 |
| | **மொத்தம்** | **85** | **290** | **1189** | **16682** |

### 2.3.2 அலுவலகக் கட்டடங்களை மேம்படுத்துதல்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சிறந்த செயல்பாட்டினை மேம்படுத்தும் பொருட்டு மாவட்ட ஆட்சியர் நிலை முதல் கிராம நிர்வாக அலுவலர் நிலை வரை அனைத்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களுக்கும் தேவைப்படும் அலுவலக கட்டடங்கள், குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

2011 முதல் 2017 வரை தஞ்சாவூர், கடலூர், திருப்பூர், இராமநாதபுரம், கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு ரூ.180 கோடி மதிப்பீட்டில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

2011 முதல் 2017 வரை ரூ.8 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தாம்பரம், திருவள்ளூர் மாவட்டத்தில் அம்பத்தூர், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஸ்ரீரங்கம், புதுக்கோட்டை மாவட்டத்தில் இலுப்பூர், திருப்பூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை,

கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் ஆகிய 6 வருவாய் கோட்டங்களுக்கு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.28 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் குடியிருப்பு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மேலும், ரூ.182 கோடி மதிப்பீட்டில் 79 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்ட அரசால் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், ரூ.2 கோடி மதிப்பீட்டில் ஈரோடு மாவட்டத்தில், பெருந்துறை வட்டத்திற்கு பழைய வட்டாட்சியர் அலுவலக கட்டடத்திற்கு பதிலாக புதிய கட்டடம் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

நடப்பு ஆண்டு 2017–2018–இல் ரூ.82 கோடி மதிப்பீட்டில் புதிய குடியிருப்புடன் கூடிய 31 வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் ரூ.11 கோடி மதிப்பீட்டில் சென்னை மாவட்டத்தில் எழும்பூர் மற்றும் தண்டையார்பேட்டை, கோயம்புத்தூர் மாவட்டத்தில் கோயம்புத்தூர் (வடக்கு), மதுரை மாவட்டத்தில் மேலூர், விருதுநகர் மாவட்டத்தில்

சாத்தூர் என **5** புதிய குடியிருப்புடன் கூடிய கோட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், **2011–2017** முடிய ரூ.**8** கோடி மதிப்பீட்டில் **54** புதிய குடியிருப்புடன் கூடிய வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள் மற்றும் ரூ.**15** கோடி மதிப்பீட்டில் **231** புதிய கிராம நிர்வாக அலுவலகங்கள் கட்டுவதற்கு அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் உள்ள அனைத்து கிராம நிர்வாக அலுவலகங்களையும் புணரமைக்கும் நோக்குடன் **8,000** கிராம நிர்வாக அலுவலகங்களுக்கு தலா ரூ.**50,000/–** வீதம் ரூ.**40** கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

## 2.4 நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

வருவாய் நிர்வாக ஆணையகரத்தில் தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்ட கீழ்காணும் சட்டங்களான புதைபொருள் சட்டம் **1878**, வெடிபொருள் சட்டம் **1884**,

பிறப்பு மற்றும் இறப்பு சட்டம் 1969, வருவாய் வசூல் சட்டம் 1864, தமிழ்நாடு அடகு கடைக்காரர்கள் சட்டம் 1943, தமிழ்நாடு அளவு கடந்த வட்டி விதிப்பதை தடைச் செய்யும் சட்டம் 2003, பொது கட்டடங்கள் உரிமச் சட்டம் 1965 மற்றும் வழக்கு மன்றக் கட்டணம் ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

### 2.4.1 நில வருவாய்

நிலவருவாய், மண்ணின் வகைப்பாடு, பாசன வசதி மற்றும் நிலத்தின் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது.

வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்கள் பரப்பளவு பின்வருமாறு

| நிலவகைபாடு | பரப்பளவு |
|---|---|
| நஞ்சை நிலங்கள் | 1 6,57,676 ஹெக்டேர் |
| புஞ்சை நிலங்கள் | 67,80,080 ஹெக்டேர் |

அரசாணை (நிலை) எண்.544, வருவாய்[வ.நி.1(1)] துறை, நாள் 20.10.2010–இன்படி தமிழ்நாட்டிலுள்ள

பலவகையான நிலங்களுக்கு கீழ்க்கண்டவாறு நிலவரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

| வ. எண். | விவரம் | தொகை / ஹெக்டேர் |
|---|---|---|
| 1. | புஞ்சை நிலத்திற்குத் தீர்வை | ரூ.5/– |
| 2. | நஞ்சை நிலத்திற்குத் தீர்வை | ரூ.12/– |
| 3. | ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து அனுபவித்து வருபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் ஆக்ரமணத் தீர்வை | ரூ.12/– |
| 4. | பட்டா ஒன்றுக்கு குறைந்தபட்ச கேட்புத் தொகை | ரூ.1/– |

வருவாய்த் தீர்வாய நிகழ்வின் மூலம் அனைத்து வருவாய் கணக்குகளும் தணிக்கைச் செய்யப்படுகின்றன. நிலவருவாய் ஒவ்வொரு பசலி வருடமும், ஜுலை 1–ஆம் தேதி முதல் ஜுன் 30 வரை வசூலிக்கப்படுகிறது. 1425 பசலி வருடத்தில் (2015–2016), நிலுவை நிலவரியினையும் சேர்த்து மொத்த நிலவரி ரூ.12.35 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. அரசாணை

(நிலை) எண்.6, வருவாய்[பே.மே.3(1)]துறை, நாள் 10.01.2017–இன்படி வறட்சி காரணமாக (சென்னை தவிர) 31 மாவட்டங்களிலும் 1426 பசலி வருடத்திற்கான நிலவரி முழுமையாக தள்ளுபடி செய்ய ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**2.4.2 சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்**

சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரை பாதுகாப்பதற்காக சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டங்களின் மூலமாக ஆதரவற்ற ஏழை, வயது முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள், விதவைகள், வேளாண் தொழிலாளர்கள், விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்கள் ஆகியோர் பயனடைந்து வருகின்றனர். சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ.1000/– வழங்கப்பட்டு வருகிறது.

**மத்திய அரசு கீழ்காணும் ஓய்வூதிய திட்டங்களுக்கு பகுதியாக நிதி வழங்குகிறது.**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தகுதிக்கான நிர்ணயம் | மத்திய அரசின் பங்களிப்பு |
|---|---|---|---|
| **1.** | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | **60** முதல் **79** வயது வரை | **ரூ.200** |
| | | **80** வயது மற்றும் அதற்கு மேல் | **ரூ.500** |
| **2.** | இந்திராகாந்தி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | **18** முதல் **79** வயது வரை | **ரூ.300** |
| **3.** | இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | **40** முதல் **79** வயது வரை | **ரூ.300** |

ஓய்வூதியத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகை **2017–18–**ஆம் ஆண்டிற்கு ரூ.**3,929** கோடியாக உயர்ந்துள்ளது. **31.03.2017** அன்று **29,75,885** பயனாளிகள் கீழ்காணுமாறு பயன் பெற்று வருகின்றனர்.

## அட்டவணை–2.3
## சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்திட்டங்களின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் விவரம்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை 31.03.2017 வரை |
|---|---|---|
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 13,04,357 |
| 2. | இந்திராகாந்தி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 56,217 |
| 3. | இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 5,28,794 |
| 4. | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | 2,18,572 |
| 5. | ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம் | 4,17,564 |
| 6. | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம். | 3,10,514 |
| 7. | ஆதரவற்ற/ கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 1,14,248 |
| 8. | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணம் ஆகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 21,141 |
| 9. | இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம். | 4,478 |
| | **மொத்தம்** | **29,75,885** |

தேசிய சமூக உதவித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் மூன்று ஓய்வூதிய திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெற கீழ்கண்டவாறு தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நிபந்தனைகள் |
|---|---|---|
| 1. | இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசிய திட்டம். | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 60 வயது அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும். |
| 2. | இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 40 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும். விதவையாக இருத்தல் வேண்டும். |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நிபந்தனைகள் |
|---|---|---|
| 3. | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | ➢ வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ ஊனம் நிலை 80% மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும். |

தமிழ்நாடு அரசின் முழு நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தபடும் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய திட்டங்களின் கீழ் பயன்பெற கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மாற்றம் செய்யப்பட்ட நிபந்தனைகள் |
|---|---|---|
| 1. | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | ➢ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ ஊனம் நிலை 40% மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.<br>➢ அசையா சொத்தின் மதிப்பு ரூ.50,000/–க்குள் இருத்தல் வேண்டும். |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மாற்றம் செய்யப்பட்ட நிபந்தனைகள் |
|---|---|---|
| 2. | ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம் | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும். விதவையாக இருத்தல் வேண்டும்.<br>➢ அசையா சொத்தின் மதிப்பு ரூ.50,000/–க்குள் இருத்தல் வேண்டும். |
| 3. | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம். | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருத்தல் வேண்டும்.<br>➢ அசையா சொத்தின் மதிப்பு ரூ.50,000/–க்குள் இருத்தல் வேண்டும். |
| 4. | ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும். |

| **வ. எண்** | **திட்டத்தின் பெயர்** | **மாற்றம் செய்யப்பட்ட நிபந்தனைகள்** |
|---|---|---|
| | | ➢ சட்ட பூர்வமாக விவாகரத்து அல்லது குறைந்தது **5** ஆண்டுகள் கணவனால் கைவிடப்பட்டவராக இருத்தல் வேண்டும் அல்லது நீதிமன்றத்திலிருந்து சட்டப்பூர்வமாக பிரிவுச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.<br>➢ அசையா சொத்தின் மதிப்பு ரூ.**50,000/–**க்குள் இருத்தல் வேண்டும். |
| **5.** | **50** வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ **50** வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ திருமணமாகாத பெண்ணாக இருத்தல் வேண்டும்.<br>➢ அசையா சொத்தின் மதிப்பு ரூ.**50,000/–**க்குள் இருத்தல் வேண்டும். |

பயனாளிகளின் நலனை கருத்திற்கொண்டு, தகுதியான ஆதரவற்ற ஏழைகள் அனைவரும் பயனடையும் வகையில், 1962–ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணை, ஏப்ரல் 2015–இல் திருத்தப்பட்டு ஆதரவற்றோருக்கான நிபந்தனைகளை தளர்த்தி, 20 வயதிற்கு மேற்பட்ட மகன், பேரன் இல்லாத பட்சத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழும் அசையா சொத்தின் மதிப்பு ரூ.50,000/– மிகாமல் இருந்தால் ஓய்வூதியம் பெறும் வகையில் அரசாணை வெளியிடப்பட்டது. அரசாணை எண்.27, சமூகப் பாதுகாப்பு மற்றும் சத்துணவுத் [ச.ந–6(1)] திட்டத்துறை, நாள் 22.02.2016–இன்படி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியம் பெற ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கியும் ஊனத்தின் தன்மை 60 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக குறைத்தும் மாற்றுத்திறனாளிக்கான ஓய்வூதியம் வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது.

#### 2.4.2.1 வங்கிகள் மூலமாக ஓய்வூதிய தொகைகளை வழங்குதல்

உயிர் புள்ளி அட்டையைப் பயன்படுத்தி, பயனாளிகளை உறுதி செய்து வங்கிகள் மூலம் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்களை வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. தற்போது அனைத்து பயனாளிகளுக்கும் வங்கி கணக்கு மூலம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

### 2.4.3 பயனாளிகளுக்கான விலையில்லா வேட்டி சேலை வழங்குவது

ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகையின் போது சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளில் ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்படுகிறது.

#### 2.4.3.1 பயனாளிகளுக்கான அரிசி வழங்குதல்

இத்திட்டங்களின் கீழ் உள்ள பயனாளிகளுக்கு கீழ்க்கண்டவாறு விலையில்லா அரிசி வழங்கப்படுகிறது.

(i) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் ஒரு முறை 4 கிலோ வீதம் சன்ன ரக அரிசி.

(ii) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் ஒரு முறை 2 கிலோ வீதம் சன்ன ரக அரிசி.

### 2.4.4 விபத்து நிவாரணத் திட்டம்

44 வகையான தொழில்களில் ஈடுபட்டுள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பத்தைச் சார்ந்த வருமானம் ஈட்டும் பிரதான நபர் விபத்தின் மூலம் மரணமடையும் போது வாரிசுதாரருக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகையினை ரூ.15,000/–லிருந்து ரூ.20,000/–ஆக உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

### 2.4.5 நலிந்தோர் நிவாரணத் திட்டம்

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களில் இயற்கை மரணமடையும் பொருளீட்டக்கூடிய குடும்பத் தலைவரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு

வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை ரூ.10,000/–லிருந்து ரூ.20,000/–ஆக உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

### 2.4.6 விலையில்லா வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கும் திட்டம்

தமிழக அரசு, கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதற்காகவும், கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைக்காக விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தினை 1983–ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்களால் தொடங்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2017–ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு விலையில்லா வேட்டிகளும் சேலைகளும் பயனாளிகளுக்கு வழங்குவதற்காக **ரூ. 486** கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பொங்கல் 2017–ஆம் ஆண்டிற்கு 164 இலட்சம் விலையில்லா சேலைகளும் 164 இலட்சம்

விலையில்லா வேட்டிகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 2.5 அடித்தட்டு மக்களை சென்றடையும் திட்டங்கள்

தொலைதூரத்திலும் மற்றும் குக்கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு அரசின் சேவையினை மக்களை தேடிச் சென்று சேரும் வகையில் பின்வரும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

### 2.5.1 மக்கள் தொடர்பு முகாம்

**மாவட்டத்திலுள்ள அனைத்து உட்கடை கிராமங்களில் வாழும்** மக்களும் பயன்பெறும் வகையில், மக்கள் தொடர்பு முகாம் திட்டமானது தொடங்கப்பட்டு, ஒவ்வொரு மாதத்தின் இரண்டாம் புதன்கிழமை அன்று நடத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர் தலைமையில் பல்வேறு துறைத் தலைவர்களுடனான குழு, முகாம் நடைபெறும் கிராமங்களுக்கு சென்று மனுக்களைப் பெற்று மக்களின் குறைகளுக்கு தீர்வு காண்பதோடு மட்டுமல்லாமல் இதர அரசு சேவைகளும் இந்த முகாம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

மக்கள் தொடர்பு முகாம், மேலும் பயனுள்ளதாகச் செயல்படுத்த அரசாணை (நிலை) எண்.244, வருவாய் [வநி.3(2)]துறை, நாள் 8.8.2011–இன் படி கீழ்க்கண்ட அலுவலர்களை உள்ளடக்கிய குழுவினை மாவட்ட ஆட்சியர் நியமிக்கிறார்.

1) தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்)
2) வருவாய் கோட்டாட்சியர்
3) மாவட்ட ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மற்றும்
4) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்

மேற்கண்ட அலுவலர்கள் அடங்கிய குழு மாதத்தின் மூன்றாவது புதன்கிழமை முகாம் நடைபெற இருக்கும் கிராமத்திற்கு சென்று மனுக்களை பெறுகின்றனர். அவ்வாறு பெறப்படும் மனுக்கள் சம்மந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு மனுதாரர்களுக்கு அம்முகாம் நடைபெறும் நாளன்று முடிவான பதில் வழங்கப்படுகிறது.

முதியோர் ஓய்வூதிய ஆணைகள், வீட்டு மனைப்பட்டாக்கள் மற்றும் பட்டா மாறுதல் தொடர்பான ஆணைகள் முகாம் நடைபெறும் நாளன்றே வழங்கப்படுவது பொதுமக்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது.

**2.5.2 அம்மா திட்டம்**

அரசின் நலத்திட்டங்கள் மற்றும் நிவாரண உதவிகள் மக்களுக்கு சென்றடைய ஏதுவாக ‘‘அம்மா திட்டம்’’ (அனைத்து கிராமத்திலும் அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவையை வழங்கல்) (“AMMA Thittam” Assured Maximum service to Marginal people in All villages) **24.02.2013** முதல் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையால் நடைமுறைபடுத்தப்பட்டு, ஒவ்வொரு வெள்ளிக்கிழமை அன்றும் வட்டாட்சியர் தலைமையிலான குழு முன்னரே அறிவிக்கப்பட்ட கிராமங்களில் மக்களின் இருப்பிடங்களுக்கு நேரிடையாக சென்று அவர்களின் குறைகளை தீர்ப்பதோடு மட்டுமல்லாமல் அரசால்

அறிவிக்கப்படும் மக்கள் நல திட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகிறது.

அம்மா திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக, மிகச்சிறந்த ஆளுமைக்கான விருது (Best practices Award for Improvement of quality Delivery Systems Ensuring Good Governance) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் **15.08.2013**–இல் வழங்கப்பட்டது. மேற்கண்ட முகாம்களில் கிராமப் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் முதியோர் ஓய்வூதியம், குடும்ப அட்டை திருத்தங்கள், பட்டா மாறுதல்கள், சான்றிதழ்கள், திருமணமாகாத பெண்களுக்கான உதவித்தொகை போன்ற சேவைகள் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கு மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஒருங்கிணைப்பு அலுவலராகவும், மாநில அளவில் இணை ஆணையர் (வருவாய் நிர்வாகம்) ஒருங்கிணைப்பாளராகவும் செயல்படுகின்றனர். இத்திட்டத்தில் **24.02.2013** முதல் **31.03.2017** வரை

**58.48** இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு **58.34** இலட்சம் மனுக்களின் மீது தீர்வு காணப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை அனைத்து கிராமங்களிலும் நிறைவேற்றவும், பல்வேறு அரசு திட்டங்களை பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்தவும் சில்லறை செலவினமாக முகாம் ஒன்றிற்கு ரூ.**5,000/–** அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

### 2.5.3 பள்ளிகள் மூலமாக மாணவர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் மூலம் பள்ளி சேர்க்கை மற்றும் உதவித்தொகை பெறுவதற்கும் வருமானச்சான்றிதழ், சாதிச்சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ்கள் ஆகிய சான்றிதழ்களும் பள்ளிகள் மூலமாக மாணவ/ மாணவியர்களுக்கு வழங்கப்படுகின்றன.

நடப்பு **2016–2017–**ஆம் கல்வியாண்டில் மேற்குறிப்பிட்ட சான்றிதழ்கள் இணையதளம் மூலம் செயல்படுத்தப்பட்டு **31.03.2017** வரை **1,21,708** வருமானச் சான்றிதழ்களும் **1,64,575** சாதிச் சான்றிதழ்களும், மற்றும்

1,35,834 இருப்பிடச் சான்றிதழ்களும், ஆக மொத்தம், 4,22,117 சான்றிதழ்கள் பள்ளிகள் மூலம் மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 2.6 தகவல் தொழில்நுட்பம் மூலம் சிறந்த சேவைகளை வழங்குதல்

### 2.6.1 துணை ஆட்சியர்களுக்கு கைப்பிடி கணினிகள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் குறுவட்ட ஆய்வாளர்களுக்கு மடிக்கணினி, அச்சுப்பொறி மற்றும் பயிற்சி வழங்குதல்

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி ரூ.2.35 கோடி செலவில் 462 துணை ஆட்சியர்களுக்கு கை மடிக்கணினிகள் வாங்குவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மடிக்கணினி, அச்சுப்பொறி மற்றும் கணினி பயிற்சி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டது. அதன்படி, 8,751 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மடிக்கணினி, அச்சுப்பொறி வழங்கவும் மற்றும் கணினிப் பயிற்சி அளிக்கவும் ரூ.25.79 கோடி செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 3,865

கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மடிக்கணினி, அச்சுப்பொறி மற்றும் கணினிப் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாவட்டங்களில் உள்ள அனைத்து குறுவட்ட வருவாய் ஆய்வாளர்களுக்கும் மடிக்கணினிகள் வழங்கப்பட்டு கணினிப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

### 2.6.2 வட்ட அலுவலகங்களில் குறைதீர்க்கும் தகவு மையம் (TOPMS)

அரசாணை (நிலை) எண்.29, வருவாய்த் [வ.நி–3(2)] துறை, நாள் 13.01.2016–இன்படி அனைத்து வட்டாட்சியர், கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் பெறப்படும் பொதுமக்களின் குறை தீர்வு மனுக்களின் நிலை அறியவும், அம்மனுக்களுக்கு தீர்வு காணவும் மாநில அளவில் வலைத்தளம் அடிப்படையிலான பயன்பாட்டு மென்பொருள் ஒன்று Taluk Online Petition Monitoring System (TOPMS) அனைத்து வட்டங்களிலும் தொடங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நடைமுறை இணையதளம் மற்றும் குறுஞ்செய்தி மூலம் வட்ட

அலுவலகங்களில் பெறப்படும் மனுக்களின் நிலை அறிய வழிவகை செய்கிறது. **31.03.2017** வரை மாநில அளவில் **3,95,131** மனுக்கள் பெறப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது.

### 2.6.3 மின் ஆளுமை திட்டத்தின் கீழ் சான்றிதழ்கள் வழங்குதல்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் மின் ஆளுமை திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு விரைவாகவும், எளிதிலும், சிறப்பான சேவை அளிக்கும் வகையில், மாநிலம் முழுவதும் **10,809** அரசு பொது சேவை மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் பல்வேறு சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்களை, எங்கிருந்தும் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மின்னனு திட்டத்தின் கீழ் வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ் மற்றும் கணவரால் கைவிடப்பட்டபெண் சான்றிதழ் கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் விரைவில் பரிசீலிக்கப்பட்டு, பொதுமக்களின் வசதிக்காக மின்னணு பரிமாற்றம் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் கூர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. 2016–2017–ஆம் ஆண்டில் மின் ஆளுமை முறையின் கீழ் மொத்தம் 67,21,206 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 2.7 தேசிய மக்கள் தொகை பதிவேடு–உயிர் புள்ளியியல் பதிவு செய்தல்

உயிர் புள்ளியியல் பதிவு செய்யும் பணியில், (5 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட) ஒவ்வொரு தனி நபரின் புகைப்படம், கைரேகைப் பதிவுகள் மற்றும் விழித்திரை படல அமைப்பு (உயிர் புள்ளியியல்) ஆகியவை பல்வேறு கட்டங்களாக பதிவு செய்யப்படுகிறது. இப்பணியானது மாநில ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில் முதன்மைச் செயலர்/ வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இதுவரை 7.35 கோடி நபர்களுக்கு உயிர் புள்ளியியல் கணக்கெடுப்பு பதிவு பணி செய்யப்பட்டு, 6.86 கோடி நபர்களுக்கு தனித்துவ அடையாள எண் (ஆதார் எண்) வழங்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது 0–5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு உயிர் புள்ளியியல்

கணக்கெடுப்பு பணி **10.03.2017** முதல் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலமாக தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

## 2.8 பேரிடர் மேலாண்மை

புவியியலில் தமிழகத்தின் அமைப்பானது புயல், வெள்ளம், சுனாமி, மின்னல், வறட்சி போன்ற இயற்கை பேரிடர்கள் தமிழகத்தில் ஏற்பட இயல்பாகவே வழிவகுக்கிறது. பேரிடர் மேலாண்மையானது தணித்தல், ஆயத்த நிலை, மீட்பு மற்றும் மறுகட்டமைப்பு போன்ற அனைத்து நிலைகளிலும் பல்வேறு இடர்களை எதிர்கொள்ளும் சிக்கலான சவாலான செயலாகும். பேரிடர்களை எதிர்கொள்வதற்கான திறன்களை மேம்படுத்துதல், மீட்பு மற்றும் பாதுகாப்பான இடங்களுக்கு மக்களை வெளியேற்றும் செயல்பாடுகளை வலிமைப்படுத்துதல், பாதிப்புக்கு இலக்காகக்கூடிய சமூகத்தினரையும் உள்ளடக்கிய அணுகுமுறையினை செயல்படுத்துதல், அவசர காலத்தில் நிர்வாகம் விரைந்து செயலாற்றுதலை உறுதிசெய்தல் மற்றும் அரசின் நடவடிக்கைகளில் சமூகத்தின் பங்கேற்பினையும்,

தொடர்புடைய பல்வேறு அமைப்புகளின் செயல்பாடுகளையும் ஒருங்கிணைத்தல் ஆகியவை பேரிடர் மேலாண்மையின் முக்கிய அம்சங்களாகும்.

மாநிலத்தில் ஏற்பட வாய்ப்புள்ள பல்வேறு வகையான இயற்கை சீற்றங்களை எதிர்கொள்ளுதல், அவை குறித்த முன்னெச்சரிக்கை, திறன்மேம்பாடு, நிவாரணம் மற்றும் மறுவாழ்வு பணிகள் ஆகியவற்றை மேற்கொள்வதும், பேரிடர் மேலாண்மை குறித்த கொள்கைகளை வகுப்பதும் வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் துயர் தணிக்கும் ஆணையகரத்தின் பொறுப்பாகும். மேலும் பல்வேறு இயற்கைச் சீற்றங்களின்போது ஏற்படும் அபாயங்களை குறைப்பது தொடர்பாக அரசு துறைகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் பேரிடர் முன் தடுப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான வழிகாட்டுதலையும் இவ்வாணையரகம் வழங்குகிறது.

### 2.8.1 அமைப்பு முறை

மாநில அளவில் பேரிடர் மேலாண்மை சார்ந்த பணிகளை மேற்கொள்வது மாநில பேரிடர் மேலாண்மை

ஆணைக்குழுவின் பொறுப்பாகும். இவ்வாணைக் குழுவின் பணிகளை, மாநில நிவாரண ஆணையர், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை, மாவட்ட நிர்வாகங்கள் மற்றும் பிறத் துறைகள் மூலமாக மேற்கொள்கின்றார். மாநில மற்றும் மாவட்ட அளவிலான அமைப்பு முறைகள் குறித்து கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

### 2.8.1.1 மாநில பேரிடர் மேலாண்மை ஆணைக்குழு

பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக மாநில பேரிடர் மேலாண்மை ஆணைக்குழு மாண்புமிகு முதலமைச்சர் தலைமையின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:—

- மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்
- தலைமைச் செயலாளர்
- வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை செயலாளர்
- நிதித் துறை செயலாளர்
- உள் துறை செயலாளர்

- வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர்
- அண்ணா பல்கலைக்கழக பேரிடர் மேலாண்மை மற்றும் தணிப்பு மையத்தின் இயக்குநர், சென்னை
- இந்திய தொழில்நுட்ப கழகத்தின் கட்டட பொறியியல் துறையின் தலைவர், மெட்ராஸ்.

இக்குழுவானது மாநிலத்தில் பேரிடர் அபாய மீட்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதும், பேரிடர் தணிப்பு, ஆயத்தநிலை, இடர்காலங்களில் செயலாற்றுதல், மீட்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகளை வழிநடத்தி மேற்பார்வையிடும் பணிகளையும் மேற்கொள்கிறது.

மேலும், மாநில பேரிடர் மேலாண்மை திட்டம் மற்றும் மாவட்ட பேரிடர் மேலாண்மை திட்டங்களுக்கு தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைக்குழு வழிகாட்டுதலின்படி ஒப்புதல் அளிக்கிறது.

### 2.8.1.2 மாநில செயலாக்க குழு

மாநில பேரிடர் மேலாண்மை ஆணைக்குழுவிற்கு உதவும் வகையில் தமிழக அரசின் தலைமைச் செயலாளரை தலைவராகவும், நிதித்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, பொதுப்பணித் துறை,

நெடுஞ்சாலைத்துறை, உள்துறைகளின் செயலாளர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு மாநில செயலாக்கக்குழு அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி, குழுவின் கூட்டத்தில் மாநில நிவாரண ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொள்வார். மாநில அளவிலான பேரிடர் மேலாண்மை திட்டங்களை செயல்படுத்துவதும், பேரிடர் மேலாண்மை நிவாரண நிதியை கையாள்வதும் அது குறித்து மாநில அரசுக்கு ஆலோசனைகள் வழங்குவதும் மாநில செயலாக்க குழுவின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். இக்குழு பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் உடனடி நிவாரண பணிகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அதிகாரம் பெற்றுள்ளது.

**2.8.1.3 மாநிலஅறிவுரைக் குழு**

தொலை உணர்வு, தகவல் தொடர்பு வலை, வானிலை முன்னறிவிப்பு, தரைத்தள போக்குவரத்து பொறியியல், நகர்புற குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர், பொது சுகாதாரம், ஊரகப் பகுதி குடிநீர் விநியோகம்,

கடல் அறிவியல், வானவியல் மற்றும் பருவமாற்றம், நெடுஞ்சாலை, தொழில் துறை பாதுகாப்பு மற்றும் சுகாதார நிபுணர், பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து, பெட்ரோலியம் மற்றும் வெடிபொருள் பாதுகாப்பு, வன பாதுகாப்பு மற்றும் காட்டுத் தீ, வெள்ளம் மற்றும் பாசன மேலாண்மை, மின்சார பரிமாற்றம், நீர்வள மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய துறை வல்லுநர்களை கொண்ட மாநில அறிவுரைக் குழு, மாநில நிவாரண ஆணையர் தலைமையில் அமைக்கப்பட்டு, பேரிடர் அபாய குறைப்பு குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது.

### 2.8.1.4 தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை **09.01.2014** அன்று உருவாக்கப்பட்டு இம்முகமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தலைமையாக கொண்ட ஆட்சிக் குழுவால் வழி நடத்தப்படுகின்றது.

பல்வேறு பேரிடர் மேலாண்மைப் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில், மாநில பேரிடர்

மேலாண்மை முகமை மாநில பேரிடர் மேலாண்மை ஆணைக்குழுவின் செயலாக்க முகமையாக செயல்படுகின்றது. இம்முகமையில் வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் செயலாக்க குழுவின் தலைவராகவும் பேரிடர் மேலாண்மை இயக்குநர் நிருவாக தலைவராகவும் செயல்பட்டு வருகின்றனர்.

### 2.8.1.5 மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணைக்குழு

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர்களின் தலைமையில் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி, ஆணைக்குழுவானது மாநில பேரிடர் மேலாண்மை ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின்படி மாவட்ட அளவிலான பேரிடர் மேலாண்மை சார்ந்த திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் செயல்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

### 2.8.1.6 மாநில அவசர கட்டுப்பாட்டு மையம்

சென்னையில் மாநில அவசர கட்டுப்பாட்டு மையம் மாநில நிவாரண ஆணையரின் மேற்பார்வையின்கீழ்

செயல்படுகின்றது. மழை பொழிவு, புயல், வெள்ளம், வறட்சி மற்றும் நிலநடுக்கம் ஆகியவற்றின் முன்னறிவிப்பு மண்டல அலுவலகங்களான வானிலை ஆராய்ச்சி நிறுவனம் (IMD), மத்திய நீர் ஆணையம் (CWC), இந்திய பெருங்கடல் முன்னறிவிப்பு அமைப்பு (INCOIS) போன்றவற்றிலிருந்து பேரிடர் தொடர்பான முன்னறிவிப்புகளை பெற்று மாநில அளவில் பேரிடர் தொடர்பான தேடுதல், மீட்பு, நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு போன்ற பணிகளை ஒருங்கிணைத்து கண்காணிக்கும் மிக முக்கிய மையமாக இக்கட்டுப்பாட்டு மையம் விளங்குகின்றது. பேரிடர் காலங்களில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு துறைகளின் மூத்த அதிகாரிகளின் துணையோடு 24 மணி நேரமும் செயல்பட்டு, முன்னெச்சரிக்கை தகவல்களை மிகத் துரிதமாக பாதிக்கப்படக்கூடிய பகுதிகளுக்கு அனுப்புகின்றது. பொதுமக்கள் “1070” என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலம் இம்மையங்களை தொடர்புகொள்ள முடியும். மேலும் இம்மையம் மழைப்பொழிவு, புயல், வெள்ளம், வறட்சி மற்றும்

நிலநடுக்கம் குறித்த முன்னறிவிப்பு தகவல்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெற்று மாவட்ட நிர்வாகம், பல்வேறு துறைகள், மாநில அரசு மற்றும் மத்திய அரசு ஆகியவற்றிற்கு உடனுக்குடன் அனுப்புகின்றது.

**2.8.1.7 மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையம்**

இம்மையங்கள் மாவட்ட ஆட்சி தலைவரின் மேற்பார்வையின்கீழ் வட்ட மற்றும் கிராம அளவிலான பேரிடர் தொடர்பான தேடுதல், மீட்பு, நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு போன்ற பணிகளை ஒருங்கிணைத்து கண்காணிக்கும் மையங்களாக செயல்படுகின்றன. மழைப்பொழிவு, புயல், வெள்ளம், வறட்சி மற்றும் நிலநடுக்கம் தொடர்பாக மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்திலிருந்து பெறப்படும் தகவல்களை மாவட்டத்திலுள்ள மக்களுக்கு தெரிவிக்கின்றன. பின்னர், வட்ட அளவிலான பேரிடர் செயல்பாடுகளான தேடுதல், மீட்பு மற்றும் நிவாரண பணிகளை கண்காணித்து வரப்பெற்ற அறிக்கைகளை தொகுத்து வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையருக்கு அனுப்புகின்றன. பேரிடர் காலங்களில்

அனைத்துத் துறை அலுவலர்களுடன் இம்மையங்கள் 24 மணி நேரமும் செயல்பட்டு முன்னெச்சரிக்கை தகவல்களை உடனுக்குடன் அனுப்புகின்றன. “1077” என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலம் பொதுமக்கள் இம்மையங்களை தொடர்புகொள்ள முடியும்.

### 2.8.1.8 மாநில பேரிடர் மேலாண்மை திட்டம்

தமிழ் நாடு மாநில பேரிடர் மேலாண்மை திட்டம் தயார் செய்யப்பட்டு, மாநில பேரிடர் மேலாண்மை ஆணைக்குழுவால் 18.10.2016 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. மேற்படி திட்டத்தில், மாநிலத்தில் பல்வேறு பேரிடர்களால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகள் பற்றிய குறிப்புகள், பன்முனை உத்திகள், பல்வேறு துறைகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மற்றும் பேரிடர் மேலாண்மையின் செயல்பாடுகளை எவ்வாறு பல்வேறு துறைகளின் வளர்ச்சி திட்டங்களில் ஒருங்கிணைப்பது ஆகியன இடம்பெற்றுள்ளன. மேலும், பயனாளிகளின் ஆலோசனைகளுடன், சென்டாய் வரைவு திட்டத்துக்கு இணங்க, தொலைநோக்கு மாநில பேரிடர் மேலாண்மை

திட்டம் 2017 தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 2.8.1.9 மாவட்ட பேரிடர் மேலாண்மை திட்டம்

அனைத்து மாவட்டங்களிலும் 2016–ஆம் ஆண்டிற்கான மாவட்ட பேரிடர் மேலாண்மை திட்டம் தயாரிக்கப்பட்டது. மேலும், 2017–ஆம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான பேரிடர் மேலாண்மை திட்டத்தினை மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது. இத்திட்டத்தில் மாவட்டம் சார்ந்த பேரிடர் அபாய குறைப்பு நடவடிக்கைகளும், பேரிடர் பணிகளில் ஈடுபடும் நிறுவனங்களும் அவற்றின் பொறுப்புகளும் இடம் பெற்றுள்ளன.

## 2.9 வடகிழக்கு பருவமழை 2016–ஆயத்த பணிகள்

பேரிடர் மேலாண்மையில், ஆயத்த பணிகளை மேற்கொள்வது என்பது பேரிடர் மேலாண்மையின் முக்கிய கூறாக கருதப்படுகிறது. வடகிழக்கு பருவமழை காலத்தில், ஒரு புறம் கடும் புயல் மற்றும் கன மழை காரணமாக ஏற்படக்கூடிய வெள்ளப்பெருக்கு, மறுபுறம் பருவமழை பொய்த்தால் ஏற்படக்கூடிய வறட்சி

ஆகியவற்றை எதிர்கொள்ள **2016** செப்டம்பர் மாதத்திலிருந்தே முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

வடகிழக்கு பருவமழை **2016**–னை எதிர்கொள்ள மேற்கொண்ட ஆயத்த பணிகளின் முக்கிய நடவடிக்கைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

### 2.9.1 ஆயத்த கூட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகள்

1. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், அரசு செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்களுடன் இணைந்து பாதிப்பு ஏற்பட்ட மாவட்டங்களில் செய்யப்பட்ட முன்னேற்பாடுகளை ஆய்வு செய்து தக்க அறிவுரைகள் வழங்கினார்.
2. தமிழக அரசின் தலைமைச்செயலாளர் அவர்கள் தலைமையில் அனைத்துத் துறைகளின் ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெற்றது. மத்திய மீட்புப் படைகளை தயாராக வைக்கவும், நிவாரண முகாம்களை தயார்படுத்தவும் மற்றும் அனைத்து பிற பணிகளையும் குறுகிய காலத்திற்குள்

ஒருங்கிணைத்து செயல்படுத்தவும் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

3. வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் விரிவான அறிவுரைகள் அடங்கிய சுற்றறிக்கையை வெளியிட்டும், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் பிறதுறை அலுவலர்களுடனான நேரடி மற்றும் காணொலி காட்சி வாயிலான ஆய்வுக் கூட்டங்கள் நடத்தியும், மாநில நிவாரண ஆணையர் அவர்களால் ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.
4. வடகிழக்கு பருவமழையின் போது பாதிக்கப்பட வாய்ப்புள்ள பகுதிகளிலும் மற்றும் மாவட்ட அளவிலும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டதா என்பதை கண்டறிய விரிவான சரி பார்க்கும் பட்டியல் தயார் செய்யப்பட்டது.

### 2.9.2 கண்காணிப்பு நடவடிக்கைகள்

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில், அனைத்து மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆயத்த நடவடிக்கைகளை கண்காணிக்கவும் மற்றும்

தொடர்புடைய பல்வேறு துறைகளை ஒருங்கிணைக்கவும், மூத்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டனர்.

### 2.9.3 பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளை கண்டறிதல், வரைபடங்கள் உருவாக்கி, பாதிப்பின் தன்மையை ஆய்வு செய்தல்

மாநிலம் முழுவதும் அடிப்படை விவரங்கள் மூலமாக 4,192 பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள் கண்டறியப்பட்டு பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை–2.4**
**பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள்**

| வ. எண் | பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளின் வகைபாடு | பகுதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மிக அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள் | 572 |
| 2 | அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள் | 804 |
| 3 | மிதமான பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள் | 1,145 |
| 4 | குறைவான பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள் | 1,671 |
| | **மொத்தம்** | **4,192** |

ஒரு வரைபடத்திற்கு மூன்று ஊரக அல்லது நகர்புற பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள் என்ற விகிதத்தில் முறையே குறுவட்ட அல்லது வார்டு அளவில், பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளின் பாதிப்பின் தன்மை குறித்த ஆய்வு, மாற்று வழி மற்றும் நிவாரண மையங்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய வரைபடங்கள் தயார் செய்யப்பட்டன.

### 2.9.4 பல்துறை மண்டலக் குழுக்கள்

வருவாய் நிர்வாகம்மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையை தலைமையாகக் கொண்டு, காவல், தீயணைப்பு, ஊரக வளர்ச்சி, வேளாண்மை மற்றும் பிற துறை சார்ந்த அலுவலர்கள் அடங்கிய 498 மண்டல குழுக்கள் 5 முதல் 7 வரையிலான பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளை தீவிரமாக கண்காணிக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டன.

### 2.9.5 சமுதாய பங்களிப்பு

நல்ல உடல் திறன் கொண்ட நீச்சல் மற்றும் மரம் ஏறத் தெரிந்த 11,479 தன்னார்வலர்களை உறுப்பினர்களாக கொண்டு 1,499 முதல் நிலை மீட்புக்

குழுக்கள் மிக அதிக மற்றும் அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் (ஒரு பகுதிக்கு அதிகபட்சமாக 10 நபர்கள் வீதம்) ஏற்படுத்தப்பட்டு அடிமட்ட அளவிலான சமுதாய பங்களிப்பு உறுதிப்படுத்தப்பட்டது. இக்குழு உறுப்பினர்களுக்கு தீயணைப்பு மற்றும் மீட்புப்படை, மாநில பேரிடர் மீட்புப்படை மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

முதல் நிலை மீட்புப் பணியாளர்கள் மற்றும் பாம்பு பிடிப்பவர்கள் அடங்கிய ஒரு நடமாடும் குழு வட்டாரம், வட்டம், கோட்டம் மற்றும் மாவட்ட அளவில் தேவை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டது.

### 2.9.6 மீட்புக் குழுவினரை ஆயத்த நிலையில் வைத்திருத்தல்

பேரிடர்களால் பாதிக்கப்பட வாய்ப்புள்ள பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரண பணிகளை விரைந்து மேற்கொள்ளும் பொருட்டு மீட்பு குழுக்கள் மற்றும் நிவாரண பொருட்களை ஆயத்த நிலையில் வைக்கும் வகையிலான திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

### 2.9.7 மாநில பேரிடர் மீட்பு படையினை வலிமைப்படுத்துதல் மற்றும் மத்திய, மாநில முகமைகளை ஒருங்கிணைத்தல்

கடந்த ஆண்டு **100** நபர்களை மட்டுமே கொண்டிருந்த மாநில பேரிடர் மீட்புப் படையானது, இவ்வாண்டு **1,275** நபர்களுக்கு (ஒவ்வொரு கடலோர மாவட்டத்திலும் **70** முதல் **80** வரை) கூடுதலாக பயிற்சியளித்து மேலும் வலுப்படுத்தப்பட்டது. பேரிடர் காலத்தில் மீட்பு படையினர் மற்றும் நிவாரண பொருட்கள் விரைவில் பாதிக்கப்பட்ட பகுதிகளை சென்றடைவதற்கு ஏதுவாக போக்குவரத்து தடையின்றி செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், பல்வேறு மாநில மைய அரசு மீட்பு படைகள் ஒருங்கிணைந்து செயல்படவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

### 2.9.8 பேரிடர் மேலாண்மையில் பல்வேறு அமைப்புகளின் பங்களிப்பு

பேரிடர் மேலாண்மை தொடர்பாக தனியார் நிறுவனங்களிடையே விழிப்புணர்வை உருவாக்கும் வகையில், மாநில மற்றும் மாவட்ட அளவில்

மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், தொலைதொடர்பு நிறுவனங்கள் மற்றும் எண்ணெய் நிறுவனங்களுடன், பேரிடர் அபாயங்களை குறைக்கும் நோக்கோடு அத்தகைய நிறுவனங்களின் உத்திகளை மேம்படுத்தும் வகையிலும், அவசர காலங்களில் 24 மணி நேரமும் அவர்களது சேவையை உறுதி செய்யும் வகையிலும் தொடர் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

### 2.9.9 பல்வேறு வகையிலான தகவல் தொடர்புகள்

பத்திரிக்கைகள், மின்னணு, சமூக ஊடகம் மற்றும் கம்பியில்லா தகவல் தொடர்புகள் போன்ற பல்வேறு வகையிலான தகவல் தொடர்புகள் மூலமாக பேரிடர்களின் போது செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவை தொடர்பாக பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

### 2.9.10 பேரிடர் தணிப்பு நடவடிக்கைகள்

பேரிடர்களால் ஏற்படும் அபாயத்தை தணிக்கும் வகையில், சிறப்பு முயற்சியாக 22,899 குளங்கள், 11,446 கி.மீ நீளமுள்ள ஆற்றுப்படுகைகள் மற்றும் கால்வாய்கள்

தூர்வாரப்பட்டன. நீர் நிலைகளில் கண்டறியப்பட்ட **14,112** ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன. நிலத்தடி நீர் மட்டத்தை மேம்படுத்தும் வகையில், **6,960** நீர் செறிவூட்டும் அமைப்புகள் உருவாக்கப்பட்டன. பயன்பாடற்ற **8,657** ஆழ்துளை கிணறுகள் நிலத்தடி நீர் செறிவூட்டும் அமைப்புகளாக மாற்றப்பட்டன. **15,870** பாலங்கள் மற்றும் **1,41,633** சிறு பாலங்களின் இருபுறமும் **500** மீட்டர் தூரத்திற்கு நீர்ப்போக்கிற்கு தடையாக இருந்த அடைப்புகள் நீக்கப்பட்டன.

### 2.10 வார்தா புயல்

வார்தா புயல் **12.12.2016** அன்று தமிழகத்தை கடுமையாக தாக்கியது. வார்தா புயலின் கோர தாண்டவத்தால் குறிப்பாக, கடலோர மாவட்டங்களான சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்கள் கடும் பாதிப்பிற்குள்ளாகின. இம்மாவட்டங்களில் வார்தா புயலால் பசுமையான மரங்கள் வேறோடு சாய்ந்தது மட்டுமல்லாமல் உட்கட்டமைப்பு வசதிகளும் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகின. குறிப்பாக மின்சார உட்கட்டமைப்புகள் பழுதடைந்ததால் மேற்கண்ட

மாவட்டங்கள் இருளில் தத்தளித்தன. இருந்த போதிலும் அரசின் சீரிய முயற்சியால் மேற்கண்ட மாவட்டங்கள் மிக குறுகிய காலத்தில் இயல்பு நிலைக்கு திரும்பின.

### 2.10.1 வார்தா புயலின் போது எடுக்கப்பட்ட ஆயத்த மற்றும் மீட்பு நடவடிக்கைகள்

**2015** வெள்ளம் உட்பட கடந்த காலங்களில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் வார்தா புயலினை திறம்பட எதிர்கொள்ள, தேவையான ஒருங்கிணைந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவற்றின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு

- இந்திய வானிலை ஆய்வு மையத்தால் **07.12.2016** அதிகாலை **5.30** மணிக்கு வெளியிடப்பட்ட செய்தி அறிவிப்பில் வங்கக்கடலில் விசாகப்பட்டினத்திற்கு அருகில் ஓர் புயல் மையம் உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. எனினும், **11.12.2016** அன்று காலை **5.30** மணிக்கு தான் இந்திய வானிலை ஆய்வு மையம் மேற்படி புயலானது தனது தடத்தை மாற்றி, வட தமிழ்நாட்டிற்கும், தென்

ஆந்திரப்பிரதேசத்திற்கும் இடையே சென்னைக்கு அருகில் **12.12.2016** அன்று கரையை கடக்க வாய்ப்புள்ளதாக தெரிவித்தது. இருப்பினும், டிசம்பர் **8–**ஆம் தேதி முதற்கொண்டே பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகங்கள் புயலினை எதிர்கொள்ளும் வகையில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

- மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டனர்.
- ‘‘வார்தா’’ புயல் தொடர்பான தகவல்கள் தொலைக்காட்சி, வானொலி மற்றும் செய்தித்தாள்கள் மூலம் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், புயல் பற்றிய கள நிலவரம், பாதிக்கப்படக்கூடிய பகுதிகள், நோய் தடுப்பு நடவடிக்கைகள் போன்றவை உடனுக்குடன் பொது மக்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. மேலும், அவ்வப்போது பொது மக்களுக்கு புயலின்போது செய்ய

வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை குறித்து தொலைக்காட்சியில் சுருள் செய்திகள் (SCROLL NEWS) மற்றும் குறும்படம் மூலம் தொடர்ச்சியாக அறிவுரைகள் வெளியிடப்பட்டன.

- புயலினால் பாதிக்கப்பட வாய்ப்புள்ள பகுதிகளில் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏதுவாக தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையின் 700 பணியாளர்களுடன், 4 மாநில பேரிடர் மீட்புக் குழுக்கள், 6 தேசிய பேரிடர் மீட்புக் குழுக்கள் மற்றும் ராணுவ வீரர்களை உள்ளடக்கிய 2 குழுக்கள் ஆகியவை முன்கூட்டியே நிலைநிறுத்தப்பட்டன.
- மீட்பு குழுவினருடன் படகுகளும், தகுந்த மீட்புக் கருவிகளும் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளுக்கு முன்கூட்டியே அனுப்பி வைக்கப்பட்டன.
- விழுப்புரம் மாவட்டத்தின் கடலோர வட்டங்கள் மற்றும் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களிலுள்ள கல்வி நிறுவனங்களுக்கு டிசம்பர் 12 முதல் 14 வரை விடுமுறை அளிக்கப்பட்டது.

- அனைத்து தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு விடுமுறை அளித்து, வீட்டிலேயே தங்களது பணியினை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.
- காற்றின் வேகம் 120 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என்ற முன்னறிவிப்பினை தொடர்ந்து உயிர் இழப்புகளை தடுக்கும் பொருட்டு மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

### 2.10.2 வார்தா புயலின் பாதிப்புகள்

"வார்தா" புயல் சென்னையை கடந்தபோது பெருமளவிலான சேதத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக மின்சார உட்கட்டமைப்புகள் மோசமாக பாதிக்கப்பட்டதால் சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்கள் இருளில் மூழ்கின. மேலும், வழிநெடுகிலும் இருந்த பல்லாயிரக்கணக்கான மரங்கள் புயலின் தாக்கத்தினால் வேரோடு சாய்ந்ததில் சாலைப் போக்குவரத்து தடைப்பட்டது. வார்தா புயலின் சேதாரம் குறித்த பட்டியல் பின்வருமாறு:

## அட்டவணை–2.5
### பாதிப்புகள் குறித்த விவரம்

| வ. எண் | பொருள் | விவரம் |
|---|---|---|
| 1. | கடுமையாக பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் | 3 |
| 2. | பாதிக்கப்பட்ட பிற மாவட்டங்கள் | 4 |
| 3. | பாதிக்கப்பட்ட வருவாய் கிராமங்கள் | 3357 |
| 4. | மனித இழப்பு | 25 |
| 5. | கால்நடைகள் இழப்பு | 854 |
| 6. | கோழிகள் இழப்பு | 53009 |
| 7. | முழுவதும் சேதமடைந்த குடிசைகள் | 2940 |
| 8. | பகுதி சேதமடைந்த குடிசைகள் | 68482 |
| 9. | பகுதி சேதமடைந்த மண் சுவர் வீடுகள் | 8274 |
| 10. | முழுவதும் சேதமடைந்த மண் சுவர் வீடுகள் | 4 |
| 11. | பயிர் இழப்பு (இலட்சம் ஹெக்டேரில்) | 0.59 |
| 12. | கீழே விழுந்த மின்கம்பங்கள் | 46000 |
| 13. | பழுதடைந்த பகிர்வு மின்மாற்றிகள் | 800 |
| 14. | பொது மற்றும் தனியார் பகுதிகளில் கீழே விழுந்த மரங்கள் (இலட்சத்தில்) | 1.5 –க்கு மேல் |
| 15. | பாதிக்கப்பட்ட சாலைகளின் நீளம் (கி.மீ.) | |
| | அ. நெடுஞ்சாலைத் துறை சாலைகள் | 513.90 |
| | ஆ. சென்னை மாநகராட்சி சாலைகள் | 414.50 |
| | இ. நகராட்சி சாலைகள் | 92.92 |
| | ஈ. பேரூராட்சி சாலைகள் | 18.99 |
| | உ. கிராம சாலைகள் | 801 |
| 16. | பழுதடைந்த பாலங்கள் மற்றும் சிறுபாலங்கள் | 234 |

### 2.10.3 வார்தா புயல் தொடர்பான நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள்

“வார்தா”புயலால் தாக்குதலுக்குள்ளான மூன்று மாவட்டங்களிலும் 104 நிவாரண மையங்களில் 13,578 நபர்கள் 3 நாட்களுக்கு தங்க வைக்கப்பட்டனர். புயலின் போது உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு ரூபாய் ஒரு கோடி கருணைத் தொகையாக (Gratuitous Relief) வழங்கப்பட்டது.

மேலும், கால்நடைகள் மற்றும் பறவைகள் உயிரிழப்பிற்கு 1.94 கோடியும், சேதமடைந்த குடிசைகள் மற்றும் வீடுகளுக்கு ரூ.33.89 கோடியும் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. புயலினால் சேதமடைந்த வேளாண் பயிர்களுக்கென ரூ.46.19 கோடியும், தோட்டக்கலை பயிர்களுக்கென ரூ.10.80 கோடியும் இடுபொருள் மானியமாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசு வார்தா புயலால் ஏற்பட்ட சேதங்களை தற்காலிகமாக சீரமைக்கவும், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அரசாணை (நிலை) எண்.298, வருவாய்த்துறை, நாள் 14.12.2016 மற்றும் அரசாணை நிலை எண்.307, வருவாய்த்துறை நாள் 29.12.2016-இன்படி முறையே ரூ.500 கோடி மற்றும்

ரூ.**85.45** கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்தது. இதில் பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரங்கள் பின்வருமாறு :

**அட்டவணை–2.6**

**பல்வேறு துறைகளுக்கான நிதி ஒதுக்கீடு**

| வ. எண். | துறையின் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் | 350.00 |
| 2. | சென்னை பெருநகர மாநகராட்சி | 75.00 |
| 3. | திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்கள் | 36.98 |
| 4. | வேளாண்மைத் துறை | 46.19 |
| 5. | நெடுஞ்சாலை துறை | 25.00 |
| 6. | மீன்வளத் துறை | 19.13 |
| 7. | தோட்டக்கலைத் துறை | 10.80 |
| 8. | பொதுப்பணித்துறை (கட்டடங்கள்) | 7.00 |
| 9. | காவல் (போக்குவரத்து) துறை | 5.00 |
| 10. | சுகாதாரத்துறை | 3.00 |
| 11. | வனத்துறை | 2.50 |
| 12. | தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை | 2.35 |
| 13. | போக்குவரத்து துறை | 2.00 |
| 14. | ஆவின் நிறுவனம் | 0.50 |
| | **மொத்தம்** | **585.45** |

- புயல் காற்றினால் சாலைகளில் விழுந்த மரங்களை அகற்றிட சென்னை பெருநகர மாநகராட்சி, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சார்ந்த **23,300** பணியாளர்களுடன் புயலால் பாதிக்கப்படாத இதர மாவட்டங்களிலிருந்து **450** மரம் அறுக்கும் எந்திரங்கள், **250** ஜே.சி.பி எந்திரங்கள், **350** லாரிகளுடன் கூடுதலாக **4,000** பணியாளர்களும் வரவழைக்கப்பட்டனர். மேலும், இப்பணியில் தேசிய பேரிடர் மீட்பு படை, மாநில பேரிடர் மீட்பு படைகளின் **11** குழுக்கள் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்பு பணி துறையின் **2,500** பணியாளர்கள் மற்றும் **3,000** சிறப்பு காவல் படையினர் ஈடுபடுத்தப்பட்டனர்.
- புயலினால் பாதிக்கப்பட்ட மின் விநியோகத்தை சீரமைக்கும் பணியில் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளைச் சேர்ந்த **6,000** பணியாளர்களுடன் பிற மாவட்டங்களை சார்ந்த **6,700** பணியாளர்கள், பிற மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட **2,000** பணியாளர்களும் ஈடுபடுத்தப்பட்டனர்.

- நோய்கள் பரவுவதை தடுக்கும் பொருட்டு குப்பைகளை அகற்றவும் மற்றும் குப்பைகள் தேங்குவதை தவிர்க்கவும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து துப்புரவு பணியாளர்கள் வரவழைக்கப்பட்டனர்.
- இந்த பெருமுயற்சிகளின் காரணமாக சாலைகளில் விழுந்த பல்லாயிரக்கணக்கான மரங்கள் உடனடியாக அகற்றப்பட்டு அன்றிரவே போக்குவரத்து சீரமைக்கப்பட்டது. பெருமளவில் சேதமடைந்த மற்றும் அறுந்து விழுந்த உயர் மின் அழுத்த, தாழ்மின் அழுத்த கம்பிகள் மற்றும் துணை மின்நிலையங்கள் போர்க்கால அடிப்படையில் சீரமைக்கப்பட்டு மின்சார விநியோகம் படிப்படியாக மிகக் குறுகிய காலத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் மீண்டும் துவக்கப்பட்டது.

பேரிடர் மீட்பு நடவடிக்கைகளை பல்வேறு அரசு துறைகளின் பங்களிப்புடன், உயர்மட்ட அளவில் கண்காணிப்பு பணியினை மேற்கொண்டதாலும் மிக

குறுகிய காலத்தில் தமிழகம் இயல்பு நிலைக்கு திரும்பியது.

### 2.10.4 மத்திய அரசிடமிருந்து கோரப்பட்ட நிவாரண உதவித் தொகை

தமிழகத்தில் "வார்தா" புயலால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு உடனடி நிவாரணம் வழங்கிடவும் மற்றும் தற்காலிக சீரமைப்புக்காகவும் ரூ.**1,972.89** கோடி தொகையும், உள்கட்டமைப்புகளை நிரந்தரமாக சீர்செய்ய ரூ.**20,600.37** கோடியும், ஆக மொத்தம் ரூ.**22,573.26** கோடி வழங்கக் கோரி மத்திய அரசுக்கு கோரிக்கை மனு சமர்ப்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தேசிய பேரிடர் நிவாரண நிதியின் கீழ், மத்திய அரசு ரூ.**264.11** கோடி ஒப்பளிப்பு செய்தது. இதில், மாநில பேரிடர் நிவாரண நிதியில் ஏற்கனவே இருப்பில் உள்ள ரூ.**45.35** கோடி சமன் செய்யப்பட்டு, நிகரமாக ரூ.**218.76** கோடி நிவாரண தொகையாகப் பெறப்பட்டது.

**2.11 வறட்சி 2016–2017**

தமிழ்நாட்டின் சராசரி ஆண்டு மழை பொழிவான **920.9** மி.மீ–இல் கடந்த **2016**–ஆம் ஆண்டில் **42** சதவீதம் குறைவாக **539.3** மி.மீ மழை மட்டுமே பெய்தது. **2016**–ஆம் ஆண்டு தென்மேற்கு பருவமழையின்போது சராசரி மழையளவைவிட **20%** குறைவாகவும், வடகிழக்கு பருவமழையின்போது சராசரி மழைப்பொழிவைவிட **62%** குறைவாகவும் மழைபொழிவு கிடைக்கப்பெற்றது.

வடகிழக்கு பருவமழை பொய்த்ததன் காரணமாக பயிர்கள் பாதிப்படைந்திருந்தது கள ஆய்வு அறிக்கைகளின்படி தெரிய வந்ததும், **28.12.2016**–இல் வெளியிடப்பட்ட மத்திய அரசின் திருத்தப்பட்ட வறட்சி மேலாண்மை கையேடு–**2016**–இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி வறட்சி நிலை மதிப்பீடு செய்யப்பட்டது. இதில் வறட்சியினை நிர்ணயிக்கும் கட்டாயக் குறியீடுகளும் மற்றும் தாக்கக் குறியீடுகளும் அனைத்து மாவட்டங்களிலும் வறட்சி நிலை நிலவுவதை உறுதி செய்ததால், கடந்த ஜனவரி **3**–ஆம் நாள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நடத்திய வறட்சி நிலை குறித்த ஆய்வு கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் அடங்கிய சிறப்பு குழுக்கள் மூலம் மாவட்டந்தோறும் வறட்சி குறித்த நேரடி பயிர் ஆய்வு (Ground Truthing) மேற்கொள்ள ஆணையிடப்பட்டது. அதன்படி இக்குழுக்கள் **05.01.2017** முதல் **08.01.2017** வரை அனைத்து மாவட்டங்களிலும் ஆய்வு செய்து அரசுக்கு **09.01.2017** அன்று அறிக்கை அளித்தனர்.

அதன் அடிப்படையில், அரசாணை (நிலை) எண். **6** வருவாய்த் துறை, நாள்: **10.01.2017**–இன்படி அனைத்து மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டவையாக அறிவிக்கப்பட்டன. அத்துடன், கீழ்க்கண்ட நிவாரணம் மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆணையிடப்பட்டது.

❖ சென்னை தவிர அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகள் செலுத்த வேண்டிய **1426–**ஆம் பசலி ஆண்டுக்குரிய நிலவரி முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

❖ கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள குறுகிய கால பயிர்க்கடன்கள் மத்திய கால பயிர்கடன்களாக மாற்றியமைக்க வழிவகை செய்யப்பட்டது.

❖ **33** சதவீதத்திற்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு, மாநில பேரிடர் நிவாரண நிதி வரையறைகளின்படி, இடுபொருள் மானிய நிவாரணத் தொகை வழங்க ரூ.**2,247/–** கோடி அனுமதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறு, குறு மற்றும் இதர விவசாயிகளின் எண்ணிக்கை, பாதிக்கப்பட்ட பயிர் பரப்பு மற்றும் இடுபொருள் மானிய நிவாரணத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரம் பின்வருமாறு.

## அட்டவணை–2.7
## சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்படும் நிவாரண தொகையின் விவரம்

| துறையின் பெயர் | சிறு மற்றும் குறு விவசாயிகள் | | | இதர விவசாயிகள் | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | பாதிக்கப்பட்ட பயிர் பரப்பு ஹெக்டேரில் (இலட்சத்தில்) | விவசாயிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | மாநில பேரிடர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (கோடியில்) | பாதிக்கப்பட்ட பயிர் பரப்பு ஹெக்டேரில் (இலட்சத்தில்) | விவசாயிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (கோடியில்) | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிவாரணத் தொகை (கோடியில்) |
| வேளாண் துறை | 14.18 | 25.38 | 1515.71 | 4.54 | 3.61 | 533.38 | 2049.09 |
| தோட்டக் கலைத்துறை | 1.22 | 2.76 | 146.43 | 0.41 | 0.50 | 50.46 | 196.89 |
| பட்டுப்புழு வளர்ச்சித் துறை | 0.01 | 0.02 | 0.77 | 0.004 | 0.007 | 0.32 | 1.09 |
| **மொத்தம்** | **15.41** | **28.16** | **1662.91** | **4.954** | **4.12** | **584.16** | **2247.07** |

➢ பிரதம மந்திரி புதிய பயிர்க் காப்பீட்டு திட்டத்தின் (PMFBY) கீழ் மாநில அரசின் பங்காக **428** கோடி

ரூபாய் **2016–17** ஆம் ஆண்டிற்கு அரசால் செலுத்தப்பட்டுள்ளது. இதனால் காப்பீடு செய்த விவசாயிகள் பயிர் பரப்பினை பொறுத்தும், பயிர் வகையினை பொறுத்தும் ரூபாய் **8,000/–** முதல் **50,000/–** ரூபாய் வரையில் இழப்பீட்டுத் தொகை பெற வழிவகை செய்யப்பட்டது.

- கால்நடை தீவனப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், கால்நடைகளுக்கு உலர்தீவனம் மற்றும் குடிநீர் தேவை பூர்த்தி செய்யும் வகையில் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து கால்நடை பராமரிப்புத்துறைக்கு ரூ.**26.91** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- குடிநீர் பற்றாக்குறையை போக்குவதற்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.**205** கோடி பல்வேறு துறைகளுக்கு கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

## அட்டவணை–2.8
## குடிநீர் வழங்கல் பணிகளுக்கு
## ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையின் விவரம்

| வ. எண் | துறையின் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1. | சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் | 65 |
| 2. | தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் | 45 |
| 3. | நகராட்சி நிர்வாகத் துறை | 65 |
| 4. | ஊரக வளர்ச்சித் துறை | 15 |
| 5. | பேரூராட்சித் துறை | 15 |
| | **மொத்தம்** | **205** |

- வறட்சி காரணமாக கிராமப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் **350** கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணையிடப்பட்டது.
- வறட்சி காரணமாக நகர்ப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில்,

நகராட்சி நிர்வாகம்மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் 160 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணையிடப்பட்டது.

- தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், 100 நாட்கள் பணி வரம்பு என்பது 150 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.
- கிராமப்புற விவசாயத் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையில் ரூபாய் 3,400 கோடி செலவில், ஏரிகள் தூர் வாருதல், குளங்கள் சீரமைத்தல் மற்றும் பாசன வாய்க்கால்கள் தூர்வாருதல் போன்ற பணிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டது.
- வறட்சி நிவாரண பணிகள் மேற்கொள்ளுவதற்கு மத்திய அரசிடம் தேசிய பேரிடர் நிவாரண நிதி தொகுப்பிலிருந்து ரூ. 39,565/– கோடி ஒதுக்கீடு

செய்யக்கோரி வறட்சி கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

- இதனைத் தொடர்ந்து மத்திய அரசு நிவாரண நிதியாக ரூ. **1,748.28/–** கோடி ஒதுக்கியது. இதில் மாநில பேரிடர் நிவாரண நிதியில் ஏற்கனவே இருப்பில் உள்ள தொகை ரூ.**300.29** கோடி சமன் செய்யப்பட்ட நிலையில் நிகர வறட்சி நிவாரணமாக ரூ.**1,447.99** கோடி பெறப்பட்டது.

### 2.11.1 விவசாயிகளுக்கான வறட்சி தணிப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள்

விவசாய நலன் சார்ந்த அரசு தென் மேற்கு பருவ மழை மற்றும் வட கிழக்கு பருவ மழை காலங்களில் மிக குறைவான மழை பொழிவு மற்றும் மேட்டூர் அணையின் மிக குறைவான தண்ணீர் கையிருப்பினை கருத்தில் கொண்டு கீழ்காணும் தணிப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டது.

**வேளாண்மைத்துறை**

- ரூ.**54.65** கோடி செலவில் ''குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம்'' மற்றும் ரூ.**64.30** கோடி நிதி

செலவில் "சம்பா சிறப்புத் தொகுப்புத் திட்டம்" தமிழக அரசு செயல்படுத்தியது.

- வறட்சி நிலையினால், தொடர்ந்து சம்பா பயிர்கள் மிகவும் பாதிக்கப்பட்டதால், பாதிப்புக்குள்ளாகிய பயிர்களைப் பாதுகாக்க, 7.57 இலட்சம் ஏக்கரில் பி.பி.எப்.எம் பாக்டீரியாவும், 7.82 இலட்சம் ஏக்கரில் பொட்டாசியம் குளோரைடும், தெளித்து நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- வறட்சியினால் பயிர் பாதிப்படைந்தால் விவசாயிகளுக்கு நிகழும் நிதி இழப்பிலிருந்து பாதுகாப்பதற்காக, பிரதம மந்திரியின் புதிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகளைப் பதிவு செய்வதற்கு தமிழக அரசு பல்வேறு முன்னேற்பாடுகளை காலத்தே மேற்கொண்டது. இதன் காரணமாக, சென்ற ஆண்டில் சுமார் 31 இலட்சத்து 83 ஆயிரம் ஏக்கரில் வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்த

15 இலட்சத்து 37 ஆயிரம் விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டார்கள். விவசாயிகளுக்கு காப்பீட்டு கட்டண மானியமாக, மாநில அரசு 428 கோடி ரூபாய் காப்பீட்டு நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது.

- 2017–2018–ஆம் ஆண்டில், பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், மொத்த சாகுபடி பரப்பில் 40 சதவீத பரப்பளவை காப்பீடு செய்து சுமார் 24 இலட்சம் விவசாயிகளைப் பதிவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதற்காக மாநில அரசின் காப்பீட்டு கட்டண மானியமாக ரூ.522.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.
- 60,000 ஏக்கர் பரப்பில், ரூ.50 கோடி மதிப்பீட்டிலான பயறுவகைப் பயிர்களுக்கான சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

- நீடித்த மானாவாரி பண்ணை முறையின் மூலம் விவசாயத்தை மேம்படுத்த **ரூ.802.90** கோடி விவசாய துறையின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கான விநியோகத் தொடரமைப்பு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

## 2.12 தேடுதல், மீட்பு மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள்

தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை வலுப்படுத்திட, தேடுதல், மீட்பு மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள், மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து கொள்முதல் செய்வதற்கு ரூ.**14.63** கோடி கீழ்க்கண்ட அரசு துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது : –

## அட்டவணை–2.9
## தேடுதல், மீட்பு மற்றும் தகவல் தொடர்பு சாதனங்களை வலுப்படுத்த துறைவாரியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரம்

| வ. எண் | அரசாணை எண் மற்றும் நாள் | துறைகள் | நிதி ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1. | அரசாணை (டி) எண் 503, வருவாய்த்துறை நாள்: 18.11.2016. | மீன்வளத்துறை | 1.83 |
| 2. | அரசாணை (டி) எண் 504, வருவாய்த்துறை நாள்: 18.11.2016. | காவல் துறை | 3.76 |
| 3. | அரசாணை (டி) எண் 539, வருவாய்த்துறை நாள்: 30.11.2016. | தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை | 7.12 |
| 4. | அரசாணை (நிலை) எண் 38, வருவாய்த்துறை நாள்: 09.02.2017. | காவல் துறை | 1.92 |
| | | **மொத்தம்** | **14.63** |

### 2.12.1 மாநில பேரிடர் நிவாரண நிதி

14–வது நிதி ஆணையத்தால் 2015–2016 நிதியாண்டு முதல் 2019–2020 நிதியாண்டு முடிய மாநில

பேரிடர் நிவாரண செலவினங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி குறித்த விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன: –

**அட்டவணை–2.10**
**மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையின் விவரம்**

| வருடம் | ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 2015 – 2016 | 679.00 |
| 2016 – 2017 | 713.00 |
| 2017 – 2018 | 748.00 |
| 2018 – 2019 | 786.00 |
| 2019 – 2020 | 825.00 |
| **மொத்தம்** | **3,751.00** |

## 2.13 கடலோர பேரிடர் அபாயம் குறைப்பு திட்டம்

தமிழக அரசானது உலக வங்கி நிதியுதவியுடன், மாநிலத்தில் உள்ள கடலோர மாவட்டங்களில் பேரிடர்களால் ஏற்படும் அபாயத்தினை குறைப்பதற்காக அவசர கால சுனாமி மறுசீரமைப்பு திட்டத்தின் தொடர்ச்சியாக கடலோர பேரிடர் அபாயம் குறைப்பு திட்டம், (Coastal Disaster Risk Reduction Project) என்ற புதிய திட்டத்தினை ரூ.**1,481.80** கோடி செலவில் தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கான

முக்கூட்டு ஒப்பந்தமானது உலக வங்கி, இந்திய அரசின் பொருளாதார விவகாரங்கள் துறை மற்றும் தமிழ் நாடு அரசு ஆகியவற்றிற்கிடையே **11.11.2013** அன்று புதுடெல்லியில் கையெழுத்தானது. மேற்படி, ஒப்பந்தத்தினை தொடர்ந்து இத்திட்டத்திற்காக அரசாணை **(நிலை)** எண்.**23,** வருவாய் [பே.மே.**–4(1)**] துறை, நாள் **21.1.2014** மூலம் ரூ.**1,481.80** கோடிக்கான நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

இயக்குநர், பேரிடர் மேலாண்மை இத்திட்டத்தின் திட்ட இயக்குநராகவும், வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் இத்திட்டத்திற்கான திட்ட ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டு வருகின்றனர். இத்திட்டத்தின் கூறுகள் பின்வருமாறு:–

| **வ. எண்** | **வகைப்பாடு** | **மொத்தம் (ரூ.கோடியில்)** |
|---|---|---|
| 1. | பேரிடர் அபாயம் குறைப்பு நடவடிக்கைகள் | **1,035.00** |
| 2. | நீடித்த மீன்வளத்துறை பணிகள் | **321.30** |
| 3. | பேரிடர் அபாய குறைப்பிற்கான திறன் வளர்ப்புப் பணிகள் | **52.50** |
| 4. | திட்ட செயல்பாட்டிற்கான தொகை | **73.00** |
| | **மொத்தம்** | **1,481.80** |

### 2.13.1 கடலோர பகுதிகளில் பேரிடர் அபாய குறைப்பு நடவடிக்கைகள்

இத்தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகள் குறித்து கீழே விவரிக்கப்பட்டுள்ளது

#### 2.13.1.1 பாதுகாப்பான வீடுகள் கட்டுதல் மற்றும் பாதுகாப்பான சாலைகள் அமைத்தல்: (ரூ. 310 கோடி)

கடலோர கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு பல்வேறு விதமான பேரிடர் பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பு வழங்கும் வகையில் **488** கடலோர கிராமங்களில் பேரிடரை தாங்கக்கூடிய **14,347** வீடுகள் கட்டி ஒப்படைக்கப்பட்டுள்ளன. பேரிடர் காலங்களில் கடற்கரை கிராமங்களில் வசிக்கும் மக்கள் பல்நோக்கு பாதுகாப்பு மையத்திற்கு எளிதில் சென்றடைய உதவும் வகையில் **143** இடங்களில் அறிவிப்பு பலகைகளுடன் கூடிய முறையான இணைப்பு சாலைகள் அமைத்து மக்களின் பயன்பாட்டிற்காக கொண்டு வரப்பட்டுள்ளன.

**2.13.1.2 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் கட்டுதல் (ரூ.345.60 கோடி)**

கடலோரத்தில் வாழ்ந்துவரும் மக்களை புயல் மற்றும் இதர வகை பேரிடர் காலங்களில் பாதுகாப்பான இடங்களில் தங்கவைப்பதற்காக கடலோர மாவட்டங்களில் 121 இடங்களில் தகுதியான நிலம் தேர்வு செய்யப்பட்டு பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் ரூ.345.60 கோடியில் பொதுப்பணித்துறையின் மூலம் கட்டப்பட்டு வருகின்றன. அதில் இதுவரை 109 கட்டடங்கள் (90%) கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 12 கட்டடங்களில் கட்டுமான பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

**2.13.1.3 முன்னெச்சரிக்கை கருவிகள் அமைத்தல் (ரூ. 50 கோடி)**

பேரிடர்கள் வருவதை முன்கூட்டியே அறிந்து பொதுமக்களுக்கு விரைவாக தகவல்கள் வழங்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை கருவி (EWS) அல்லது பேரிடர் குறித்த அறிவிப்பு கருவி (DWAS)ஒன்றினை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டு, அதன் மூலம்

கடற்கரையில் வாழும் சமூகத்தினருக்கு பேரிடர் குறித்த செய்திகளை முன்னெச்சரிக்கை செய்வதற்கு கட்டமைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முன்னெச்சரிக்கை அமைப்பானது ரூ. 50 கோடி செலவில் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமையின், திட்ட மேலாண்மை அலகு மூலம் செயலாக்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தினை செயல்படுத்துவதற்கு திட்ட மேலாளராக **எல்காட்** நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது.

### 2.13.1.4 நாகப்பட்டினம், கடலூர் மற்றும் வேளாங்கண்ணி நகரங்களில் தரைக்கு மேல் உள்ள மின் இணைப்புகளை பூமிக்கு அடியில் நிறுவுதல் (ரூ.360 கோடி)

2011 ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட தானே புயல் காரணமாக கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம் மாவட்டங்களில் பெரிய அளவில் மின் உள்கட்டமைப்புக்கள் பாதிப்புக்குள்ளாயின. எதிர்காலத்தில் இவ்வாறான பாதிப்புகளை தவிர்க்கும் விதமாக நாகப்பட்டினம், வேளாங்கண்ணி மற்றும் கடலூர் நகரங்களில் ஒரு முன்னோடி முயற்சியாக பூமிக்கு மேலுள்ள மின் இணைப்புக்களை பூமிக்கு கீழான

இணைப்புகளாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணியானது ரூ.360 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

### 2.13.2 நீடித்த மீன்வளம் (ரூ.321.30 கோடி)

தமிழ்நாட்டில் 2004–ஆம் ஆண்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவ மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிக்க தமிழக அரசால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பிரிவின் கீழ் இரண்டு வகை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன அவை:–

1. உள் கட்டமைப்புகளை மேம்படுத்துதல்
2. நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை (FIMSUL-II)

### 2.13.2.1 உள்கட்டமைப்புக்களை மேம்படுத்துதல்

இத்திட்டத்தின் குறிக்கோளானது, மீன்வளத் துறையின் கட்டமைப்புகளான மீன்பிடி துறைமுகம், மீன்கள் சேகரிக்கும் மையம் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் மேம்படுத்துதல் ஆகும்.

### 2.13.2.1 (அ) மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் சேகரிக்கும் மையங்களின் கட்டமைப்புகளை மேம்படுத்துதல்

இத்திட்டத்தின் கீழ் கீழ்கண்ட ஆறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

| வ. எண் | பணியின் வகைகள் | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1. | நாகை மாவட்டத்தில் மீன்பிடி துறைமுகங்களை மறுசீரமைப்பு செய்தல் மற்றும் நவீனப்படுத்துதல் | |
| | நாகை துறைமுகம் | 45.21 |
| | பழையார் துறைமுகம் | 32.22 |
| 2. | ஆற்றுமுகத்துவாரத்தை நிரந்தரமாக திறந்துவைத்தல் | |
| | உப்பனாறு முகத்துவாரம் | 8.03 |
| | வெள்ளாறு முகத்துவாரம் | 14.45 |
| 3. | புதிய மீன் இறங்குதளம் அமைத்தல் | |
| | நாகை மாவட்டம் நாகூர்கிராமம் | 12.99 |
| | கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை அன்னன்கோயில் | 18.91 |
| 4. | குழாய் பனிக்கட்டி இயந்திர நிலையம் சின்னமுட்டத்தில் கட்டுதல் (TUBE ICEPLANT) | 0.50 |
| 5. | தஞ்சாவூர் மாவட்டத்தில் மல்லிப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தை நவீனப்படுத்துதல் | 60.0 |
| 6. | தூத்துக்குடி மாவட்டத்தில் புன்னக்காயல் முகத்துவாரத்தை நிலைப்படுத்துதல் | 18.00 |

மீன்வளத்துறை மூலம் செயல்படுத்தப்படும் வரிசை எண் 1 முதல் 4 வரை உள்ள பணிகள் முடிவடைந்து பயன்பாட்டிற்கு வந்து விட்டன. வரிசை எண் 5–ல் உள்ள மல்லிபட்டினம் தொடர்பான அனைத்து 4 பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பரிசீலனையில் உள்ளது. வரிசை எண் 6–ல் உள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

**2.13.2.1 (ஆ) ஆழ்கடலில் மீனவர்களுக்கு தொலைத்தொடர்பு வசதி**

மீனவர்களின் பாதுகாப்பிற்காகவும், கடலில் மீன்வளத்தினை கண்டறிவதற்காகவும் மீனவர்களுக்கு கம்பியில்லா தொலை தொடர்பு வசதிகளும் ஏற்படுத்த உலக வங்கி ரூ.62.14 கோடி நிதி அளிக்க அனுமதித்துள்ளது.

**2.13.2.2 நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை (FIMSUL-II)**

மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்காக நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை திட்டம் 2

(FIMSUL–II) செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கடல் மீன்வளத்தை முழுமையான அளவில் பயன்படுத்தும் வகையில் கூட்டு மேலாண்மைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், பல்வேறு வாழ்வாதார தொழில்களில் மீனவர்களுக்கு பயிற்சி அளிக்கவும், சிறப்பான மேலாண்மை அணுகுமுறையுடன் வாழ்வாதாரத்திற்கான நிதி உதவியும் அளிக்கப்படுகிறது.

### 2.13.3 பேரிடர் அபாய மேலாண்மைக்கான திறன் வளர்ப்பு பணிகள்

இத்தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் குறித்து கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

#### 2.13.3.1 பள்ளி பாடத்திட்டத்தில் பேரிடர் மேலாண்மை

பேரிடர் மேலாண்மை குறித்து விழிப்புணர்வை பள்ளி மாணவர்களிடையே உருவாக்குவதற்காக 7–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு பாடத்திட்டங்களிலும் மற்றும் ஆசிரியர் பயிற்சி பாடத்திட்டத்திலும் பேரிடர் மேலாண்மை குறித்து பாடங்கள்

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இப்பணிக்காக ரூ.2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.13.3.2 சமுதாய அடிப்படையிலான பேரிடர் அபாய மேலாண்மை திட்டம்

பேரிடர் அபாயத்திற்குள்ளாகும் சமூகத்தினர் தங்களுக்குள் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கும், ஆங்காங்கே உள்ள உள்ளாட்சி அமைப்புகளுடன் சேர்ந்து பணியாற்றுவதற்கும் பேரிடர் அபாயத்தை குறைப்பதற்கும், நிவாரண பணிக்களுக்கும் உருவாக்கப்பட்டுள்ள உள்கட்டமைப்புக்களை சிறப்பாக பயன்படுத்தி கொள்வதற்கு தயார்படுத்தும் விதமாகவும் சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலம் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தினரால் (SIRD) ரூ.15 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் **2,67,317** நபர்களுக்கு பலவகையான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது.

### 2.13.3.3 ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரை மண்டலங்களின் மேலாண்மை திட்டம்

இயற்கை வளங்களை பாதுகாக்கவும் மற்றும் பயனுள்ள வகையில் பயன்படுத்தவும் ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரை பகுதிகள் மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரை பகுதிகள் குறித்த மேலாண்மை திட்டம் தயாரித்தல், பாதிப்புக்குள்ளாகக் கூடிய பகுதிகள் குறித்த வரைபடம் தயாரித்தல் மற்றும் தமிழ்நாடு கடற்கரை பகுதி மக்களுக்கு பயிற்சி திட்டம் தயாரித்தல் போன்ற பணிகள் சுற்றுச் சூழல்துறையினரால் ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இயக்குநர்,அண்ணா பல்கலைக்கழகம் இந்திய தொலை உணர்வு தொழில் நுட்ப பிரிவின் மூலம் உள்ளூர் அளவிலான ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரை பகுதிகளின் மேலாண்மை திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

கடலோர பேரிடர் அபாய குறைப்பு திட்டம் செயல்படுத்துவதன் மூலம் கடலோர மாவட்டங்களில் பேரிடர்களின் அபாயம் குறைவதுடன், கடலோர சமூகத்தின் பேரிடர்களை எதிர்கொள்ளும் திறன் மேம்படுத்தப்படும்.

## 2.14 பேரிடர் தணிப்புக்கான நீண்ட கால திட்டங்கள்

### 2.14.1 புதிய முயற்சிகள்

#### 2.14.1.1 விரிவான வெள்ளப் பாதுகாப்புத் திட்டம்

பேரிடர்களால் பாதிக்க வாய்ப்புள்ள கடலோர மாவட்டங்களில் வெள்ள பெருக்கு ஏற்படக்கூடிய 13 ஆற்றுப்படுகைகள் கண்டறியப்பட்டு அபாயத்தை குறைக்கும் வகையில் ஒருங்கிணைந்த வெள்ள பாதுகாப்பு திட்டம் தயார் செய்யப்படும் என்ற மாண்புமிகு தமிழக ஆளுநரின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.54.00 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. 8 மாவட்டங்களில் இத்திட்டம் தொடர்பான பணிகள் நடைபெற்று வருகிறது.

### 2.14.1.2 சென்னை பெரு நகரத்திற்கான நிகழ் நேர வெள்ள முன்னறிவிப்பு திட்டம்

தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதிச்சேவைகள் நிறுவனமானது (TNUIFSL) சென்னை பெருநகரத்தில் அடையாறு, கூவம், கொசஸ்தலையாறு மற்றும் கோவளம் ஆற்றுப்படுகைகளை உள்ளடக்கி, வெள்ள முன்னறிவிப்பு மற்றும் இடம் சார்ந்த திட்டமிடல் அமைப்பினை உருவாக்கிடவும், மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையத்துடன், சென்னை மாநகராட்சி, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரகங்களில் உள்ள கட்டுப்பாட்டு அறைகளை ஒருங்கிணைத்து வெள்ள முன்னறிவிப்புகளை நிகழ் நேர அடிப்படையில் (Real Time Basis) உடன் அளித்திட திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டமானது முன்னர் தெரிவிக்கப்பட்டுள்ள விரிவான வெள்ளப் பாதுகாப்பு திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்படும்.

### 2.14.1.3 குடிமராமத்து திட்டம் (பொதுப்பணித் துறை)

குடிமராமத்து திட்டம் ரூ.100 கோடி (2016–2017) மாநில நிதியின் கீழ் விவசாய பெரு மக்களின்

பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2017–2018 ஆண்டிற்கு ரூ.300 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.14.1.4 நீர் நிலைகள் தூர் வாரும் சிறப்பு திட்டம்**

வரும் காலங்களில் வறட்சியினை குறைப்பதற்காகவும் மற்றும் விவசாய நிலங்களின் வளத்தை செழிப்படைய செய்வதற்காகவும் தமிழக அரசு, நீர்தேக்கம், அணை, ஏரி, குளங்கள் போன்றவற்றில் உள்ள வண்டல் மண்ணை தூர்வார அனுமதி அளிப்பதற்கான ஒரு உன்னதமான திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் தங்கள் நிலங்களின் வளத்தை மேம்படுத்தவும் மற்றும் மகசூலை பெருக்கவும், வண்டல் மண் மற்றும் சவுடு ஆகியவற்றை இலவசமாக பெற மாவட்ட மற்றும் வட்ட நிர்வாகம்அனுமதி வழங்குகின்றது. இப்பணியானது, நீர் தேக்கம் மற்றும் அணைகளின் நீர் கொள்ளளவினை உயர்த்துவதற்கும், நிலத்தடி நீர் மட்டம் உயர்வதற்கும் வழிவகை செய்கிறது.

**2.14.1.5 பருவ கால மாற்றங்கள் ஏற்றுகொள்ளும் திட்டம்**

தமிழக அரசு, ஆசிய மேம்பாட்டு வங்கி மூலம் ரூ.960 கோடி நிதி பெறப்பட்டு பருவ கால மாற்றங்களை எதிர்கொள்ளும் வகையில் தொழில்நுட்ப உதவியுடன் டெல்டா மாவட்டங்களில் ஆற்று பாசனத்தை மேம்படுத்த துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. கடல் நீர் உட்புகுவதை தடுப்பதற்காக டெல்டா மாவட்டங்களின் கடைமடை பகுதிகளில் நீர் தேக்கங்கள் அமைக்கப்படும்.

**2.14.1.6 மானாவரி பண்ணை முறை**

அனைத்து மாவட்டங்களில் நிலையான புஞ்சை நில பண்ணை விவசாயத்தை மேம்படுத்த ரூ.802.90 கோடி விவசாய துறையின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1 பெருங்குழுவிற்கு 1000 ஹெக்டேர் வீதம், 1000 பெருங்குழுக்கள் அமைக்கப்பட்டு நீடித்த மானாவரி பண்ணை முறைகள் செயல்படுத்தப்படுகின்றன.

### 2.14.2 பேரிடர் அபாய குறைப்பிற்கு மேற்கொண்ட பிரதான தணிப்பு நடவடிக்கைகள்

தமிழக அரசு பேரிடர் அபாயங்களை குறைப்பதற்காகவும், மனித உயிர்களை பாதுகாப்பதற்காகவும் மற்றும் பொருளாதார இழப்பினை தடுப்பதற்காகவும் கீழ்கண்ட திட்டங்களை செயல்படுத்தியது.

#### 2.14.2.1 சுனாமி அவசர கால மறுவாழ்வுத் திட்டம்

சுனாமி அவசர கால மறுவாழ்வுத் திட்டம் (Emergency Tsunami Rehabilitation Project) ரூ.**1,852/–** கோடி உலக வங்கி நிதி உதவியுடன் **13** கடலோர மாவட்டங்களில் பழுதடைந்த குடியிருப்புகளை புனரமைப்பது, பேரிடர் பருவகாலங்களை தாங்கக்கூடிய வீடுகள் கட்டித்தருவது, பாதிப்படைந்த விளை நிலங்களை மீட்பது, மீன்பிடி தொழிலை வளப்படுத்துவது போன்ற பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

### 2.14.2.2 சுனாமி அவசர கால உதவி திட்டம்

சுனாமி அவசர கால உதவி திட்டம் (Tsunami Emergency Assistance Project) ரூ.629 கோடி ஆசிய மேலாண்மை வங்கியின் நிதி உதவியுடன் 13 கடலோர மாவட்டங்களில் மக்களின் வாழ்வாதாரங்களை மீட்டெடுப்பது, சாலைகள், பாலங்கள், துறைமுகங்கள் மற்றும் சிறு துறைமுகங்கள் போன்ற போக்குவரத்து தொடர்பான மேம்பாட்டு பணிகள் ஊரக மற்றும் நகராட்சி உள்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், திறன் வளர்ப்பு போன்ற பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 2.14.2.3 சுனாமிக்கு பிந்தைய நிலையான வாழ்வாதாரத் திட்டம்

சுனாமி பிந்தைய நிலையான வாழ்வாதாரத் திட்டம் (Post Tsunami Sustainable Livelihood Programme [IFAD]) ரூ.129 கோடி மேம்பாட்டிற்கான சர்வதேச நிதியத்தின் நிதியுதவியுடன் கடலோர மாவட்டங்களில் (காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம்,

திருவள்ளூர் மற்றும் கன்னியாகுமரி) குறுகிய மற்றும் நீண்டகால நிவாரணம், 1. சமூக வள மேலாண்மை, 2. சுய உதவிக் குழுக்களுக்கான சமூக நிறுவனங்களின் உதவி போன்ற சமூக வாழ்வாதாரங்களை மறுக்கட்டமைப்பது போன்றவற்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**2.14.2.4 கடலோர சமூக பாதிப்பு குறைப்புத் திட்டம்**

கடலோர சமூக பாதுகாப்புத் திட்டம் (Vulnerable Reduction to Coastal Communities) ரூ.1,959 கோடி உலக வங்கி நிதியுதவியுடன் 13 கடலோர மாவட்டங்களில் பொது உட்கட்டமைப்புகளை புனரமைப்பது உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2.14.2.5 ஒருங்கிணைந்த நவீன தற்கால விவசாயம் மற்றும் நீர்வள மேம்பாட்டு திட்டம் (IAMWARM)**

ஒருங்கிணைந்த நவீன தற்கால விவசாயம் மற்றும் நீர்வள மேம்பாட்டு திட்டம் (IAMWARM) ரூ.2,547/–

கோடி உலக வங்கி நிதியுதவியுடன் **31** மாவட்டங்களில் ஆற்றுப்பாசனம் அதனை சார்ந்த பகுதிகளில் உரிய பாசன நீர் ஆதார மேலாண்மை குறித்த நடவடிக்கை நான்கு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 2.14.2.6 ஒருங்கிணைந்த நீர் வடிகால் மேலாண்மை திட்டம்

ஒருங்கிணைந்த நீர் வடிகால் மேலாண்மை திட்டம் **26** மாவட்டங்களில் ரூ.**781.731** கோடி செலவில் இயற்கை வளங்களை திறன்மிகு நீர் வடிகால் மேலாண்மை மூலமாக நடுநிலை மற்றும் பொது நோக்குடன் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 3. நில நிர்வாகம்

### 3.1 முன்னுரை

நில நிர்வாக ஆணையரகம், முன்பு செயல்பட்டு வந்த வருவாய் வாரியத்திலிருந்து உருவாக்கப்பட்டு, முன்னாள் வருவாய் வாரியம் கவனித்து வந்த நிலம் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு **1980–**ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இத்துறை மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு நிலங்களையும் நிர்வகிப்பது, விவசாய நில ஒப்படை மற்றும் வீட்டுமனை ஒப்படை, நில மாற்றம், நில உரிமை மாற்றம், குத்தகை, ஆக்கிரமணங்களை அகற்றுதல் மற்றும் எஸ்டேட் ஒழிப்புச் சட்டத்தின்கீழான பல்வேறு சட்டங்களையும் கையாளுகிறது. மேலும், பொது நோக்கங்களுக்காகத் தேவைப்படும் தனியார் நிலத்தினைக் கையகப்படுத்தும் நில எடுப்பு நடவடிக்கைகளை மேற்பார்வையிடுகிறது. இதைத் தவிர, பதிவு மாற்ற நிகழ்வுகள் (பட்டா மாற்றம்) குறித்த முன்னேற்றத்தைக் கண்காணிப்பது மட்டுமின்றி, நத்தம் நிலவரித் திட்டம் மற்றும் நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உள்ள முறையீட்டு அதிகாரங்களையும்

ஆணையரகம் செயல்படுத்தி வருகிறது. மேலும், தொழில் நோக்கங்களுக்காக, பாசன நீரைப் பயன்படுத்துவதை ஒழுங்குபடுத்தும் பணி மற்றும் சிறு பாசன கணக்கெடுப்பு ஒருங்கிணைப்பு ஆணையரகமாகவும் செயல்பட்டு வருகிறது.

மேற்காணும் பணிகளை நிறைவேற்ற, நில நிர்வாக ஆணையருக்கு, மூன்று இணை ஆணையர்களும், ஐந்து உதவி ஆணையர்களும் துணை புரிகின்றனர். மாவட்ட அளவில் இப்பணிகள், மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் அவர்தம் பணியாளர்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 3.2. பட்டா மாறுதல்

பட்டா மாறுதல் சேவையானது, பொது மக்களைச் சென்றடைவதை நில நிர்வாக ஆணையரகம் கண்காணிக்கின்றது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் வாயிலாகவும் (RTR) சார்–பதிவாளர் அலுவலகங்கள் வாயிலாகவும் (STR) இச்சேவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### 3.2.1 இணையதள வழியிலான பட்டா மாறுதல்

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அவர்களின் **10.6.2011** நாளைய சட்டமன்றப் பேரவை அறிவிப்பிற்கிணங்க, அரசாணை (நிலை) எண்.**209**, வருவாய் [நிஅ**1(1)**] துறை, நாள் **9.7.2011**–இல் ஆணை வெளியிடப்பட்டு, கிராம நிர்வாக அலுவலர்கள் பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் பெறுவதற்கு ஏதுவாக வருவாய் நிலை ஆணை **31 (8)**–இல் தகுந்த திருத்தங்கள் செய்யப்பட்டன. பட்டா மாறுதல் குறித்தான விண்ணப்பங்களை, குறித்த காலத்தில், முறையாக பரிசீலனை செய்து, விரைவாக முடிவு செய்ய, அரசாணை (நிலை) எண்.**210**, வருவாய்[நிஅ**1(1)**]துறை, நாள் **8.7.2011**–இல் விரைவு பட்டா மாறுதல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வந்தது.

மேலும், பட்டா மாறுதல் குறித்த சேவைகள் பொதுமக்களை நேரடியாகச் சென்றடைவதற்கு ஏதுவாக, அரசாணை (நிலை) எண். **209** மற்றும் **210** ஆகியவற்றில் கண்டுள்ள முறைகளை மேலும் திருத்தியமைத்து, இணையதள வழியிலான பட்டா மாறுதல் முறையைச்

செயல்படுத்தும் வகையில், அரசாணை (நிலை) எண் 303, வருவாய் [(நிஅ–II(2)] துறை, நாள் 27.12.2016 வெளியிடப்பட்டது. இப்புதிய முறையின்கீழ், பொதுமக்கள் தங்களுக்கு அருகிலுள்ள பொது சேவை மையத்தில் இணைய தளத்தில், பட்டா மாறுதல் சேவைக்காக மனுச் செய்து கொள்ளலாம். அவர்களுக்கு உடனடியாக ஒப்புகைச் சீட்டு வழங்கப்படுகின்றது. தொடர்ச்சியாக, வட்ட அலுவலர்களால், இந்த பட்டா மாறுதல் கோரும் மனுமீது work-flow based system–இன்கீழ் இணையதள வழியாக தீர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. பட்டா மாறுதல் கோரும் மனுவின் மீதான நடவடிக்கையானது, குறுஞ்செய்தி (SMS) மூலமாக மனுதாரருக்கு அனுப்பப்படுகின்றது. இந்த கூடுதல் தொழில் நுட்ப வசதியைப் பயன்படுத்தி, மனுதாரர் சிட்டா நகலையும் “அ” பதிவேடு நகலையும் இணையதளம் வாயிலாக “எங்கிருந்து வேண்டுமாயினும் எந்நேரத்திலும்’ (‘‘anywhere any time”) என்ற அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி

எடுக்கப்படும் நகல்களில், இணையவழி கையொப்பம் மற்றும் சிறப்பு குறியீடு ("Quick Response"-QR code) இணைக்கப்பட்டு, இந்த ஆவணங்கள் சட்டப்பூர்வமாக ஆக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது மாநிலத்தில் **280** வட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய **5** வட்டங்களில் இத்திட்டமானது விரைவாக செயல்படுத்தப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இத்திட்டமானது பொது மக்களுக்கு பட்டா மாறுதல் வழங்கும் சேவையில் மிகுந்த வெளிப்படைத் தன்மையையும், நம்பகத் தன்மையையும் உறுதி செய்கிறது.

**2016–2017**–ஆம் ஆண்டில், விரைவு பட்டா மாறுதல் மூலமாக **49,716** பட்டா மாறுதல் ஆணைகளும், இணைய தளம் (ஆன்லைன்) மூலமாக **8,18,304** பட்டா மாறுதல் ஆணைகளும் வழங்கப்பட்டுள்ளன.

### 3.2.2 பத்திரப் பதிவுத் துறையுடன் பட்டா மாற்றம் குறித்த நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்

பத்திரப் பதிவுத் துறையில் மேற்கொள்ளப்படும் சொத்து பரிமாற்றங்கள் குறித்தான பதிவுகள் அனைத்தும் வருவாய் மற்றும் பேரிடர்

மேலாண்மைத்துறை ஆவணங்களில் பிரதிபலித்தால் மட்டுமே, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் பதிவுகள் நாளது தேதி வரையிலான விவரங்களைக் கொண்டனவாக அமையும். இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் விதமாக சார்–பதிவாளர் அலுவலகங்கள் மூலமாக விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. நிலம் தொடர்பான அனைத்துப் பதிவுகள் யாவும், ஒவ்வொரு வாரமும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு, இணையதள வழியாக வருவாய்ப் பதிவுகளில் (இணையதள Tamil Nilam land records database) நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் நில உரிமையாளர்கள் பட்டா மாறுதல் கோரி மீண்டும் மனுச் செய்வது தவிர்க்கப்படுகிறது. 2016–2017–ஆம் ஆண்டில், சார்–பதிவாளர் அலுவலகங்கள் மூலமாகப் பெறப்பட்ட 2,69,990 மனுக்களில் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளன. மேலும், இணையவழி பட்டா மாறுதல் தொடர்பாக, சார்–பதிவாளர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகத்திற்குமான ஒருங்கிணைப்பு

மென்பொருள் உருவாக்கப்பட்டு, 2017–2018–ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**3.3 அரசு நில விவர வங்கி**

மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு நிலங்கள் குறித்த ஒருங்கிணைந்த தகவல்தொகுப்பு சென்னையிலுள்ள மாநிலத் தகவல் தொகுப்பு மையத்தில் உருவாக்கப்பட்டு, பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் உள்ள அனைத்து அலுவலர்களும் மேற்படி தகவல் தொகுப்பிலுள்ள விவரங்களைச் சரிபார்த்து, அரசுத் துறைகளுக்கான நில மாற்றம் மற்றும் அரசு நிறுவனங்களுக்கான நில உரிமை மாற்றம் மேற்கொள்வதற்காக பயன்படுத்தப்படுகின்றன. தேசியத் தகவல் மையம் இத்திட்டத்திற்கான தொழில்நுட்ப உதவியினை நல்கி வருகிறது.

இத்தகவல் தொகுப்பின் அடிப்படையில், அரசு நில விவர பதிவேடு அச்சிடப்பட்டு, சீரிய முறையில் அரசு நிலங்களைப் பார்வையிடவும், பாதுகாக்கவும் அனைத்து

கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அரசு நிலங்களின் தற்போதைய நிலை குறித்து, கிராம நிர்வாக அலுவலர்களால் கடந்த செப்டம்பர்–அக்டோபர் 2016–ல் நேரடி கள ஆய்வுகள் மூலம் தற்போதைய நிலை குறித்த விவரங்கள் இப்பதிவேட்டில் குறிக்கப்பட்டுள்ளன. மேலும், ஒவ்வொரு வருவாய்த் தீர்வாயத்தின்போதும் (Jamabandhi), இப்பதிவேட்டில் உள்ள பதிவுகளை ஆய்வுக்குப் பின்னர் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறான பதிவுகள் மத்திய தகவல் தொகுப்பில் அரசு நிலங்கள் குறித்த தற்போதையத் தகவல்களைப் பிரதிபலிக்கும் வகையில் அமையும்.

### 3.4 தொன்மையான நில ஆவணங்களை கணினி மயமாக்குதல்

சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் வட்ட அலுவலகங்களில் உள்ள தொன்மை வாய்ந்த, மதிப்புமிக்க கோப்புகள், ஆவணங்கள் முதலியவைகளை எதிர்காலப் பயன்பாட்டிற்காகப் பாதுகாக்கும் பொருட்டு, முதன் முதலாக கணினி மயமாக்கல் நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இத்திட்டமானது ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறையில் பாதுகாக்கப்பட்டுவரும் முதன்மை நிலவரித்திட்ட பதிவேடுகள் (Original Settlement Registers), திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள தொன்மை வாய்ந்த, மதிப்பு மிக்க கோப்புகள், ஆவணங்கள் முதலியவை கணினி மயமாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் வாயிலாக, இதுவரையில் **11.95** இலட்சம் பக்கங்கள் கொண்ட பழைய நில ஆவணங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில், ஆணையரகத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் **1,01,361** பக்கங்கள் கொண்ட அனைத்து மாவட்டங்களைச் சார்ந்த மறு நிலஅளவைப் பதிவேடுகள் (Re-Settlement Register) இத்திட்டத்தின்கீழ் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. இப்பணியானது, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஆவணங்களை வரும் ஆண்டில் தொடர்ச்சியாக கணினி மயமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 3.5 வீட்டுமனை ஒப்படை

ஏழை மக்கள் வீடின்றி இருக்கக் கூடாது என்பதே தமிழக அரசின் உயரிய நோக்கமாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு, வருவாய் நிலை ஆணை 21–ன்கீழ் விதிகளுக்குட்பட்டு, கிராம நத்தமாக ஒதுக்கப்பட்ட நிலங்களிலிருந்து, தகுதியுடைய வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்படுகின்றன. அம்மக்களின் தேவைக்கு கிராம நத்தம் நிலங்கள் போதுமானதாக இல்லாதபோது, ஆட்சேபகரமற்ற அரசுப் புறம்போக்கு நிலங்களை கிராம நத்தமாக வகைபாடு மாற்றம் செய்ய, வருவாய் நிலை ஆணை 21(6)–இன்கீழ் வருவாய்க் கோட்ட அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி, தகுதியுள்ள வீடில்லா ஏழைகளுக்கு வீட்டு மனைகள் ஒப்படை செய்யப்படுகின்றன. நீர்நிலை புறம்போக்குகள் போன்ற ஆட்சேபகரமான புறம்போக்கு இனங்களைத் தவிர்த்து, பிற ஒப்படை செய்யக் கூடிய நிலங்கள் தகுதியுள்ள

நபர்களுக்கு வீட்டுமனைக்காக ஒப்படை செய்யப்படுகின்றன.

வீட்டுமனை ஒப்படையைப் பொறுத்தவரையில் கிராமப்புறங்களில், ஆண்டு வருமானம் ரூ.**30,000/–**க்குக் குறைவாகவும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையில், ஆண்டு வருமானம் ரூ.**50,000/–**க்குக் குறைவாகவும் உள்ள வீடில்லா ஏழை குடும்பத்தினர் இலவசமாக வீட்டுமனை பெறத் தகுதியுடையவராவர். வீட்டுமனைகள் குடும்பத்தின் பெண் உறுப்பினர் பெயரில் மட்டுமே ஒப்படை செய்யப்படுகின்றன. தற்போது நடைமுறையில் உள்ள விதிகளின்படி, கிராமங்களில் மூன்று சென்ட் நிலம், நகராட்சி எல்லைக்குள் ஒன்றரை சென்ட் நிலம், மாநகராட்சி எல்லைக்குள் ஒரு சென்ட் நிலம் என்ற அளவில் தகுதியுள்ள பயனாளிகளுக்கு வீட்டுமனை ஒப்படை செய்யப்படுகிறது.

வீட்டுமனை ஒப்படை செய்வதற்கு, பல்வேறு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களுக்கு, அரசாணை (நிலை) எண்.**248**, வருவாய்த்துறை, நாள் **28.7.2009–**ன்கீழ்

வழங்கப்பட்டுள்ள நிதி அதிகார வரம்பு (ஒப்படை செய்யப்படும் நிலத்தின் மதிப்பு) கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது: –

**அட்டவணை–3.1**
**வீட்டுமனை ஒப்படைக்கான நிதி அதிகார உச்சவரம்பு**

| வ. எண் | அலுவலர்கள் | நிதி அதிகார உச்ச வரம்பு ( நில மதிப்பில்) |
|---|---|---|
| 1 | வட்டாட்சியர் | ரூ.30,000/– வரை |
| 2 | கோட்டாட்சியர் | ரூ.50,000/– வரை |
| 3 | மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.1,00,000/– வரை |
| 4 | மாவட்ட ஆட்சித் தலைவர் | ரூ.4,00,000/– வரை |
| 5 | நில நிர்வாக ஆணையர் | ரூ.5,00,000/– வரை |
| 6 | அரசு | ரூ.5,00,000/– க்கும் மேல் |

வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு தமிழ்நாடு அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருவதுடன், **2011–2012–**ஆம் நிதியாண்டு முதல் **2016–2017–**ஆம் நிதியாண்டு வரையில் **14,00,000** இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கு கீழ்க்கண்டவாறு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ஒவ்வொரு

நிதியாண்டிலும், இலக்கினை விஞ்சி, மொத்தம் **16,12,390** இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை–3.2**
**இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்**
**வழங்கப்பட்ட விவரம்**

| ஆண்டு | இலக்கு | வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் |
|---|---|---|
| 2011 –2012 | 1,00,000 | 1,21,804 |
| 2012–2013 | 1,00,000 | 1,31,299 |
| 2013–2014 | 2,00,000 | 2,17,723 |
| 2014–2015 | 3,00,000 | 3,81,708 |
| 2015–2016 | 3,50,000 | 4,05,111 |
| 2016–2017 | 3,50,000 | 3,54,745 |
| **மொத்தம்** | **14,00,000** | **16,12,390** |

**2017–2018**–ஆம் நிதியாண்டில், **3.50** இலட்சம் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

## 3.6 நிலமாற்றம்

அரசு நிலங்கள், வருவாய் நிலை ஆணை **23**–இன்கீழ் மத்திய அரசுத் துறைகளுக்கு நிலக் கிரையம் வசூலித்துக் கொண்டு நில மாற்றம் செய்யப்படுகின்றன. வருவாய் நிலை ஆணை **23A**–இன்கீழ் மாநில அரசுத்

துறைகளுக்கு நிலக் கிரையமின்றி நில மாற்றம் செய்யப்படுகின்றன.

மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகளுக்கு அரசு நிலங்கள் தேவைப்படின், கேட்புத் துறையானது, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு மனுச் செய்து கொள்வதன் பேரில், கேட்புத் துறையின் தேவை, இருப்பிலுள்ள தகுதியுடைய நிலப்பரப்பு ஆகியவற்றைப் பரிசீலனை செய்தும், உத்தேச நில மதிப்பினை நிர்ணயம் செய்தும், உரிய முன்மொழிவினை, நில நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு மாவட்ட ஆட்சியர் அனுப்பி வைப்பார்.

சுகாதாரம், கல்வி, காவல் போன்ற சில மாநில அரசுத் துறைகளைப் பொறுத்தமட்டில், அத்துறைகளின் அத்தியாவசியத் தேவைக்கேற்ப, ஆட்சேபகரமான நிலங்கள் அதாவது நீர்நிலைப் புறம்போக்கு, மயானம், பாதை போன்றவை நீங்கலாக, நில மதிப்பு வரம்பின்றி, குறைந்தபட்ச நிலப்பரப்பினை ஒதுக்கீடு செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நிலமாற்ற இனங்களில், மேய்க்கால் (அல்லது) மந்தைவெளிப் புறம்போக்கு நிலங்கள் உட்படுகையில், நிலமாற்றம் செய்யப்படும் பரப்புக்கு ஈடான மாற்று நிலம் வருவாய் மற்றும் கால்நடை பராமரிப்பு துறையினரால் கூட்டுப் புலத்தணிக்கை மூலம் கண்டறியப்பட வேண்டும். மேலும், மாற்று நிலத்தை மேய்ச்சல் தரையாக மேம்படுத்துவதற்கு மேம்பாட்டுக் கட்டணமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.6,000/– அல்லது எக்டேர் ஒன்றுக்கு ரூ.15,000/– வீதம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புக்கு கேட்புத்துறை செலுத்த வேண்டும். சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பானது, மாற்று நிலத்தை மேம்படுத்தி கால்நடைகள் மேய்வதற்கு அனுமதிக்கும் வகையில், ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். மேற்படி மாற்று நிலம் கால்நடைகள் மேய்வதற்கு மட்டும் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்புவிக்கப்பட்டாலும், அந்நிலத்தின் உரிமை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையிடம் தொடர்ந்து இருக்கும்.

அரசுத் துறைகளுக்கு நிலமாற்றம் செய்யப்படும் நிலங்கள், எந்த நோக்கத்திற்காக எவ்வளவு ஒதுக்கீடு

செய்யப்பட்டனவோ, அதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். அனைத்து அரசு நிலங்களுக்கும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையே பாதுகாவலராக உள்ளபடியால், வழங்கப்பட்ட நிலங்களின் நோக்கம் நிறைவேற்றப்படவில்லையெனில், அந்த நிலங்களை மீளப் பெற்று, தேவையின் அடிப்படையில் இதர துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறைக்கு உள்ளது.

2011–ஆம் ஆண்டு முதல் 31.3.2017 வரையில், 3,747 ஏக்கர் அரசு நிலங்கள், கல்வி, நீதி, காவல், சுகாதாரம், நெடுஞ்சாலை, பொதுப்பணி, தொழில் மற்றும் வணிகம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மீன்வளம், அணுசக்தித் துறை, எல்லைப் பாதுகாப்புப் படை, வனம் போன்ற பல்வேறு அரசுத் துறைகளுக்கு 461 இனங்களில் நிலமாற்றம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

### 3.7 நில உரிமை மாற்றம்

அரசு நிலங்கள், வருவாய் நிலை ஆணை 24–இன்கீழ் பொதுப் பயன்பாட்டிற்காக உள்ளாட்சி

அமைப்புகளுக்கும், மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள்/ கழகங்கள்/ வாரியங்கள்/ பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றிற்கு பல்வேறு திட்டங்கள் மற்றும் பணிகளுக்காக நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. சில அரிதான நேர்வுகளில், பொது நலன் கருதி, தனியார் நிறுவனங்களுக்கும் அவற்றின் தேவை மற்றும் அவசியம் போன்றவற்றினை ஆய்வுசெய்து, அரசின்வசம் போதுமான நிலம் இருக்கும் பட்சத்தில், நிலஉரிமை மாற்றம் செய்யப்படுகிறது. அரசு நிலங்கள் வணிக நோக்கமில்லாத பயன்பாட்டிற்காக நில உரிமை மாற்றம் செய்யப்பட்டால் இதன் சந்தை நிலமதிப்பில் ஒரு மடங்கு மட்டுமே நிலக் கிரையமாக வசூல் செய்யப்படும். வணிக நோக்கத்திற்காக நில உரிமை மாற்றம் செய்யும் நேர்வுகளில் இரு மடங்கு நிலக் கிரையமாக வசூல் செய்யப்படும். நில உரிமை மாற்றம் செய்யப்படும் இனங்கள் தொடர்பாக விதிக்கப்படும் நிபந்தனைகளில் ஏதேனும் மீறப்படுமானால், நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்கள் இழப்பீட்டுத் தொகை ஏதுமின்றி அரசால் மீளப் பெறப்படும்.

பொது நலன் கருதி, குடிநீர் திட்டப் பணிகள், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் போன்றவற்றிற்காக, உள்ளாட்சி அமைப்புகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் போன்றவற்றிற்கு அரசு நிலங்கள் நிலக் கிரையமின்றி நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. அதேபோல், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் ஏழை மக்களுக்கான அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கும், அரசு நிலங்கள் நிலக் கிரையமின்றி நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன.

நில மாற்றம் மற்றும் நில உரிமை மாற்றம் செய்யப்படவுள்ள புலமானது, பிற துறைகள்/ உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்கள்/ ஒப்புவிக்கப்பட்ட நிலங்களாக இருக்கும்பட்சத்தில், அம்முன்மொழிவுகளின்மீது விரைந்து முடிவெடுப்பதற்கு ஏதுவாக, பொதுப்பணித் துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, ஊரக வளர்ச்சித்

துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் ஆகிய துறைத் தலைவர்களின் இசைவு பெரும்பாலான இனங்களில் தேவைப்படுவதால், அத்துறைத் தலைவர்களை உள்ளடக்கியும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை செயலரைத் தலைவராகவும், நில நிர்வாக ஆணையரை ஒருங்கிணைப்பாளர்/ உறுப்பினர் செயலராகவும் கொண்ட தலைமைச் செயலக அளவிலான குழு, அரசாணை (நிலை) எண்.426, வருவாய் [நி.மு.4] துறை, நாள் 29.9.2014–இன்படி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது

**2011 –** ஆம் ஆண்டு முதல் **31.3.2017** வரையில், **3,237** ஏக்கர் அரசு நிலங்கள், சிப்காட், டிட்கோ, தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ் நாடு காவலர் வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் போன்ற பல்வேறு மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் வாரியங்களுக்கு **305** இனங்களில் நில உரிமை மாற்றம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

## 3.8 நில குத்தகை

வருவாய் நிலை ஆணை 24A–இன் கீழ் அரசு புறம்போக்கு நிலங்கள்/ கட்டடங்கள்/ நிலத்துடன் கூடிய கட்டடங்கள் போன்றவை, வேளாண்மை அல்லாத பிற நோக்கங்களுக்காக, உள்ளாட்சி அமைப்புகள், நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், பிற சங்கங்கள், தனியர் மற்றும் தனியார் அமைப்புகளுக்கு தற்காலிகமாக குத்தகை அடிப்படையில் கீழ்க்கண்ட முக்கியமான நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படுகிறது.

(i) நிலம் எந்த நோக்கத்திற்காக குத்தகைக்கு வழங்கப்படுகிறதோ அந்த நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

(ii) குத்தகைக்கு வழங்கப்பட்ட அரசு நிலத்தை உள்குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடக்கூடாது.

(iii) குத்தகை நிபந்தனை மீறப்படின், குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலம், எவ்வித இழப்பீடுமின்றி உரிய வழிமுறைகளின்படி அரசு வசம் மீள எடுத்துக் கொள்ளப்படும்.

பொதுவாக குத்தகை இனங்கள் குறைந்த பட்சம் 3 ஆண்டுகளுக்கும் அதிகபட்சமாக 30 ஆண்டுகளுக்கும் தற்காலிக அடிப்படையில் வழங்கப்படுகின்றன. சில சிறப்பு நேர்வுகளில், அத்தியாவசியம் மற்றும் பொது நோக்கங்களின் அடிப்படையில் தேவை எனக் கருதும்பட்சத்தில், அதிகபட்சமாக 99 வருடங்களுக்கு அரசளவில் குத்தகை வழங்கப்படுகிறது.

வணிகமற்ற நோக்கத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு நிலத்தின் சந்தை மதிப்பில் 7 விழுக்காடும், வணிக நோக்கத்திற்கு 14 விழுக்காடும் குத்தகை கட்டணமாக நிர்ணயம் செய்யப்படுகிறது.

நீண்ட காலக் குத்தகை இனங்களில், மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மாவட்ட ஆட்சித் தலைவரால் குத்தகைத் தொகை மறு நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது.

குத்தகை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் இனங்களில் நில மதிப்பின்படி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் பல்வேறு அலுவலர்களுக்கான நிதி அதிகார வரம்பு, அரசாணை (நிலை) எண். 527,

வருவாய்த்துறை, நாள் **28.11.2014** மற்றும் அரசாணை **(நிலை)** எண்.**55,** வருவாய்த்துறை, நாள் **24.02.2017** இன்படி கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது:-

| **அலுவலர்கள்** | **நிதி அதிகார வரம்பு நில குத்தகைக்காக** (நில மதிப்பில்) | **நிதி அதிகார வரம்பு குத்தகையைப் புதுப்பித்தல்** (நில மதிப்பில்) |
|---|---|---|
| வட்டாட்சியர் | இல்லை | இல்லை |
| வருவாய்க் கோட்ட அலுவலர் | ரூ.**50,000/–** வரை | இல்லை |
| மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.**1,00,000/–** வரை | இல்லை |
| மாவட்ட ஆட்சித் தலைவர் | ரூ.**4,00,000/–** வரை | ரூ.**10,00,000/–** வரை |
| நில நிர்வாக ஆணையர் | ரூ.**5,00,000/–** வரை | ரூ.**25,00,000/–** வரை |
| அரசு | ரூ.**5,00,000/–** க்கு மேல் | ரூ.**25,00,000/–** க்கு மேல் |

குத்தகைக்கு வழங்கப்பட்ட அரசு நிலங்கள் தொடர்பான விவரங்கள் அனைத்தும் முதன்மை குத்தகைப் பதிவேட்டில் (Master Lease Register) பதிவு செய்யப்பட்டு, வட்ட அலுவலகத்திலும், மாவட்ட

ஆட்சியர் அலுவலகத்திலும் பராமரிக்கப்படுகிறது. ஒவ்வொரு பசலி ஆண்டு முடிவிலும், வருவாய்த் தீர்வாயம் (Jamabandhi) முடிவுற்றபின்பு, வருவாய்த் தீர்வாய அலுவலரால் (Jamabandhi Officer) இப்பதிவேட்டில் உள்ள பதிவுகள் புதுப்பிக்கப்படுகின்றன (Updated). குத்தகைக்கு வழங்கப்பட்ட புலங்களில், குத்தகை நிபந்தனைகள் சரிவர கடைப்பிடிக்கப் படுகின்றனவா என்பதை வட்டாட்சியர்/ வருவாய்க் கோட்டாட்சியர்/ மாவட்ட வருவாய் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரால் காலமுறையாக புலத் தணிக்கை செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகின்றன.

### 3.9 உப்பள நிலங்ளை குத்தகைக்கு வழங்குதல்

உப்பு உற்பத்தி செய்வதற்கு, வருவாய் நிலை ஆணை 24A–இன்படி, அரசு நிலங்கள் குத்தகை அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

தமிழகக் கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள சுமார் 27,777 ஏக்கர் அரசு உப்பள நிலங்கள், குத்தகை அடிப்படையில் தனிநபர் மற்றும் பிற நிறுவனங்களுக்கு, உப்பு மற்றும் அதன் தொடர்புடைய பொருட்கள் உற்பத்தி

செய்ய வழங்கப்பட்டுள்ளன. சிறு உப்பு உற்பத்தியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், உப்பு தயாரித்தல் பணியை ஊக்குவிக்கும் வகையிலும், இதர மாநிலங்களை ஒப்பிட்டு நோக்குகையில், தமிழகத்தில் உப்பள நிலங்களுக்கு நியாயமான குறைந்தபட்ச குத்தகைத் தொகை மற்றும் உரிமத் தொகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

## 3.10 நில மாற்றம்/ நில உரிமை மாற்றம் கண்காணிக்கும் முறை

கணினி வழியாக நில முன்மொழிவுகளை கண்காணிக்கும் முறை தொடர்பாக, மென்பொருள் உருவாக்கப்பட்டு, நில மாற்றம், நில உரிமை மாற்றம் மற்றும் குத்தகை தொடர்பான இனங்களில், மாநிலம் முழுமைக்குமான, முன்மொழிவுகள் வருகை நில நிர்வாக ஆணையரால் கண்காணிக்கப்படுகிறது. இதன் வாயிலாக, மாவட்ட அலுவலர்களுடனான நடவடிக்கையினைத் துரிதப்படுத்துதல், நிலம் தொடர்பான முன்மொழிவுகளைத் துரிதமாக முடிவு செய்தல் மற்றும் திட்டப் பணிகளுக்கான அரசு நிலங்களைக் குறுகிய

காலத்திற்குள் கிடைப்பதற்கு வழிவகை மேற்கொள்ளப்படுகிறது. இம்மென்பொருள், “http://landadmin.tn.gov.in”–ல் பதிவேற்றம் செய்யப் பட்டுள்ளது.

## 3.11 ஆக்கிரமணங்களை அகற்றுதல்

பொது நலனைக் காக்க, அரசு நிலங்களில் உள்ள அனுமதியற்ற ஆக்கிரமணங்கள் தடுக்கப்படல் வேண்டும். மேற்படி ஆக்கிரமணங்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, அரசு நிலங்களைப் பாதுகாத்திட, சம்பந்தப்பட்ட துறைகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்பொழுது, அத்துறைகளுடன் இணைந்து, தேவையான நடவடிக்கைகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை எடுத்து வருகிறது. அவ்வாறு ஆரம்ப நிலையிலேயே ஆக்கிரமணங்களைத் தடுக்க இயலாத நேர்வுகளில், அரசு நிலங்களைப் பாதுகாக்கவும், சட்டத்திற்குப் புறம்பான அத்தகைய ஆக்கிரமணங்களை அகற்றவும் கீழ்க்காணும் சட்டங்களில் வழிவகை செய்யப்பட்டுள்ளன:-

- தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905
- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920
- தமிழ்நாடு கிராமப் பஞ்சாயத்து சட்டம், 1958
- தமிழ்நாடு பொதுக் கட்டடம் (அனுமதிக்கப்படாத ஆக்கிரமிப்பு) சட்டம், 1975
- தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம், 1994
- தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், 2001
- தமிழ்நாடு நீர்நிலைகள் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் சட்டம், 2007

அரசாணை (நிலை) எண்.41, வருவாய்த் துறை, நாள் 20.1.1987–இல், நீர்நிலை ஆதாரங்களான குளம், குட்டை, ஓடை, கால்வாய் மற்றும் நீர்ப்பிடிப்பு போன்ற நீர்நிலைகளைப் பாதுகாக்கவும், அவற்றில் ஆக்கிரமிப்புகளைத் தவிர்க்கும் வகையில், மேற்கண்ட நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்த தடை ஆணையும் விதிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையை வழுவாது கடைபிடிக்குமாறு அரசாணை (நிலை) எண்.186, வருவாய்த்துறை, நாள் 29.4.2003–இல் விரிவான அறிவுரைகளுடன் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், நீதிப்பேராணை எண்.**20186/2000**–இல் வெளியிட்ட தீர்ப்பில், மாநிலத்தில் உள்ள அனைத்து நீர்நிலைகளில் உள்ள சட்ட விரோதமான ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து அகற்றிடவும், அதனை பழைய நிலைக்குக் கொண்டு வரவும் உத்தரவிட்டுள்ளது.

எனவே, நீர்நிலை ஆதாரங்களான குளங்கள், ஆறுகள், ஏரிகள், குட்டைகள் மற்றும் ஏனைய நீர்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்புகள், பொதுப்பணித் துறை மற்றும் காவல் துறையுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

அரசாணை (நிலை) எண்.**540**, வருவாய் [நி.மு.**6(2)**] துறை, நாள் **4.12.2014**–இன்படி ஒவ்வொரு வட்டம்/ கோட்டம்/ மாவட்ட அளவில் அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்கள் குறித்த மனுக்களை தீர்வு செய்ய, "குறை தீர்க்கும் குழுக்கள்" அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது. இப்பணியின்

முன்னேற்றத்தைக் கண்காணிக்குமாறும், வரையறைக்குட்பட்ட கால வரம்புக்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா என்பதையும், மாதந்தோறும் நடத்தப்படும் மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் இயங்கும் மாவட்ட அளவிலான இயக்கக் குழுவிற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு, குழுவின் செயல்பாடுகள் நில நிர்வாக ஆணையரால் கண்காணிப்பட்டு வருகிறது.

### 3.12 நில எடுப்பு

பொது நோக்கத்திற்காக மத்திய, மாநில அரசின் துறைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு வேண்டுகோளின்பேரில் தனியார் நிலம் கையகப்படுத்தப்படுகிறது. இதுநாள் வரை பிரதானமாக நில எடுப்புச் சட்டம், **1894** (மத்திய சட்டம் **1/1894**)–இன்கீழ் நிலம் கையகப்படுத்தப்பட்டு வந்தது. இச்சட்டத்தைத் தவிர, மாநில அரசு சமூகத்தில் பின்தங்கியுள்ள வகுப்பினர்களுக்கு வீட்டுமனை மற்றும் பிற தேவைகளுக்கு நிலம் வழங்கவும், மேலும் தொழிற்சாலைகள் மற்றும் நெடுஞ்சாலை

உட்கட்டமைப்பிற்காகவும் பின்வரும் மூன்று தமிழ்நாடு நில எடுப்பு சட்டங்களை நிறைவேற்றியுள்ளது:–

(1) **1978–**ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத் திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டம் **(**தமிழ் நாடு சட்டம் **31/ 1978)**

(2) **1997–**ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டம் **(**தமிழ்நாடு சட்டம் **10/ 1999)**

(3) **2001–**ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் **(**தமிழ்நாடு சட்டம் **34/ 2002).**

ஏற்கனவே நடைமுறையில் இருந்து வந்த மத்திய நில எடுப்பு சட்டம், **1894** இரத்து செய்யப்பட்டு தற்போது புதிய நில எடுப்பு சட்டமான "நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமைச் சட்டம், **2013** **(**மத்திய சட்டம் **30/2013)**" (The Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013)-ஐ மத்திய அரசு இயற்றி உள்ளது. இச்சட்டம்

**1.1.2014** முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்த புதிய நில எடுப்புச் சட்டத்தின்படி மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு போன்றவை நிலம் கையகப்படுத்தும் நடைமுறையில் (Process) ஒருங்கிணைந்த பகுதியாகியுள்ளது.

ஏற்கனவே மத்திய நில எடுப்பு சட்டம், **1894**–இன் கீழ் நடவடிக்கை தொடரப்பட்ட இனங்களில், மத்திய நில எடுப்பு சட்டம், **1894**–இன் கீழ் இடைக்கால சரியீட்டுத் தொகை நிர்ணயம் செய்து வழங்கிடவும், புதிய நில எடுப்புச் சட்டத்தின்கீழ் விதிமுறைகள் வெளியிடப்பட்ட பின்பு, புதிய மத்திய நில எடுப்பு சட்டத்தின்கீழ் கூடுதல் சரியீட்டுத் தொகை நிர்ணயம் செய்து வழங்கிட உரிய வழிமுறைகள் அரசாணை (நிலை) எண்.88, வருவாய்த் துறை, நாள் **21.2.2014**–இல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட மூன்று தமிழ்நாடு நில எடுப்புச் சட்டங்களின் கீழ் நில எடுப்பு தொடரப்பட்ட இனங்களிலும், இதே போல் சரியீட்டுத் தொகை நிர்ணயம் செய்ய சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறையால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்கண்ட மூன்று தமிழ்நாடு நில எடுப்பு சட்டங்களின் கீழ், நில எடுப்பு நடவடிக்கை தொடர்ந்திடும் வகையில், மாநில அரசு புதிய நில எடுப்புச் சட்டத்திற்கு, தமிழ்நாடு திருத்தச் சட்டம் **1/2015**–ஐ நிறைவேற்றியது. இத்திருத்தச் சட்டத்தின் கீழ், புதிய நில எடுப்பு சட்டத்தில், **4**–ஆம் அட்டவணையில் உள்ள **13** மத்திய நில எடுப்புச் சட்டங்கள், சரியீடு, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பயன்கள் நீங்கலாக, புதிய சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதைப் போன்று, மேற்கண்ட மூன்று தமிழ்நாடு நில எடுப்பு சட்டங்களுக்கும் விலக்களிக்கும் வகையில், பிரிவு **105–**A சேர்க்கப்பட்டு, அதன் கீழ் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள **5**–ஆம் அட்டவணையில் இம்மாநிலச் சட்டங்கள் வைக்கப்பட்டுள்ளன. இத்திருத்த மசோதாவுக்கு மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் **1.1.2015** அன்று பெறப்பட்டுள்ளது.

நிலம் கையகப்படுத்துவதில், நியாயமான சரியீடு மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமை சட்டத்தினை (RFCTLARR Act, 2013) அமல்படுத்துவதற்கு ஏதுவாக, இச்சட்டத்தின் வரைவு விதிகளுக்கு தமிழக அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. இதன்

மூலமாக மீதம் வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையினை இச்சட்டத்தின்கீழ் விரைவில் வழங்கிட ஆவன செய்யப்பட்டுள்ளது.

**3.13 சிறுபாசனக் கணக்கெடுப்பு புள்ளி விவர பகுத்தாய்வு (R.M.I.S.)**

சிறுபாசனத் திட்டங்கள் தொடர்பான விரிவான புள்ளி விவரங்களைச் சேகரித்து ஒருமைப்படுத்தும் நோக்கத்துடன், மத்திய அரசின் நிதியுதவியுடன், சிறுபாசனப் பிரிவின் விரிவான தகவல்களை ஒருங்கிணைக்க, புள்ளி விவர சீரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்கணக்கெடுப்பு திட்டத்தின் ஒருங்கிணைப்புத் தலைவராக நில நிர்வாக ஆணையர் செயல்படுகிறார்.

சிறுபாசனக் கணக்கெடுப்புத் திட்டம் கீழ்க்காணும் நோக்கங்களுக்காகத் தொடங்கப்பட்டுள்ளது:

(1) ஒவ்வொரு ஐந்தாண்டும் சிறுபாசனக் கணக்கெடுப்பு நடத்தி அதன் மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்து சிறுபாசனத் திட்டங்களும் கணக்கெடுக்கப்படுகின்றன.

(2) சிறுபாசனத் திட்டங்கள் தொடர்பான புள்ளி விவரத் தொகுப்பினை பகுத்தாய்வு செய்து,

காலாண்டு மற்றும் ஆண்டறிக்கை தயாரித்து மத்திய அரசிற்கு அனுப்பப்படுகின்றன.

### 3.13.1 ஐந்தாவது சிறுபாசனக் கணக்கெடுப்பு

5–வது சிறுபாசனக் கணக்கெடுப்பு, 2013–2014ஆம் ஆண்டை மேற்கோள் ஆண்டாகக் கொண்டு ஜுலை, 2014 முதல் தொடங்கப்பட்டு இது தொடர்பான களப்பணிகள் முழுவதுமாக முடிக்கப்பட்டுள்ளது. கணினி பதிவிற்கான வலைதள மென்பொருள், மத்திய அரசின் நீர்வளத்துறையிடமிருந்து பெறப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் கணினிப் பதிவுகள் செப்டம்பர்–2016 உடன் முடிவடைந்துள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு:–

**அட்டவணை–3.3**
**5–வது சிறுபாசனக் கணக்கெடுப்பு**
**(2013–2014)**

(மாறுதலுக்குட்பட்டது)

| வ. எண் | திட்டத்தின் வகை | திட்டங்களின் எண்ணிக்கை | விழுக்காடு |
|---|---|---|---|
| 1. | நிலத்தடி நீர்த்திட்டம் | 20,24,468 | 97.65 |
| 2. | மேற்பரப்பு நீர்ப் பாசனத் திட்டம் | 48,726 | 2.35 |
| | மொத்தம் | 20,73,194 | 100.00 |

## 4. நிலச் சீர்திருத்தம்

விவசாய நிலங்களுக்கான நில உச்சவரம்பு சட்டம், குத்தகைச் சட்டங்கள், விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியச்சட்டம் முதலியவை நிலச்சீர்திருத்தத் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், **2006–**ஆம் ஆண்டு முதல் பூமிதான நிலங்கள் தொடர்பான சட்டம், இவ்வாணையரகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் புரிவோர்களுக்கும் அவர்களது குடும்ப நபர்களுக்கும் முழுமையான சமூக பாதுகாப்பு வழங்கும் வகையில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் இவ்வாணையரகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

### 4.1 நிர்வாக கட்டமைப்பு

நிலச்சீர்திருத்த ஆணையர், ஆணையரகத்தின் தலைவராகவும், அவருக்கு உதவியாக தலைமையிடத்தில், நிலச்சீர்திருத்த இயக்குநர், இணை இயக்குநர், இரண்டு உதவி ஆணையர்கள் மற்றும் நிதி

ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர் உள்ளனர்.

பொதுமக்கள் தங்களது கோரிக்கைகளை எளிதில் அணுகி துரித தீர்வுகண்டு பயன் பெறும் வகையில் 2015 ஆம் ஆண்டில் நிலச்சீர்திருத்தத் துறை அரசினால் மறுசீரமைக்கப்பட்டது. அதன்படி மாநிலத்தில் வெவ்வேறு பகுதிகளில் செயல்பட்டு வந்த 6 நிலச்சீர்திருத்த உதவி ஆணையர்கள் அலுவலகங்களுக்குப் பதிலாக, சென்னை நீங்கலாக 31 மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் ஒரு நிலச்சீர்திருத்தப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், நிலச்சீர்திருத்தச் சட்டம் மற்றும் விதிகளில் உள்ள அதிகாரங்கள் சார்ஆட்சியர்/ வருவாய் கோட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட அளவில், பணி முன்னேற்றம் நிர்வாக ரீதியில் மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) மற்றும் நிலச்சீர்திருத்த பிரிவு பணியாளர்களின் உதவியோடு மாவட்ட ஆட்சியரின் மேற்பார்வையில் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தனித்துணை ஆட்சியர்கள் தலைமையில் 10 வருவாய் நீதிமன்றங்கள் பல்வேறு குத்தகைச் சட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் பூமிதான சட்டம் ஆகியவை மாவட்ட நிர்வாகம் மூலம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நிலச்சீர்திருத்தத் துறைக்காக ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள் கீழ்க்கண்டவாறு:–

**அட்டவணை 4.1**
**நிலச்சீர்திருத்தத் துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள்**

| வ. எண் | பணியிடங்கள் வகை | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | முதன்மைச் செயலாளர் / நிலச்சீர்திருத்த ஆணையர் | 1 |
| 2. | நிலச்சீர்திருத்த இயக்குநர் | 1 |
| 3. | இணை இயக்குநர் | 1 |
| 4. | நிதிஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர் | 1 |
| 5. | உதவி ஆணையர்கள்/ துணை ஆட்சியர்கள் [தனித்துணை ஆட்சியர்கள் (வருவாய் நீதிமன்றம்) உட்பட] | 12 |

| வ. எண் | பணியிடங்கள் வகை | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 6. | கண்காணிப்பாளர்கள்/ துணை வட்டாட்சியர்கள் | 21 |
| 7. | உதவியாளர், உதவியாளர் நிலை வருவாய் ஆய்வாளர்கள் | 44 |
| 8. | சுருக்கெழுத்து தட்டச்சர் / தட்டச்சர் | 35 |
| 9. | இளநிலை உதவியாளர் | 21 |
| 10. | இதர பணியிடங்கள் | 76 |
| | **மொத்தம்** | **213** |

## 4.2 நில உச்சவரம்பு கொள்கை

ஒரு சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாய நிலங்கள் ஒரு முக்கிய ஆதாரம் ஆகும். விவசாய நிலங்கள் சிலரது வசம் மட்டுமே இருப்பதன்மூலம் விவசாய நில உடைமைகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்கிடும் வகையில், அரசு விவசாய நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயித்து, உச்சவரம்புக்கு மேல் உள்ள நிலங்களை கையகப்படுத்துவதற்கு வழிவகை செய்து அதனை நிலமற்ற ஏழைகளுக்கு பிரித்து வழங்கும் பொருட்டு, தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம் **1961** (தமிழ்நாடு சட்டம் **58/1961**) மற்றும்

திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 4.2.1 நடைமுறையில் உள்ள உச்சவரம்பு

தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம், 1961 மற்றும் திருத்தச் சட்டத்தின்படி 15.2.1970 முதல் நிலஉச்சவரம்பு கீழ்க்கண்டவாறு நடைமுறையில் உள்ளது.

**அட்டவணை–4.2**
**நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் உள்ள உச்சவரம்பு**

| வ எண். | வகைப்பாடு | அனுமதிக்கப்பட்ட பரப்பு |
|---|---|---|
| (i) | தனிநபர், நிறுவனம், சொசைட்டி, தனியார் அறக்கட்டளை, கம்பெனி | 15 தர ஏக்கர் |
| (ii) | 5 நபர்கள் கொண்ட ஒருகுடும்பம்<br>(ஐந்து நபருக்கு மேல்உள்ள ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கு 5 தர ஏக்கர் கூடுதலாக அனுமதிக்கப்படுகிறது)<br>ஒரு குடும்பத்திற்கான அதிகபட்ச உச்சவரம்பு | 15 தர ஏக்கர்<br><br>30 தர ஏக்கர் |

| வ எண். | வகைப்பாடு | அனுமதிக்கப்பட்ட பரப்பு |
|---|---|---|
| (iii) | ஒவ்வொரு பெண் உறுப்பினருக்கும் **15.2.1970** அன்று நிலங்கள் அவர்களது பெயரில் இருந்தால் சீதனமாக அனுமதிக்கப்படும் பரப்பு | 10 தர ஏக்கர் |
| (iv) | **1.3.1972** தேதியில் இருந்த மதசார்பான பொது அறக்கட்டளை (Public Trust of Religious nature) | சட்டத்திற்குள் வராது |
| (v) | **1.3.1972** தேதியில் இருந்த தர்ம ஸ்தாபன பொது அறக்கட்டளை (Public Trust of Charitable nature) | 5 தர ஏக்கர் |
| (vi) | **1.3.1972**–தேதிக்கு பிறகு தோற்றுவிக்கப்பட்ட பொது அறக்கட்டளைகளுக்கான உச்சவரம்பு (திருத்தப்பட்ட 29/87 சட்டத்தின்படி ஒருபொது அறக்கட்டளை கல்வி மற்றும் மருத்துவப் பயன்பாட்டிற்கு நிலங்கள் வைத்துக் கொள்ள அரசால் அனுமதிக்கப்படுகிறது) | இல்லை |

### 4.2.2 தரஏக்கர்

நிலச்சீர்திருத்தச் சட்டப்பிரிவு **3 (40)–**இன்படி தர ஏக்கர் என்பது சம்பந்தப்பட்ட புன்செய்/ நன்செய் நிலத்தீர்வையினை (Assessment) அடிப்படையாகக் கொண்டு கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்படுகிறது.

**அட்டவணை 4.3**
**சாதாரண ஏக்கரிலிருந்து தர ஏக்கராக கணக்கிடும் அட்டவணை**

| புன்செய் நிலத்திற்கு | | |
|---|---|---|
| **தீர்வை ஏக்கருக்கு (Assessment)** | **சாதாரண ஏக்கர்** | **தர ஏக்கர்** |
| ரூ.1.25க்கு கீழ் | 4 | 1 |
| ரூ.1.25 – 2.00 | 3 | 1 |
| ரூ.2.00–க்கு மேல் | 2.5 | 1 |

| நன்செய் நிலத்திற்கு | | |
|---|---|---|
| **தீர்வை ஏக்கருக்கு (Assessment)** | **சாதாரண ஏக்கர்** | **தர ஏக்கர்** |
| ரூ.4.00–க்கு கீழ் | 2 | 1 |
| ரூ.4.00– 6.00 | 1.75 | 1 |
| ரூ.6.00–8.00 | 1.60 | 1 |
| ரூ.8.00 – 10.00 | 1.20 | 1 |
| ரூ.10.00 – 15.00 | 1 | 1 |
| ரூ.15.00–க்கு மேல் | 0.80 | 1 |

### 4.2.3 தொழில்/ வணிக நிறுவனங்களுக்கு அனுமதி

நிலச்சீர்திருத்தச் சட்டத்தின்படி தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள் 15.000 தர ஏக்கர் நிலங்கள் வரை வைத்துக் கொள்ளலாம். தொழில் அல்லது வணிக நிறுவனங்கள் உச்சவரம்பிற்கு மிகையாக நிலங்களை வாங்குவதற்கு அல்லது வாங்கிய நிலங்களை வைத்துக்கொள்ள சட்டப்பிரிவு 37–A மற்றும் விதிகளின்படி அரசால் அனுமதி வழங்கப்படுகிறது. திருத்தப்பட்ட விதிகளின்கீழ், விதிகள் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்தோ அல்லது நிறுவனம் அவ்வாறாக நிலத்தை வாங்கிய நாளிலிருந்தோ 180 நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

### 4.2.4 பொது அறக்கட்டளைக்கு அனுமதி

பொது அறக்கட்டளைகள் கல்வி அல்லது மருத்துவமனை பயன்பாட்டிற்காக நிலங்களை வாங்குவதற்கு அல்லது வாங்கிய நிலங்களை வைத்துக்கொள்ள சட்டப்பிரிவு 37–B மற்றும் விதிகளின்படி அரசால் அனுமதி வழங்கப்படுகிறது. அதன்படி, திருத்தப்பட்ட விதிகளின்கீழ், திருத்தம்

அறிவிக்கப்பட்ட நாளிலிருந்தோ அல்லது பொது அறக்கட்டளை நிலத்தை வாங்கிய நாளிலிருந்தோ 180 நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

**4.3 வருவாய் நீதிமன்றங்கள்**

நில உடைமையாளருக்கும் குத்தகைதாரர் களுக்கும் இடையே ஏற்படும் வழக்குகளை குத்தகைச் சட்டங்களின் கீழ் முடிவு செய்வதற்காக மாநிலத்தில் 6 வருவாய் நீதிமன்றங்கள் செயல்பட்டு வந்தன. நிலுவையிலுள்ள வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக 2012–2013–ஆம் ஆண்டு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை தொடர்ந்து புதிதாக 4 வருவாய் நீதிமன்றங்கள் லால்குடி, மன்னார்குடி, திருநெல்வேலி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் 2013–ஆம் ஆண்டு முதல் தோற்றுவிக்கப்பட்டு தற்போது மாநிலத்தில் கீழ்க்கண்ட பத்து வருவாய் நீதிமன்றங்கள் நீதிமுறைச் சார்புடைய அதிகாரத்துடன் தனித்துணை ஆட்சியரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| 1. கடலூர் | 6. திருச்சிராப்பள்ளி |
| 2. மயிலாடுதுறை | 7. லால்குடி |
| 3. திருவாரூர் | 8. நாகப்பட்டினம் |
| 4. தஞ்சாவூர் | 9. மதுரை |
| 5. மன்னார்குடி | 10. திருநெல்வேலி |

### 4.3.1 வருவாய் நீதிமன்றங்களில் முடிவு செய்யப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரம்

**1.6.2011 முதல் 31.5.2017 வரை**

| | | |
|---|---|---|
| 1 | 31.5.2011 அன்று நிலுவையில் இருந்த வழக்குகள் | 9,806 |
| 2 | 1.6.2011 முதல் 31.5.2017 வரை வரப்பெற்ற வழக்குகள் | 35,827 |
| 3 | முடிவு செய்யப்பட்டவை | 41,569 |
| 4 | 31.5.2017 அன்று நிலுவையில் உள்ள வழக்குகள் | 4,064 |

**1.4.2016 முதல் 31.5.2017 வரை**

| | | |
|---|---|---|
| 1 | 31.3.2016 அன்று நிலுவையில் இருந்த வழக்குகள் | 7,410 |
| 2 | 1.4.2016 முதல் 31.5.2017 வரை வரப்பெற்ற வழக்குகள் | 6,200 |
| 3 | முடிவு செய்யப்பட்டவை | 9,546 |
| 4 | 31.5.2017 அன்று நிலுவையிலுள்ள வழக்குகள் | 4,064 |

வருவாய் நீதிமன்றங்களின் பணிகள் கணினிமயமாக்கப்பட்டு முன்னேற்ற அறிக்கை இணையதளம் மூலம் பெறப்பட்டு தலைமையிடத்திலிருந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

### 4.3.2 குத்தகை சட்டங்கள்

கீழ்க்கண்ட சட்டங்கள் வருவாய் நீதிமன்றங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

I) **தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம், 1955 (தமிழ்நாடு சட்டம் 25/55)**

நில உடைமையாளருக்கு குத்தகைத் தொகை கொடுக்காமல் இருத்தல், குத்தகை நிலத்திற்கோ அல்லது அந்நிலத்தில் விளையும் பயிர்களுக்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்படுதல், வேளாண்மை அல்லது தோட்டப்பயிர் அல்லாத பிற காரணத்திற்காக நிலத்தினை உபயோகித்தல், நில உரிமையாளரின் உரிமையை மறுத்தல் தவிர, வேறு காரணங்களுக்காக குத்தகைதாரர்கள் குத்தகை சாகுபடி செய்யும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதிலிருந்து இச்சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது. நில உரிமையாளர்களுக்கும்

குத்தகைதாரர்களுக்கும் இடையே ஏற்படும் தகராறுகள் வருவாய் நீதிமன்றங்களால் தீர்வு செய்யப்படுகின்றன.

II) **தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம், 1956 (தமிழ்நாடு சட்டம் 24/56)**

இச்சட்டம் மொத்த விளைச்சலில் 25 விழுக்காடு மட்டும் நிலஉரிமைதாரருக்கு பயிரிடும் குத்தகைதாரர்களால் செலுத்தப்பட வேண்டிய குத்தகைத் தொகையை நிர்ணயிக்க வகை செய்கிறது. குத்தகையை பணமாகவோ அல்லது விளை பொருளாகவோ செலுத்தலாம். பயிரிடும் குத்தகைதாரர்கள் பயிரிடுவதற்கான செலவுகள் முழுவதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். நில உரிமையாளர்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய அனைத்து நிலுவைகளுக்கும் பொறுப்பாவார்கள்.

III) **தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்கள் நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1961 (தமிழ்நாடு சட்டம் 57/61)**

தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்கள் நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்)

சட்டத்தின்படி, பொது அறக்கட்டளைகளின் நிர்வாகத்தினை வரைமுறைபடுத்தி வேளாண் நிலங்களை சொந்த சாகுபடி செய்யவோ அல்லது குத்தகைக்கு விடவோ வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்படி அறக்கட்டளைகள் தங்களுடைய சொந்த சாகுபடிக்கு, அதிகபட்சமாக 20 தர ஏக்கர் நிலம் மட்டும் வைத்துக்கொள்ளலாம், அதற்கு மேலுள்ள விவசாய நிலத்தை பிறருக்கு குத்தகைக்குவிட வேண்டும். பொது அறக்கட்டளைகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் இடையே ஏற்படும் தகராறுகளை வருவாய் நீதிமன்றங்கள் மூலம் தீர்வு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

IV) **தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் ஆவணம்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 10/69)**

இச்சட்டத்தில் பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களைக் குத்தகைதாரர்களாக பதிவு செய்து கொள்வதன் மூலம் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. இச்சட்டத்தின்கீழ், வட்டாட்சியர்

குத்தகை உரிமையினை பதிவு செய்யும் பதிவு அலுவலர் ஆவார்.

**V) தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1971 மற்றும் திருத்தியவாறு**

இச்சட்டத்தில் குத்தகைதாரராகவோ அல்லது உரிமம் பெற்றவராகவோ குடியிருப்பு அமைத்து, **1.4.1990** தேதியில் அனுபவித்து வரும் விவசாயி அல்லது விவசாயத் தொழிலாளருக்கு குடியிருப்பு உரிமை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள சொந்த வீட்டுமனை இல்லாத கிராமப்புற கைவினைஞர்களும் மேற்கண்ட பலன்களைப் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

**4.3.3 விவசாய தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்தல்**

விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறுபட்ட விவசாயப் பணிகளுக்காக குறைந்தபட்ச ஊதியச்சட்டத்தின்கீழ் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்கீழ்

குறைந்தபட்ச ஊதியம் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றியமைக்கப்படுகிறது. நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களைப் பொறுத்தவரை, தமிழ்நாடு வேளாண்மை தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம், 1969 செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**4.4 பூமிதான வாரியம்**

பூமிதான இயக்கம் ஸ்ரீ ஆச்சார்ய வினோபாபாவே அவர்களால் தொடங்கப்பட்டது. பூமிதான இயக்கத்திற்கு 28,050 ஏக்கர் நிலங்கள் தானமாகப் பெறப்பட்டன. அவ்வாறு தானமாக பெறப்பட்ட நிலங்கள் **"தமிழ்நாடு பூமிதான யக்ஞச் சட்டம் 1958" (Tamil Nadu Bhoodan Yagna Act 1958)**–இன்படி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பூமிதான நிலங்கள் பூமிதான வாரியத்தின் மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

2015 ஆம் ஆண்டில் நிலச்சீர்திருத்தத்துறை மறுசீரமைப்பு செய்யப்பட்ட பிறகு, இதுவரை பட்டா மாற்றம் செய்யப்படாமல் இருந்த 1,043.68 ஏக்கர் நிலங்கள்

பூமிதான வாரியத்தின் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டு உள்ளன. மேலும் 48.17 ஏக்கர் நிலங்களில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

மாவட்டங்களிலிருந்து பூமிதான பணிகளின் முன்னேற்ற அறிக்கை இணையதளம் மூலம் பெறப்பட்டு தலைமையிடத்திலிருந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

பூமிதான நிலங்களின் முறைகேடான விற்பனையை தடுக்கும் பொருட்டு பதிவுத்துறை புள்ளி விவரங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு பூமிதான நிலங்களின் வழிகாட்டி மதிப்பு ‘0’ (பூஜ்யம்) ஆக மாற்றப்பட்டுள்ளது. இது பூமிதான நிலங்களின் முறைகேடான மாற்றத்தினை தடுப்பதற்கான மற்றொரு முயற்சியாகும்.

இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான் முதல்முறையாக பூமிதான நிலங்களை பாதுகாக்கும் பொருட்டு இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4.5 முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம், 2011

- முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் **10.9.2011** முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இத்திட்டத்தின் கீழ் உறுப்பினர்களை கணக்கெடுக்கும் பணி கிராம நிர்வாக அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு, கிராம அளவில் கணக்கெடுப்பு பதிவேடுகளில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

### 4.5.1 உறுப்பினராக பதிவு செய்ய தகுதிகள்

**18** வயது முதல் **65** வயது வரையுள்ள விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயத் தொழிலாளர்கள், **2.50** ஏக்கர் நன்செய் அல்லது **5.00** ஏக்கர் புன்செய் அளவிற்குட்பட்ட நிலத்தை சொந்தமாக வைத்திருந்து அதில் நேரடியாக பயிர் செய்யும் குறு/சிறு விவசாயிகள் மற்றும் பயிரிடு குத்தகைதாரர்கள் இத்திட்டத்தின் கீழ் மூல உறுப்பினர்களாகவும், அவர்களைச் சார்ந்து வாழும் பொருள் ஈட்டாத குடும்ப உறுப்பினர்கள் சார்ந்து வாழும் உறுப்பினர்களாகவும் பதிவு

செய்ய தகுதியுடையவர்கள் ஆவார்கள். இத்திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள மொத்த உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:–

**அட்டவணை–4.4**
**மூலஉறுப்பினர்கள் மற்றும் சார்ந்து வாழும் உறுப்பினர்களின் விவரம்**

| | | |
|---|---|---|
| 1 | மூல உறுப்பினர்கள் | 1,51,10,270 |
| 2 | சார்ந்து வாழும் உறுப்பினர்கள் | 1,30,74,865 |
| | **மொத்தம்** | **2,81,85,135** |

- இத்திட்டத்தின் கீழ் தகுதியின் அடிப்படையில், புதிய உறுப்பினர்களைச் சேர்த்தலும், இறப்பு போன்ற காரணங்களுக்காக நீக்குதலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- உறுப்பினர்களின் விவரங்கள் ஆதார் எண்களுடன் இணைக்கும் பணி தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் நடைபெற்று வருகிறது.
- இத்திட்டத்தின் செயல்பாடுகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

### 4.5.2 நிதி உதவி

இத்திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

**அட்டவணை–4.5**
**மூல உறுப்பினர்கள் மற்றும் சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்கான நலத்திட்ட உதவிகளின் விவரம்**

| மூல உறுப்பினர்களுக்காக | சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்காக |
|---|---|
| (1) திருமண உதவித்தொகை<br>(2) முதியோர் ஓய்வூதியம்<br>(3) உறுப்பினர்களின் தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவி<br>i) காசநோய்<br>ii) புற்றுநோய்<br>iii) எச்.ஐ.வி/ எய்ட்ஸ்<br>iv) இடைச்சவ்வூடு மூலம் பிரித்தல் **(Dialysis)**<br>v) கை கால் முறிவு மற்றும் நிலைகுலைவு<br>vi) நரம்பு சம்பந்தமான நோய் | (1) கல்வி உதவித்தொகை<br>(2) திருமண உதவித்தொகை<br>(3) எச்.ஐ.வி–யினால் உயிரிழந்த மூல உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான உதவித்தொகை<br>(4) ஈமச்சடங்கு செலவு |

| மூல உறுப்பினர்களுக்காக | சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்காக |
|---|---|
| vii) முதுகு தண்டுவடம் பாதிப்பு<br>viii) இதய நோய்<br>ix) பார்வை இழத்தல்<br>x) கல்லீரல் நோய்<br>xi) சிறுநீரக நோய்<br>xii) மனநிலை பாதிப்பு<br>xiii) அரிவாள் செல் ரத்த சோகை<br>xiv) ரத்த அளிவு சோகை<br>xv) ரத்த உறையா நோய்<br>**(4)** விபத்து நிவாரணம்<br>**(5)** இயற்கை மரண உதவித்தொகை<br>**(6)** ஈமச் சடங்கு செலவு | |

### 4.5.3 இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

- அரசின் மற்ற எந்த திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை பெற்றிருந்தாலும் இத்திட்டத்தின் கீழ் கல்விக்கான உதவித் தொகையினை கூடுதலாக பெறலாம்.

- ஆண்களுக்கும் திருமண உதவித் தொகை இத்திட்டத்தில் மட்டுமே வழங்கப்படுகிறது.
- காசநோய், புற்றுநோய் முதலிய கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள மூல உறுப்பினர்களுக்கு தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவித் தொகை ரூ.1,000/– வழங்கப்படுகிறது.
- எச்ஐவி–யினால் உயிரிழந்த மூல உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கு மாத உதவித் தொகை ரூ.1,000/– வழங்கப்படுகிறது.
- மூல உறுப்பினரின் இறப்புக்குப் பின்னரும் அவரைச் சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்கான உதவித் தொகை தொடர்ந்து வழங்கப்படுகிறது.
- இயற்கை மரணத்திற்கான நிவாரணத் தொகை ரூ.10,000/– லிருந்து ரூ.20,000/– ஆக உயர்த்தி 24.4.2017 முதல் வழங்கப்படுகிறது.
- உறுப்பினர் இறந்தால் ஈமச் சடங்குக்கான உதவித் தொகை ரூ.2,500/– வழங்கப்படுகிறது.

இந்த உதவித் தொகை பெற இறப்பு சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

**4.5.4 செலவு மற்றும் பயனாளிகள் விவரம்**

**அ. மூல உறுப்பினர்களுக்கான உதவிகள் பின்வருமாறு**

**1. திருமண உதவி**

மூல உறுப்பினரின் திருமணத்திற்கு ஆண்களுக்கு ரூ.8,000/–மும் பெண்களுக்கு ரூ.10,000/–மும் வழங்கப்படுகிறது. **10.9.2011** முதல் **31.5.2017** வரை **33,540** பயனாளிகளுக்கு ரூ.**28.23** கோடி வழங்கப்பட்டுள்ளது.

**1.4.2016** முதல் **31.5.2017** வரை **12,690** பயனாளிகளுக்கு ரூ.**10.82** கோடி வழங்கப்பட்டுள்ளது.

**2. முதியோர் ஓய்வூதியம்**

**60** மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஆதரவற்ற நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியமாக மாதம் ரூ.1,000/– வழங்கப்படுகிறது. **10.9.2011** முதல் **31.3.2014** வரை முதியோர் ஓய்வூதியமாக **20,35,645** பயனாளிகளுக்கு ரூ.**2,058.97** கோடி வழங்கப்பட்டது. முதியோர் ஓய்வூதியம்

**1.4.2014** முதல் வருவாய் நிர்வாகத் துறை மூலம் வழங்கப்படுகிறது.

**3. தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவித்தொகை**

காசநோய், புற்றுநோய் போன்றவைகளால் பாதிக்கப்பட்டுள்ள மூல உறுப்பினர்களின் தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கு மாதாந்திர உதவித்தொகை ரூ.**1,000/–** வழங்கப்படுகிறது. **2012–13** முதல் **31.5.2017** வரை **1,49,214** பயனாளிகளுக்கு ரூ.**89.00** கோடி வழங்கப்பட்டுள்ளது.

**1.4.2016** முதல் **31.5.2017** வரை **36,463** பயனாளிகளுக்கு ரூ.**31.38** கோடி செலவிடப்பட்டுள்ளது.

**4. விபத்து நிவாரணம்**

விபத்தினால் உயிரிழந்த மூல உறுப்பினர்களின் குடும்பத்திற்கு நிதிஉதவி மூலம் துயர்துடைக்கும் வகையில் விபத்து நிவாரணமாக ரூ.**1,00,000/–**மும், ஈமச் சடங்கு செலவுக்காக ரூ.**2,500/–**மும் வழங்கப்படுகிறது. மேலும், விபத்து காயங்களுக்கு கீழ்க்கண்டவாறு விபத்து நிவாரணம் வழங்கப்படுகிறது.

## அட்டவணை–4.6
## விபத்து காயங்களுக்கான உதவி

<table>
<tr><th>வ. எண்</th><th>காயங்களின் விபரம்</th><th>தொகை (ரூபாயில்)</th></tr>
<tr><td>1.</td><td>இரண்டு கை அல்லது இரண்டு கால் இழத்தல்</td><td rowspan="3">1,00,000</td></tr>
<tr><td>2.</td><td>ஒரு கை மற்றும் ஒரு கால் இழத்தல்</td></tr>
<tr><td>3.</td><td>இரண்டு கண்களிலும் பார்வை முழுவதுமாக இழத்தல்</td></tr>
<tr><td>4.</td><td>ஒரு கை அல்லது ஒரு கால் இழத்தல்</td><td>50,000</td></tr>
<tr><td>5.</td><td>பக்கவாதம்</td><td>50,000</td></tr>
<tr><td>6.</td><td>மேலே குறிப்பிட்ட உறுப்புகள் அல்லாமல் கடுமையான காயங்களின் காரணமாக கை கால்களை இழத்தல்</td><td>20,000</td></tr>
</table>

இத்திட்டத்தின் கீழ் 10.9.2011 முதல் 31.5.2017 வரை 20,721 பயனாளிகளுக்கு ரூ.203.67 கோடி விபத்து நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

1.4.2016 முதல் 31.5.2017 வரை, 5,529 பயனாளிகளுக்கு ரூ.55.30 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 5. இயற்கை மரணத்திற்கான உதவி

மூல உறுப்பினர் இயற்கையாக மரணமடைந்தால், அவரது குடும்பத்திற்கு நிவாரணம் அளிக்கும் வகையில் ரூ.10,000/– வழங்கப்படுகிறது. இத்தொகை 24.4.2017 முதல் ரூ.20,000/–ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. மேலும், ஈமச் சடங்கு செலவுக்காக ரூ.2,500/– வழங்கப்படுகிறது. 10.9.2011 முதல் 31.5.2017 வரை 3,06,343 பயனாளிகளுக்கு ரூ.377.93 கோடி வழங்கப்பட்டுள்ளது.

1.4.2016 முதல் 31.5.2017 வரை 75,250 பயனாளிகளுக்கு ரூ.91.53 கோடி வழங்கப்பட்டுள்ளது.

## ஆ. சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்காக

சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்கான உதவிகள் பின்வருமாறு:–

### 1. கல்வி உதவி

மூல உறுப்பினரின் குழந்தைகள் உயர் கல்வியினை தொடரும் பொருட்டு கீழ்க்கண்டவாறு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

## அட்டவணை—4.7
## கல்வி உதவித்தொகை

| வ. எண் | கல்வி விவரம் | விடுதியில் தங்காதோர் | | விடுதியில் தங்குவோர் | |
|---|---|---|---|---|---|
| | | ஆண் (ரூ) | பெண் (ரூ) | ஆண் (ரூ) | பெண் (ரூ) |
| 1. | தொழிற் பயிற்சி நிறுவனம் (ITI) மற்றும் பல்தொழில்நுட்ப பயிற்சி (Polytechnic) | 1250 | 1750 | 1450 | 1950 |
| 2. | கவின்கலை, ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டயப்படிப்பு (Diploma in Fine Arts, Teacher Education and Nursing) (ஆண்டொன்றுக்கு) | 1250 | 1750 | 1450 | 1950 |
| 3. | இளங்கலைப் பட்டப்படிப்பு (Bachelor Degree) மற்றும் கவின் கலையில் இளங்கலைப் பட்டம், ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டப்படிப்பு (Bachelor Degree in Fine Arts, Teacher Education and Nursing) (ஆண்டொன்றுக்கு) | 1750 | 2250 | 2000 | 2500 |
| 4. | முதுநிலைப் பட்டப்படிப்பு (Post Graduate) மற்றும் கவின் கலை மற்றும் | 2250 | 2750 | 3250 | 3750 |

| வ. எண் | கல்வி விவரம் | விடுதியில் தங்காதோர் | | விடுதியில் தங்குவோர் | |
|---|---|---|---|---|---|
| | | ஆண் (ரூ) | பெண் (ரூ) | ஆண் (ரூ) | பெண் (ரூ) |
| | செவிலியர் முதுகலை பட்டப்படிப்பு . (Post Graduate Degree in Fine Arts and Nursing) (ஆண்டொன்றுக்கு) | | | | |
| 5. | சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை அறிவியல், வேளாண்மை அல்லது அது தொடர்பான பாடங்களில் தொழிற்கல்வி (Professional Courses) (ஆண்டொன்றுக்கு) | 2250 | 2750 | 4250 | 4750 |
| 6. | முதுநிலை தொழிற்கல்வி (Post Graduate Professional Courses) (ஆண்டொன்றுக்கு) | 4250 | 4750 | 6250 | 6750 |

இந்த உதவித்தொகை ஆண்டுதோறும் படிப்பினை முடிக்கும் வரை வழங்கப்படுகிறது. படிப்பு இடைநிறுத்தப்பட்டால் இவ்வுதவித் தொகை நிறுத்தப்படும். 10.9.2011 முதல் 31.5.2017 வரை 14,15,099

மாணவ மாணவிகளுக்கு ரூ.338.84 கோடி கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

1.4.2016 முதல் 31.5.2017 வரை 2,85,128 மாணவ மாணவிகளுக்கு ரூ.71.45 கோடி கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**2. திருமண உதவி**

மூல உறுப்பினர்களைச் சார்ந்து வாழும் உறுப்பினர்களின் திருமணத்திற்காக ஆண்களுக்கு ரூ.8,000/–மும் பெண்களுக்கு ரூ.10,000/–மும் வழங்கப்படுகிறது. 10.09.2011 முதல் 31.5.2017 வரை 2,88,684 பயனாளிகளுக்கு ரூ.251.99 கோடி வழங்கப்பட்டுள்ளது.

1.4.2016 முதல் 31.5.2017 வரை 58,628 பயனாளிகளுக்கு ரூ.50.52 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**3. எச்.ஐ.வி.யினால் உயிரிழந்த மூல உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தை களுக்கான உதவித்தொகை**

மூல உறுப்பினர் எச்.ஐ.வி/ எயிட்ஸ்–ஆல் பாதிக்கப்பட்டு, பெற்றோரை (ஒருவர்/ இருவரையும்) இழந்த 0–18 வயது வரை உள்ள ஆதரவற்ற

குழந்தைகளுக்கு மாதம் ரூ.1,000/–வழங்கப்படுகிறது. 2013–14 முதல் 31.5.2017 வரை 4,308 பயனாளிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.2.87 கோடி வழங்கப்பட்டுள்ளது.

1.4.2016 முதல் 31.5.2017 வரை 1,003 பயனாளிகளுக்கு ரூ.1.01 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 4.5.5 செயலாக்கம் (Performance)

1. இத்திட்டத்தின் கீழ், 10.9.2011 முதல் 31.5.2017 வரை 42,53,554 பயனாளிகளுக்கு ரூ.3,351.50 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2. 2016–17–ஆம் ஆண்டில், 3,04,526 பயனாளிகளுக்கு ரூ.206.00 கோடி கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:–

**அட்டவணை–4.8**

**முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 2016–17–ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உதவி விவரம்**


| வ. எண் | உதவி விவரம் | தொகை (கோடியில்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கல்வி உதவி | 44.57 | 1,77,952 |
| 2. | உறுப்பினர்களின் திருமணம் | 6.50 | 7,647 |
| 3. | உறுப்பினரைச் சார்ந்தவர்களின் திருமணம் | 33.67 | 39,049 |

| வ. எண் | உதவி விவரம் | தொகை (கோடியில்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 4. | இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு | 60.64 | 49,911 |
| 5. | விபத்து நிவாரணம் | 38.00 | 3,794 |
| 6. | தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவித்தொகை | 21.92 | 25,471 |
| 7. | எச்.ஐ.வி–யினால் உயிரிழந்த உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான மாதாந்திர உதவித் தொகை | 0.70 | 702 |
| | **மொத்தம்** | **206.00** | **3,04,526** |

3. 2017–18–ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 206 கோடியிலிருந்து ரூ.251 கோடியாக 22 விழுக்காடு உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.


## வரைபடம் 4.1

**முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011–ன் கீழ் 2011–12 முதல் 2017–18 (31.5.2017 வரை) ஆண்டு வாரியான செலவினைக் காட்டும் விளக்கப்படம்**



## வரைபடம் 4.2

## முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011–ன் கீழ் 2011–12 முதல் 2017–18 (31.5.2017 வரை) பயனாளிகளின் வகைப்பாட்டினை காட்டும் விளக்கப்படம்



## 5. நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி

நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையரகம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் அங்கமாக செயல்பட்டு வருகிறது. அரசுக்கு வருவாய் ஈட்டித் தரக்கூடிய துறைகளில் இத்துறையும் ஒன்றாகும். இவ்வாணையரகம், நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978–இன் கீழ் 15.06.1999 வரை கையகப்படுத்தப்பட்ட நகர்ப்புற நிலங்கள் தொடர்பான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. மேலும் இவ்வாணையரகம், நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1966, திருத்தச்சட்டம் 1991–இன் கீழ் 1.07.1981 நாளைய சந்தை மதிப்பின் அடிப்படையில் 24 மாவட்டங்களில் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் நகர்ப்புற நிலவரி தொடர்பான பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

## 5.1 பணியாளர் அமைப்பு

நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித் துறையின் முதன்மை செயலர் மற்றும் ஆணையர் இத்துறையின் தலைவர் ஆவார். ஆணையரகத்தின் உதவி ஆணையர் (தலைமையிடம்) அவருக்கு உதவி புரிகிறார். மைலாப்பூர், தண்டையார்பேட்டை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் ஏழு நகர்ப்புற நிலவரி உதவி ஆணையர்கள் உள்ளனர். இவர்கள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு மாநகராட்சிகளில் நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978—இன்படி கையகப்படுத்தப்பட்ட நகர்ப்புற மிகைவெற்று நிலங்கள் தொடர்பான பணியினையும் 24 மாவட்டங்களில் நகர்ப்புற நிலவரி தொடர்பான பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

## 5.2 தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978

ஒரு சில தனிநபர்களின் கைப்பற்றில் விவசாயமல்லாத நிலங்கள் குவிந்து கிடப்பதை சமமாகப் பகிர்ந்தளிக்கும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 (தமிழ்நாடு சட்டம் 24/1978) இயற்றப்பட்டது. இதனை நிறைவேற்றும் நோக்குடன் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகர்ப்புற கூட்டுப்பகுதிகளில் உள்ள நகர்ப்புற நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978–இன் படி 15.06.1999 வரையிலும் ஒவ்வொரு நகர்ப்புற கூட்டுப் பகுதிகளிலும் உள்ள தனி நபர், குடும்பம் மற்றும் தொழில் நிறுவனம் ஆகியவற்றிற்குத் தகுதியான உச்சவரம்பு விவரம் கீழ்வருமாறு:–

## அட்டவணை—5.1
## தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 இன்படி உச்சவரம்பு

| வ. எண் | நகர்ப்புற கூட்டுப்பகுதி | தனி நபர் (ச.மீ) | குடும்பம் (ச.மீ) | தொழில் நிறுவனம் (ச.மீ) |
|---|---|---|---|---|
| 1. | சென்னை | 500 | 2000 | 2000 |
| 2. | மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி (ம) சேலம் | 1500 | 3000 | 3000 |
| 3. | திருநெல்வேலி | 2000 | 4000 | 4000 |

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 ஆனது தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவு சட்டம், 1999 (தமிழ்நாடு சட்டம் 20/99)—இன் வாயிலாக 16.6.1999 முதல் நீக்கறவு செய்யப்பட்டது. முதன்மைச் சட்டத்தின் கீழ் ஏற்கனவே கையகப்படுத்தப்பட்டு, நீக்கறவு சட்டம் அமலுக்கு வந்த தேதியில் அரசு வசம் உள்ள நிலங்களுக்கு, இந்நீக்கறவு சட்டம் பொருந்தாது. தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978—இன் கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் தற்போதைய நிலை கீழ்வருமாறு:—

**அட்டவணை–5.2**
**தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978–இன்படி கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் விவரம்**

| வ எண் | விவரம் | சதுர மீட்டரில் |
|---|---|---|
| 1. | கையகப்படுத்தப்பட்ட மொத்த பரப்பு | 1,89,79,446 |
| 2. | அரசுத்துறை மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு ஒதுக்கீடு செய்த பரப்பு | 43,70,050 |
| 3. | நீதிமன்ற வழக்குகளில் உள்ள பரப்பு | 32,51,962 |
| 4. | அறியாமல் கிரயம் பெற்றவர்களின் கைப்பற்றில் உள்ள பரப்பு | 23,95,785 |
| 5. | ஆக்கிரமிப்பில் உள்ள பரப்பு (நில உரிமையாளர்கள் மற்றும் உரிமையற்ற ஏனையோர்) | 78,90,234 |
| 6. | ஆக்கிரமிப்பு இல்லாத நிலம் | 10,71,415 |

## 5.3 அறியாமல் கிரயம் பெற்றவர்களின் நிலங்களை வரன்முறை செய்தல்

கையகப்படுத்தப்பட்ட அரசு மிகை வெற்று நிலங்களை, நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தைப் பற்றிய விவரம் அறியாது 1½ மனை வரை குடியிருப்பு நோக்கத்திற்காக வாங்கியிருப்பின், அதனை அரசு

நிர்ணயித்துள்ள நிலமதிப்பினை செலுத்தி வரன்முறை செய்து கொள்ள அரசாணை (நிலை) எண்.649, வருவாய்த்துறை, நாள் 29.07.1998–இன்படி அனுமதிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 1½ மனைக்கு மேல் கிரயம் பெற்ற நிலங்களையும், குடியிருப்பு நோக்கம் அல்லாது மற்ற இதர பயன்பாடுகளுக்கும் கிரயம் பெற்றிருப்பின் இரு மடங்கு/ மும்மடங்கு நிலமதிப்புத் தொகை செலுத்தி வரன்முறைப்படுத்திக் கொள்ள அரசாணை (நிலை) எண். 565, வருவாய்த்துறை, நாள் 26.09.2008–இன்படி அனுமதிக்கப்பட்டது. மேற்படி உத்தரவின்படி நிலம் கையகப்படுத்தப்பட்டதை அறியாமல் கிரயம் பெற்றவர்களுக்கு அக்கிரயத்தினை வரன்முறை செய்யப்பட்டு வருகிறது.

**5.4 தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966 திருத்தச் சட்டம், 1991**

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966, 01.07.1963–இல் விவசாயம் அல்லாத நகர்ப்புற நிலங்களுக்கு வரிவிதிப்பு மற்றும் ஒரு சில நில

உடமையாளர் வசம் நகர்ப்புற நிலம் குவிந்து கிடப்பதைத் தடுக்கும் நோக்கத்துடன் சென்னை மாநகரில் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்கள் மற்றும் சென்னை புறநகர் பகுதிகள், திருநெல்வேலி மாநகராட்சி பகுதி மற்றும் **23** நகராட்சிகளாகிய காஞ்சிபுரம், வேலூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், நாமக்கல், மேட்டூர், ஈரோடு, திண்டுக்கல், பழனி, கொடைக்கானல், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, திருப்பூர், தூத்துக்குடி, இராஜபாளையம், உதகமண்டலம் மற்றும் நாகர்கோவில் ஆகிய நகரங்களில் அமலாக்கப்பட்டது.

மேற்படி வட்டங்களில் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் **1.07.1981–**ஆம் நாளைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு **1.07.1991** முதல் நகர்ப்புற நிலவரி விதிக்கப்படுகிறது.

## அட்டவணை—5.3

## நகர்ப்புற நில வரிவிதிப்பு விவரங்கள்

| சென்னை மற்றும் ஏனைய நகர்ப்பகுதியில் உள்ள நகர்ப்புற நிலங்கள் | | சென்னை புறநகர்ப் பகுதியில் உள்ள நகர்ப்புற நிலங்கள் | |
|---|---|---|---|
| **மனை** | **சந்தை மதிப்பில் சதவீதம்** | **மனை** | **சந்தை மதிப்பில் சதவீதம்** |
| 2 மனைகளுக்குள் | வரி இல்லை | 3 மனைகளுக்குள் | வரி இல்லை |
| 2 – 5 மனைகளுக்குள் | 0.7% | 3 – 7 மனைகளுக்குள் | 0.7% |
| 5 –10 மனைகளுக்குள் | 1% | 7 –10 மனைகளுக்குள் | 1% |
| 10–20 மனைகளுக்குள் | 1.5% | 10–20 மனைகளுக்குள் | 1.5% |
| 20 மனைகளுக்கு மேல் | 2% | 20 மனைகளுக்கு மேல் | 2% |

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், **1966,** திருத்தச்சட்டம் **1991—**இன்படி இச்சட்டம் அமலிலுள்ள **24** மாவட்டங்களில் சுமார் **2** இலட்சம் வரி விதிப்புதாரர்கள் உள்ளனர். பசலி **1426—**இன்படி நகர்ப்புற நிலவரி நடப்புக்கேட்பாக ரூபாய் **19.19** கோடி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புற நிலவரிச்சட்டப் பிரிவு **29**–இன்கீழ் வரி விதிப்பினின்றும் கீழ்க்கண்ட வகையான நிலங்கள் விலக்கு பெறுகின்றன.

(i) மத்திய மாநில அரசு நிலங்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற நிலங்கள்.

(ii) பொது வழிபாட்டுக்கான நிலங்கள்.

(iii) மாநில அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை உபயோகத்திற்கான நிலங்கள்.

(iv) மயானபூமி நிலங்கள்.

(v) சாலைகளாகப் பயன்படும் நிலங்கள்.

(vi) தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக நிலங்கள்.

(vii) பொது பூங்காக்கள், நூலகங்கள் மற்றும் அருங்காட்சியகம் பயன்பாட்டில் உள்ள நிலங்கள்.

(viii) ஆதரவற்றோர் மற்றும் அனாதை விடுதிகள் அமையப்பெற்ற நிலங்கள்.

தர்ம, சமய மற்றும் லோபோகாரி நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் அந்நிறுவனங்களுக்கு இன்னல்

இருப்பின், பிரிவு 27(1)–இன் கீழ் அரசு வரிவிலக்கு அளிக்கிறது.

கீழ்க்கண்ட அமைப்புகளுக்கு அரசு வரிச்சலுகைகளை அளித்துள்ளது.

(1) சிறுதொழில் சான்று பெற்ற தொழிற்சாலைகளுக்கு வரியில் 25 விழுக்காடு, மற்ற தொழிற்சாலைகளுக்கு 10 விழுக்காடு.

(2) அனைத்து சங்கீத நாடக சபைகளுக்கு 50 விழுக்காடு.

(3) திரையரங்குகளுக்கு 10 விழுக்காடு.

(4) குடிசைப் பகுதியாக அறிவிக்கப்பட்ட நிலங்களுக்கு 100 விழுக்காடு மற்றும்

(5) நகர்ப்புற நிலத்தில் கட்டிடம் இருந்து, அது நிலத்தின் உரிமையாளரால் குடியிருப்புக்காக முழுமையாகப் பயன்படுத்தப்பட்டால், நகர்ப்புற நிலவரியில் 50 விழுக்காடு.

## 5.5 நகர்ப்புற நிலவரி சட்டத்தின் கீழ் மேல்முறையீடு/ சீராய்வு அதிகாரம்

நகர்ப்புற நிலவரி உதவி ஆணையர்களால் பிறப்பிக்கப்படும் வரிவிதிப்பு உத்தரவுகளின்பேரில் அதிருப்தி ஏதேனும் இருப்பின், சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள் தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி சட்டம் **1966,** திருத்தச்சட்டம் **1991–**இன் பிரிவு **20(1)–**இன் கீழ் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யலாம். தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி சட்டம் **1966,** திருத்தச்சட்டம் **1991–**இன் பிரிவு **30(1)–**இன் கீழ் முதன்மைச்செயலர் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையருக்கு சீராய்வு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு ஓர் அறிவிக்கையின் மூலம் நேரடியாக ஆஜராக வாய்ப்பு அளிக்கப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு, முதன்மைச்செயலர்/ நிலச்சீர்திருத்த ஆணையரால் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

## 6. நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம்

### 6.1. நிலஅளவை இயக்குநரகத்தின் வரலாறு

நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரகம் 150 ஆண்டுகளை கடந்த தமிழக அரசின் மிகவும் பழமையான துறைகளில் ஒன்றாகும். நிலம் என்பது இன்று வரையிலும் மிக முக்கியமான உற்பத்திக்காரணியாகவும், துல்லியமான அளவுகளை உள்ளடக்கியதும், வலிமையான மற்றும் உறுதியான பதிவு முறைகளையும் நம்பகத்தன்மையுடைய நில உரிமைகளையும் நிலைநாட்டி பொது நிர்வாகத்தில் இவ்வியக்குநரகம் மிகவும் முக்கியமான பங்கை வகிக்கிறது.

முதலாம் இராஜ இராஜ சோழ சாம்ராஜ்ய காலத்தில் முறையான நிலஅளவைப் பணி துவங்கப்பட்டது. தொடர்ந்து, பின்னர் வந்த ஆட்சிக் காலங்களில் இம்மரபு பின்பற்றி வரப்பெற்றது. நவீன முறையில் நிலஅளவை பணிகள் ஆங்கிலேய ஆட்சியில் துவங்கப்பட்டது. கர்னல் வில்லியம் லேம்டன் என்பவர் கி.பி.1802–இல் பெரு முக்கோண நிலஅளவை முறையை **(Great**

**Trigonometrical Survey)** துவக்கி 36 அங்குல அளவுள்ள பெரியதும், அரை டன் எடையைக் கொண்டதுமான தியோடலைட் கருவி உதவியுடன் பரங்கிமலையிலிருந்து சோழிங்கநல்லூர் அருகிலுள்ள பெரும்பாக்கம் வரையான 12 கி.மீ. தூரத்தை அடிக்கோடாக கொண்டு அளவீடு செய்தார்.

உலக புகழ்பெற்ற 'பெருமுக்கோண' அளவையின் துவக்கமாக தமிழ்நாடு இருந்து வருகிறது என்பதுடன் இந்தியா முழுவதும் இப்பணியினை முடிக்க 62 ஆண்டுகள் ஆகியுள்ளது. இவ்வாறாக கடைப்பிடித்து வரப்பட்டு காலமுறையாக மேம்பாடு அடைந்து வந்துள்ள இத்துறை நிலஅளவர்களின் அவசியமான பணிகளுக்கு விரைந்து உதவிடும் வகையில் பூகோள நிலைக்கலன் கருவி/ வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி (Global Positioning System/ Differential Global Postitioning System) மற்றும் டிரோன் மவுன்டட் புகைப்பட கருவி (Drone Mounted Cameras)/ LIDAR என நவீன நிலஅளவை கருவிகளைக் கொண்டு பணிகளை மேற்கொள்ளும் நிலையை அடைந்துள்ளது.

இவ்வியக்குநரகம் கீழ்கண்டுள்ள பல்வேறு வகையான நிலஅளவை பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றி முடித்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | துவக்க நிலஅளவை | – | 1826 |
| 2. | ரயத்துவாரி முதல் நிலஅளவை | – | 1858 |
| 3. | மலைக்கிராம நிலஅளவை | – | 1883 |
| 4. | நகர நிலஅளவையில் உள்ள பிளாக் வரைபடங்கள் | – | 1891–1894 |
| 5. | மறு நிலஅளவை | – | 1905 – 1926 |
| 6. | நிலஉடைமை மேம்பாட்டுத்திட்டம் | – | 1979 – 1987 |
| 7. | நத்தம் நிலஅளவை | – | 1989 – 1992 |
| 8. | துணை நகர நிலஅளவை | – | 1989 – 1997 |

இவ்வனைத்து நிலஅளவை பணிகளும், கோணமாணி, சங்கிலி மற்றும் நேர்க்கோணக்கட்டை ஆகியவற்றைப் பயன்படுத்தி நிறைவேற்றப்பட்டன. கசரா, பிளேன் டேபிள், முக்கோணம், ரே முறை, காலிக்கோட் முறை முதலான பல்வகை முறைகள் பரீட்ச்சிக்கப்பட்டன. ஆனால், துல்லியத்தன்மை மற்றும் சிறந்த செயல்பாடுகள் காரணமாக மூலைவிட்ட மற்றும் குத்தளவு முறைகளே அதிகமாக பயன்படுத்தப்பட்டன.

முந்தைய நிலஅளவையின் துல்லியத்தன்மை தற்போதைய உயர் தொழில்நுட்பம் வாய்ந்த டி.ஜி.பி.எஸ் மற்றும் ஈ.டி.எஸ் கருவிகளின் பயன்பாட்டுடன் ஒப்பிடும்போது சிறப்பாக இருக்கிறது. **1852–இல்** பழமையான கோணமாணியைக் கொண்டு எவரெஸ்ட் சிகரத்தை அளந்த நிலஅளவர் ராதாநாத் சிக்தார் என்பவர் அதன் உயரமாக **29,002** அடிகள் எனக் குறிப்பிட்டுள்ளதை தற்போதைய நவீன கருவிகள் **29,037** அடிகள் என உறுதிப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. இது நிலஅளவை முறையில் பின்பற்றப்பட்ட தொழில்நுட்பத்தின் உறுதிப்பாட்டையும் முன்னாட்களில், நிலஅளவர்களிடமிருந்த அர்ப்பணிப்பு உணர்வையும் வெளிப்படுத்துவதாக உள்ளது.

## 6.2 துறையின் அமைப்பு நிலை

**18.07.2001** முதல் “நிலஅளவை இல்லத்தில்” அமையப்பெற்றுள்ள இவ்வியக்ககம் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம் என இரு பிரிவுகளைக் கொண்டது. இவ்வியக்ககத்தின் மூலம் அனைத்து நிலஅளவை மற்றும்

நிலவரித்திட்டம் சார்ந்த திட்டங்கள் மற்றும் இது தொடர்பான இதர பணிகள், வடிவமைக்கப்பட்டு, செயல்படுத்தி மற்றும் கண்காணித்து வரப்படுகிறது. மத்திய நிலஅளவை அலுவலகம் இவ்வியக்ககத்தின் தொழில்நுட்ப மையமாக விளங்குவதுடன், வரைபடங்கள் தயாரித்தல் பணிகளுக்கு உதவுவதுடன், அதனை கண்காணிக்கவும் செய்கிறது. அமைச்சுப் பணியாளர்கள், கண்காணிப்பு அலுவலர்கள், வரைவாளர்கள், நிலஅளவர்களால் மேற்கொள்ளப்படும் பணிகள் ஒவ்வொரு உதவி இயக்குநரின் தலைமையிலான மாவட்ட நிலஅளவை அலுவலகங்களால் மேற்கொள்ளப்படுகிறது. மாவட்ட அளவிற்குக் கீழாக, வட்டாட்சியர் அலுவலகங்களில் உள்ள நிலஅளவைப் பிரிவுகள், நிலஅளவை குறியீடு மற்றும் நிலஆவணங்கள் பராமரித்தல், நிலஉரிமை மற்றும் பின்னர் அதில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவற்றினை உரிய பதிவேடுகளில் பதிவு செய்தல் ஆகிய பணிகளுக்குப் பொறுப்பானவையாகும்.


நிலஅளவை பதிவேடுகள் துறையில் பல்வேறு பிரிவுகளின் கீழ் உள்ள பணியிடங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:—

**அட்டவணை—6.1**
**நிலஅளவை பதிவேடுகள் இயக்குநரகத்தில் உள்ள பணியிடங்களின் எண்ணிக்கை**

| வ.எண் | பிரிவு | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நிலஅளவை பிரிவு | 5,504 |
| 2 | தொழில்நுட்ப பிரிவு | 2,079 |
| 3 | அமைச்சுப்பிரிவு | 1,079 |
| 4 | இதர வகை | 19 |
| | **மொத்தம்** | **8,681** |

இயக்குநரகத்தின் அமைப்பு விளக்கப்படம் பட்டியல்—I-இல் தரப்பட்டுள்ளது.

## பட்டியல்–I
## அமைப்பு விளக்க படம்



### 6.2.1 பராமரிப்பு பணி

நிலப்பரிவர்த்தனை குறித்து பொது மக்களிடமிருந்து ‘இ’சேவை மையங்கள் மூலமாகவும் பத்திரப்பதிவுத்துறையின் மூலமாகவும் பெறப்படும் விண்ணப்பங்கள் வட்ட அலுவலக நிலஅளவைப் பிரிவில் பதிவு செய்யப்பட்டு தொடர்புடைய குறுவட்ட அளவர்களுக்கு அனுப்பப்படுகின்றன. அவ்வாறு பெறப்படும் விண்ணப்பங்களின் மீது புலத்தணிக்கை செய்து பெறப்படும் முன்மொழிவுகள், வட்ட அலுவலக வட்ட ஆவண முதுநிலை வரைவாளர்கள் மற்றும் வட்ட துணை ஆய்வாளர்கள் ஆகியோரால் கூராய்வு செய்யப்பட்டு வட்டாட்சியரால் ஒப்புதல் செய்யப்பட்டு புல எல்லை அளவு மற்றும் பட்டா மாறுதல் உள்ளிட்ட ஆணைகள் வழங்கப்படுகின்றன. இது வட்ட அலுவலகத்தின் வழக்கமான பணிகளாகும்.

## 6.3 தற்போதைய திட்டங்கள்

### 6.3.1. நத்தம் நிலஅளவை

2007–இல் நீலகிரி மாவட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட நத்தம் திட்டப்பணிகளைத் தவிர

தமிழ்நாட்டில் இப்பணிகள் 1987–இல் துவக்கப்பட்டன. வருவாய் ஆவணங்களில் நத்தம் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டு, குடியிருப்புகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலங்களை அளவிடுவது நத்தம் அளவையாகும். மூல நிலஅளவை மற்றும் மறுநில அளவைப் பணிகளில், புறம்போக்கு நிலங்கள் அளவை செய்யப்படவில்லை என்பதுடன், பதிவேடுகளில் நில உரிமையாளரின் உரிமை குறித்து தனியாக தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, இவ்வகையான உரிமைகளை தீர்மானிக்க நத்தம் அளவை மற்றும் நிலவரித்திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவை குறித்த விவரங்கள் ‘‘அ’’ பதிவேட்டில் பதிவு செய்வதுடன் நில உரிமையாளருக்கு பட்டாவும் வழங்கப்பட்டன.

நீலகிரி மாவட்டம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் அம்பத்தூர் வட்டம் ஆகியவற்றில் தற்போது நடைபெற்று வரும் நிலவரித்திட்டப் பணிகள் தவிர்த்து இதர அனைத்து மாவட்டங்களிலும் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டப் பணிகள் முடிவடைந்துள்ளன.

### 6.3.2 மலை கிராம அளவை

1983–இல் 6 மாவட்டங்களில் இடம்பெற்றுள்ள 67 கிராமங்களில் துவக்கப்பட்ட மலைக்கிராம நில அளவைப் பணிகள் முழுவதும் முடிவடைந்து, பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 6.3.3 நகர அளவை

பெரும்பாலும் கட்டுமானங்கள் நிறைந்த நகரப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நகர அளவை பணிகள் என்பது கிராமங்களில் மேற்கொள்ளப்படும் கடாஸ்ட்ரல் நிலஅளவையிலிருந்து சற்று மாறுபட்ட ஒன்றாகும். இங்கு தெருக்களுடன், ட்ராவர்ஸ் கோடுகளை ஒருங்கிணைத்து, பிளாக் வாரியாக நிலஅளவை செய்யப்படுவதுடன், அவை குறித்த விவரங்கள் வார்டு வரைபடம், பிளாக் வரைபடம், நகர நில அளவைப் பதிவேடு மற்றும் சிட்டா என பராமரிக்கப்படுகிறது. மேலும், புதிய பகுதிகள் நகராட்சிகளாகவும் மாநகராட்சிகளாகவும் அரசால் அறிவிக்கப்படும் போதெல்லாம், நகர அளவை முறைகளைக் கொண்டு, அப்பகுதிகள் புதிதாக அளவை செய்யப்படுகின்றன.

தற்பொழுது தமிழ்நாட்டில், 12 மாநகராட்சிகளும், 125 நகராட்சிகளும் உள்ளன. இந்த நகரங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் நகரளவை பணிகள் முன்னேற்றம் குறித்து கீழே தரப்பட்டுள்ளது:

**அட்டவணை–6.2**
**நகர அளவைப் பணிகள் நடைபெறும் விவரம்**

| மாநகராட்சிகள் | | |
|---|---|---|
| 1 | மொத்த மாநகராட்சிகள் | 12 |
| 2 | மாநகராட்சியில் பழைய எல்லைகளின்படி நகர நிலஅளவை பணி (மரபு சார்ந்த நிலஅளவை முறைகளின்படி) | 12 |
| 3 | மாநகராட்சிகளின் விரிவாக்கப் பகுதிகளில் நவீன நில அளவை முறைப்படி நகர நில அளவைப் பணி முன்னேற்றத்தில் உள்ளவை | 6 |
| 4 | நகர அளவைப் பணி துவங்கப்பட உள்ள மாநகராட்சிகள் (நவீன நிலஅளவை கருவிகள் மூலமாக) | 6 |

| நகராட்சிகள் | | |
|---|---|---|
| 1 | மொத்த நகராட்சிகள் | 125 |
| 2 | நகர அளவை முடிக்கப்பட்டது (மரபு சார்ந்த முறைகளின்படி) | 84 |
| 3 | நகர அளவைப் பணி முன்னேற்றத்தில் உள்ளவை (நவீன நில அளவை) | 13 |
| 4 | நகர அளவைப் பணி துவங்கப்பட உள்ள நகராட்சிகள் (நவீன நிலஅளவை கருவிகள் மூலமாக) | 28 |

**6.3.4 நவீன கருவிகளைக் கொண்டு நிலஅளவைப் பணிகள்**

நவீன கருவிகளைக் கொண்டு நிலஅளவை செய்வது மில்லி மீட்டர் (மி.மீ.) நிலையிலான துல்லியத்தன்மையை தருகிறது என்பதுடன் சிறுசிறு நிலப்பகுதிகள் மற்றும் அவற்றின் பண்புகளை இலக்கமுறை தரவுதளத்தில் உருவாக்கவும் உதவுகிறது. இது நிலஅளவர்களின் உதவியில்லாமல் பொதுமக்கள் தம்முடைய நிலங்களை கண்டறிவதற்கும், அவற்றின் விவரங்களை தெரிந்துகொள்வதற்கும் பயன்படுகிறது என்பதுடன் இது வெளிப்படைத்தன்மையையும் உருவாக்குகிறது.

கணினிப்படுத்தப்பட்ட வெளிசார்ந்த ஆவணங்களை (வரை படங்கள்) பூகோள தகவல் அமைப்பு வெளியில் பதிவிட இயலும் என்பதுடன் இது நிலப்பயன்பாட்டுத் திட்டம் மற்றும் அதன் மேலாண்மையில் பெரிய அளவில் பங்களிக்கவும் செய்கிறது. மேலும், இலக்கமுறைப்படுத்தப்பட்ட வரைபடங்களின் மீது செயற்கைகோள் வரைபடங்களை

மேலடுக்குவதால் அரசு மற்றும் பொதுத் துறை நிலங்கள் ஆட்சேபணைக்குரிய வகையில் பயன்படுத்தப்படுவது கண்டறியப்படும் என்பதுடன் அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இயலும்.

துவக்கத்தில், நகர நிலஅளவையில் மிகுதியாக காணப்படும் பிழைகள் மற்றும் சிறு பிழைகளால் உருவாகும் சட்டப் பிரச்சனைகள் ஆகியவற்றை குறைப்பதற்கும் நகரப்பகுதிகளில் நிலஅளவைப் பணிகளை விரைந்து செய்வதற்கும் நவீன நிலஅளவைக் கருவிகளான வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி (Differential Global Positioning System)/ மின்னணு நில அளவைக் கருவி (Electronic Total Station) ஆகியவற்றைக் கொண்டு நிலஅளவைப் பணி அறிமுகப்படுத்தப்பட்டது.

நவீன கருவிகளைக் கொண்டு நிலஅளவை செய்யப்பட்ட நகர்ப்புற பகுதிகளின் பட்டியல் விவரம் கீழ்க்கண்டவாறு:

**அட்டவணை–6.3**
**நவீன கருவிகளைக் கொண்டு நிலஅளவை செய்யப்பட்டு வரும் நகர்ப்புற பகுதிகளின் விவரம்**

| வ. எண் | மாவட்டம் | வருவாய் கிராமங்கள் | மாநகராட்சி / நகராட்சிகளின் பெயர்கள் |
|---|---|---|---|
| 1 | சென்னை | சென்னை (அனைத்து கிராமங்களும்) | சென்னை மாநகராட்சி |
| 2 | திருப்பூர் | திருப்பூர் (அனைத்து கிராமங்களும்) | திருப்பூர் மாநகராட்சி |
| 3 | வேலூர் | சத்துவாச்சேரி | வேலூர் மாநகராட்சி |
| 4 | மதுரை | திருப்பரங்குன்றம் | மதுரை மாநகராட்சி |
| 5 | கோயம்புத்தூர் | கவுண்டம்பாளையம் | கோயம்புத்தூர் மாநகராட்சி |
| 6 | ஈரோடு | பெரிய சேமூர் | ஈரோடு மாநகராட்சி |
| 7 | திருச்சிராப்பள்ளி | துவாக்குடி | துவாக்குடி நகராட்சி |
| 8 | திருவள்ளூர் | வளசரவாக்கம் | சென்னை மாநகராட்சி |
| 9 | காஞ்சிபுரம் | பம்மல் | பம்மல் நகராட்சி |
| 10 | காஞ்சிபுரம் | அனகாபுத்தூர் | அனகாபுத்தூர் நகராட்சி |
| 11 | சேலம் | நரசிங்கபுரம் | நரசிங்கபுரம் நகராட்சி |
| 12 | தேனி | கூடலூர் | கூடலூர் நகராட்சி |

| வ. எண் | மாவட்டம் | வருவாய் கிராமங்கள் | மாநகராட்சி / நகராட்சிகளின் பெயர்கள் |
|---|---|---|---|
| 13 | திருநெல்வேலி | அம்பாசமுத்திரம் | அம்பாசமுத்திரம் நகராட்சி |
| 14 | தூத்துக்குடி | காயல்பட்டினம் | காயல்பட்டினம் நகராட்சி |
| 15 | விருதுநகர் | திருத்தங்கல் | திருத்தங்கல் நகராட்சி |
| 16 | ராமநாதபுரம் | கீழக்கரை | கீழக்கரை நகராட்சி |
| 17 | பெரம்பலூர் | பெரம்பலூர் | பெரம்பலூர் நகராட்சி |
| 18 | திண்டுக்கல் | ஒட்டன் சத்திரம் | ஒட்டன் சத்திரம் நகராட்சி |
| 19 | விழுப்புரம் | கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி நகராட்சி |
| 20 | நாகப்பட்டினம் | வேதாரண்யம் | வேதாரண்யம் நகராட்சி |

### 6.3.5 மறு நில அளவை

சட்டமன்ற பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில் பூகோள நிலைக்கலன் கருவி (Global Positioning System)/ மின்னணு நில அளவைக் கருவி (Electronic Total Station) ஆகியவற்றைக் கொண்டு கீழ்க்காணும் முன்னோடி வட்டங்களில் மறுநிலஅளவைப் பணி துவக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1. | அகஸ்தீஸ்வரம் வட்டம் | – | கன்னியாகுமரி மாவட்டம் |
| 2. | ஊத்தங்கரை வட்டம் | – | கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 3. | குன்னூர் வட்டம் | – | நீலகிரி மாவட்டம் |

நில ஆவணங்களை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் மறுநிலஅளவைப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.10.14 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட முன்னோடி வட்டங்களில் மறுநிலஅளவைப் பணி முடிவடைந்தவுடன் மேற்படி மூன்று மாவட்டங்களிலும் மறுநிலஅளவைப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு இரண்டு வருட காலங்களில் முடிக்கப்படும்.

மாநிலம் முழுவதும் மறுநிலஅளவைப் பணிகள் மேற்கொள்வதற்காக நிதி ஒதுக்கீடு கேட்டு மத்திய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. அது அங்கீகரிக்கப்பட்டவுடன் தேவையான பணிகள் துவக்கப்படும்.

நிதி ஒதுக்கீட்டினை எதிர்நோக்கி தொடர்ச்சியான இயக்க குறிப்பு நிலையம் (Continuously Operating Reference Station-CORS) அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் இப்பணி ஆகஸ்ட் 2017–க்குள் நிறைவுபெறும். நிறுவப்படவுள்ள தொடர்ச்சியான இயக்க குறிப்பு நிலையத்துடன் வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி (Differential Global Positioning System/ RTK) முறையில் மேற்கொள்ளப்படும் நிலஅளவைப் பணி மிக விரைவானதாகவும், மி.மீ.க்குள்ளான துல்லியத்தன்மை கொண்டதாகவும் உள்ளது. இப்பணியை 2–3 ஆண்டுகளில் முடித்திட இயலும்.

### 6.3.6. டிஜிட்டல் இந்தியா நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம் (Digital India Land Records Modernization Programme)

மத்திய அரசின் நிதி உதவியுடன் நில ஆவணங்களை நவீனப்படுத்தும் திட்டமான தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டத்தில் மாநில அரசு இணைந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே நடைமுறையில் இருந்து வந்த இரண்டு மத்திய அரசு திட்டங்களான நில

ஆவணங்களை கணினிப்படுத்துதல் மற்றும் வருவாய் நிர்வாகத்தை வலிமைப்படுத்துதல் மற்றும் நில ஆவணங்களை மேம்படுத்துதல் (CLR and SRA & ULR) ஆகியவற்றை ஒருங்கிணைத்து **2008–**இல் தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம் உருவாக்கப்பட்டது. தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம் **01.04.2016** முதல் டிஜிட்டல் இந்தியா நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம் என மறு உருவாக்கம் செய்யப்பட்டு அதற்கான **100** விழுக்காடு நிதி மத்திய அரசால் வழங்கப்படும் வகையில் மாற்றியமைக்கப்பட்டது.

இத்திட்டம் நில ஆவணங்களை நவீனப்படுத்தி பொதுமக்களுக்கு கூடுதல் சேவைகளை வழங்குவது, நிலம் சார்ந்த சொத்துக்களில் ஏற்படும் தகராறுகளைக் குறைப்பது, நில ஆவணங்களை பராமரிப்பதில் வெளிப்படை தன்மைகளை கூடுதலாக்குவது, இலக்கமுறை தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நிலஉரிமையின் உறுதிப்பாட்டை நிலைநிறுத்துவதற்கும்,

சிறப்பான கண்காணிப்பை மேற்கொள்வதற்கும் பயன்படுகிறது.

**6.4 மாநிலத்தில் தற்போது உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் நில ஆவணங்களின் வகைப்பாடுகள் கீழ்க்கண்டவாறு :**

**6.4.1 ஊரகப் பகுதிகளில்...**

**(1) ‘அ’ பதிவேடு**

புல எண் வாரியான கிராம நில ஆவணங்கள் பற்றிய விவரங்களை உள்ளடக்கியது. இதில் மாவட்டம், வட்டம், கிராமம், புல எண், உட்பிரிவு எண், நில வகைப்பாடு, பாசன ஆதாரம், தரம், பரப்பளவு, தீர்வை, உரிமையாளர் பெயர் போன்ற விவரங்கள் அடங்கும்.

**(2) சிட்டா**

பட்டாதாரர் வாரியாக கிராம நில ஆவணங்கள் பற்றிய விவரங்களை உள்ளடக்கியது. பட்டாதாரர் வாரியாக அவர்தம் உடைமையிலுள்ள நிலப் பரப்பளவு பற்றிய விவரங்கள் மற்றும் நன்செய், புன்செய் நிலங்களுக்கான வருவாய்த்தீர்வை கணக்கீட்டு விவரங்களும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**(3) புலப்படப் புத்தகம்**

தனிப்புலம் அல்லது உட்பிரிவுகளை உள்ளடக்கிய வரைபடங்களைக் கொண்டது.

**(4) அடங்கல்**

விளைவிக்கப்படும் பயிர்வகை விவரங்களைக் கொண்டது.

**(5) கிராம வரைபடங்கள்**

கிராமங்களின் அனைத்து புல எண்களையும் உள்ளடக்கியது. கிராமங்களின் எல்லைப்புறங்களின் மாற்றம் ஏற்படும் போது கிராம வரைபடங்களில் தேவையான மாற்றங்களும் செய்யப்படும்.

**(6) கோண அளவை**

கோண அளவை ஆவணங்கள் மற்றும் அது தொடர்பான நிலஅளவை ஆவணங்கள்.

**6.4.2 நகரப் பகுதிகளில்...**

(1) **நகர நில அளவைப் பதிவேடு–** நகர நில அளவைப் புல எண் வாரியாக பழைய புல எண்களுடன் இயைந்த விவரங்கள் மற்றும் நில வகைப்பாடு, பரப்பளவு, கதவு எண், தெருப்பெயர்கள், நில

உரிமைதாரர் பெயர் மற்றும் நிலப் பயன்பாடு போன்ற விவரங்களை உள்ளடக்கியது.

(2) **பிளாக் வரைபடம்–** தெருப்பெயர்களுடன் கூடிய நகர நில அளவைப் புல எண்களின் கூட்டு வரைபடங்களைக் கொண்டது.

## 6.5 நில ஆவணங்களை கணினிமயமாக்கல்

நிலஅளவை ஆவணங்களை கணினிப் படுத்துவதற்கும் அவற்றினை இணையம் மூலமாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கவும், தேசிய தகவலியல் மையத்தின் உதவியுடன் கீழ்க்கண்ட தேவையான மென்பொருள் செயலிகள் மற்றும் தரவு தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

(i) **தமிழ்நிலம்:** தமிழ்நாடு நில நிர்வாகம் மற்றும் மேலாண்மை தகவல் அமைப்பு முறை (Tamil Nadu Info-System on Land Administration and Management) (ஊரகம்) இணையவழியில் நிர்வாகம் செய்வதற்காக அ–பதிவேடு மற்றும் சிட்டா ஆகியவற்றை கணினிப்படுத்துதல்.

(ii) **கொலாப்லேண்ட்:** புலப்படச் சுவடி, பிளாக் வரைபடம் மற்றும் கிராம வரைபடங்கள் ஆகியவற்றை கணினிப்படுத்தி அவற்றை இணையவழியில் காண்பதற்காக பதிவிட, இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்வதற்காகவும் மற்றும் இணையவழியில் நிர்வாகம் செய்வதற்காகவும்.

(iii) **இணையவழி தமிழ்நிலம் (நகர்ப்புறம்):** நகர நிலப்பதிவேடு **(TSLR)** நகர அ–பதிவேடு மற்றும் இதர தொடர்புடைய நகர நில ஆவணங்களை இணையவழியில் நிர்வாகம் செய்வதற்காக.

மாநிலத்திலுள்ள **285** வட்டங்களில் இதுவரையில் **269** ஊரக வட்டங்கள் மற்றும் **11** நகர்ப்புற வட்டங்கள் சார்ந்த நில ஆவணங்கள் தமிழ்நிலம் மென்பொருள் மூலம் இணையவழிக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள **2** ஊரக வட்டங்கள் மற்றும் **3** நகர்ப்புற வட்டங்கள் சார்ந்த நிலஆவணங்கள் இணையவழியில் கொண்டுவரப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அனைத்து நத்தம் நில ஆவணங்களும் தமிழ்நிலம் தரவுதளத்தில் இணையவழிக்கு கொண்டுவர

நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தரவுகள் பதிவேற்றம் செய்யும் பணி முடிவடைந்து சரிப்பார்க்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. சரிபார்க்கும் பணி மற்றும் பிழைகள் சரிசெய்யும் பணி முடிவடைந்ததும் தமிழ்நிலம் தரவுதளத்தில் வட்டம் வாரியாக தரவுகள் பதிவிடப்படும்.

### 6.5.1 நகர நில ஆவணங்கள் கணினிமயமாக்கல்

ஊரக நில ஆவணங்களிலிருந்து நகர்ப்புற நில ஆவணங்கள் வேறுபாடானது என்பதால் தேவையான மென்பொருள் செயலியை உருவாக்கிய பின்னர் நகர்ப்புற நில ஆவணங்கள் கணினிப்படுத்துவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தற்போது, அனைத்து 37.92 இலட்சம் நகர்ப்புற நில ஆவணங்களும் பதிவேற்றம் செய்யப்பட்டு சரிபார்க்கும் பணியும் முடிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தின் அனைத்து 10 வட்டங்களும், திருவள்ளூர் மாவட்டத்தின் அம்பத்தூர் வட்டமும் இணையவழிக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இதர 3 நகர்ப்புற வட்டங்களும் மாநிலத்திலுள்ள இதர நகர்ப்புற பகுதிகளான மாநகராட்சிகள் மற்றும்

நகராட்சிகள் சார்ந்த பகுதிகளும் விரைவில் இணையவழிக்கு கொண்டு வரப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 6.5.2 புலப்படங்கள் கணினிமயமாக்கல்

புலப்படங்கள் மற்றும் பிளாக் வரைபடங்கள் (நகரப்பகுதிகள்) கொலாப்லேண்ட் மென்பொருள் மூலம் கணினிப்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது. மொத்தமுள்ள **55.44** இலட்சம் புலப்படங்களில் இதுவரையில் **51.27** இலட்சம் புலப்படங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள ஆவணங்கள் விரைவில் கணினிப்படுத்தி முடிக்கப்படும்.

அதே நேரத்தில், கணினிப்படுத்தி முடிக்கப்பட்ட வட்டங்களின் தரவுகள் விரைவில் மைய சேவைக் கணினியில் பதிவிடப்படும். இதன்படி உட்பிரிவு செய்யும் பணி மிகவும் எளிதாக்கப்பட்டுள்ளது. மேலும், இணையத்திலிருந்து பொதுமக்கள் மின்ஒப்பம் செய்யப்பட்ட புலப்படங்களை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மேலும், அலுவலக பயன்பாட்டிற்கு தேவைப்படும் வகையில் அனைத்து புலப்படங்களும்

ஒன்றிணைக்கப்பட்டு கிராம, வட்ட, மாவட்ட வரைபடங்கள் மற்றும் கூட்டு வரைபடங்கள் தயாரிக்கப்படும். இது நிலப் பயன்பாடு திட்டத்தின் தரத்தை மிகவும் மேம்படுத்தும்.

### 6.5.3 நில ஆவண மேலாண்மை மையங்கள்

தேவையான உள்கட்டமைப்பு வசதிகளுடன் கையினால் தயாரிக்கப்பட்ட நில ஆவணங்களை பாதுகாப்பதற்கும், அவற்றை கணினிப்படுத்தி இலக்கமுறையில் (Digital) பாதுகாத்து பராமரிப்பதற்கும் பொதுமக்களுக்குத் தேவைக்கேற்ப அவற்றின் நகல்களை வழங்குவதற்கும் ஏதுவாக அனைத்து வட்டங்களிலும் நில மேலாண்மை மையங்கள்/ நவீன பதிவறைகள் உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நடைமுறைப்படுத்தி வரும் அனைத்து சேவைகளையும் பொதுமக்களுக்கு வழங்கிட இம்மையங்கள் பயன்படுத்தப்படும். முதற்கட்டமாக அனுமதிக்கப்பட்ட 78 வட்டங்களில் இதுவரையில் 75 வட்டங்களில் நில ஆவண மேலாண்மை

மையங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. எஞ்சியுள்ள 3 வட்டங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும், 76 வட்டங்களில் நில ஆவண மேலாண்மை மையங்கள் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் 2017–18 நிதியாண்டில், கூடுதலாக 100 நில ஆவண மேலாண்மை மையங்களை உருவாக்கிட நிதி ஒப்பளிப்பு வழங்க மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது.

## 6.6 பயிற்சி பிரிவு (Training Cell)

ஒரத்தநாட்டிலுள்ள நிலஅளவை பயிற்சி நிலையத்தில் நவீன நில அளவை மற்றும் இலக்க முறை படம் தயாரித்தல் தொடர்பான பயிற்சி அளிக்க பயிற்சி பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காக மின்னணு நிலஅளவை கருவிகள் (Electronic Total Stations) பூகோள நிலைக்கலன் கருவி (Global Positioning System), தேவையான மென்பொருள் மற்றும் பயிற்சிக் கருவிகள் ஆகியவை மேற்படி பயிற்சி நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு நிலஅளவை பயிற்சி மையம் தவிர சென்னையிலும், ரூ.2.45 கோடி செலவில் நவீன வசதிகளை கொண்ட நவீன நில அளவை பயிற்சி மற்றும் படம் தயாரித்தல் தொடர்புடைய பயிற்சியினை, வழங்கும் பொருட்டு ஒரு பயிற்சி மையம் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 6.6.1 கிராம/ வட்ட/ மாவட்ட வரைபடங்களை தமிழில் தயாரித்தல்

சென்னை மத்திய நில அளவை அலுவலகத்தில் கிராம/ வட்ட/ மாவட்ட வரைபடங்களை தமிழில் தயாரிக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இதுவரை அனைத்து மாவட்ட மற்றும் வட்டங்களின் வரைபடங்களும் கணினிப்படுத்தப் பட்டுள்ளன. அனைத்து கிராமங்களின் வரைபடங்களையும் தமிழில் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

கணினிமயமாக்கப்பட்ட கிராம/ வட்ட/ மாவட்ட வரைபடங்கள் தமிழில் தயாரிக்கப்பட்டு, சரிபார்க்கப்பட்ட பின்னர் பொது மக்களுக்கு பயன்பாட்டிற்கு கிடைக்க வசதிகள் செய்யப்படும். மேலும் இந்த வரைபடங்களை

இணையதளம் மூலமாக பதிவிறக்கம் செய்ய வசதிகள் ஏற்படுத்தப்படும். தமிழ் மொழியிலான இந்த வரைபடங்கள் கிராம மக்களுக்கு மிகப்பெரிய அளவில் பயனுள்ளதாக இருக்கும். இதர அரசுத் துறைகளும் இணையம் மூலமாக வரைபடங்களை பதிவிறக்கம் செய்து அவர்களுடைய தேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

## 6.7 இணையவழி அமைப்பின் பயன்கள்

நில ஆவணங்கள் இணையவழியில் பராமரிக்கப்பட்டு வருவது பின்வரும் வகையில் பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

- வட்ட அலுவலகங்களுக்கு செல்வதற்கு பதிலாக பொதுமக்கள் தங்கள் வசிப்பிடங்களுக்கு அருகாமையில் அமைந்துள்ள பொதுச்சேவை மையத்தின் (Common Service Centres) மூலம் இணையவழியில் பட்டா மாற்றத்திற்கு விண்ணபிக்கலாம்.
- கணினி மூலம் அச்சிடப்பட்ட ஒப்புகைச் சீட்டு விண்ணப்பதாரர்களுக்கு உடனடியாக

வழங்கப்படுவதுடன் அவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

- பெறப்படும் விண்ணப்பங்கள் தக்க நடவடிக்கைக்காக உடனுக்குடன் தொடர்புடைய அலுவலர்களுக்கு மாற்றப்படுவதுடன் பொதுமக்கள் அவை குறித்த தற்போதைய நிலையினை **tamilnilam.tn.gov.in/ Revenue/ login.html** என்ற இணையதளம் மூலம் அறிந்து கொள்ளலாம்.
- விண்ணப்பதாரர்களுக்கு அவர்களுடைய விண்ணப்பத்தின் மீதான நடவடிக்கையின் விவரங்கள் பதிவு செய்யப்பட்ட அலைபேசி வாயிலாக குறுஞ்செய்திகளாக அனுப்பப்பட்டு வருகின்றன.
- மின் ஒப்பமிடப்பட்ட பட்டாவை வட்ட அலுவலகங்களுக்கு செல்லாமலேயே இணையம் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ள இயலும்.

இணையவழி நில ஆவணங்கள் பராமரிப்புத் திட்டம், துறையின் நிர்வாகத்திற்கு கீழ்க்குறிப்பிட்ட வகையில் உதவிகரமாக இருந்து வருகிறது.

- பணிவழிமுறை கணினிப்படுத்தப்பட்டுள்ளதால் அலுவலர்களின் பணிப்பளு வெகுவாக குறைந்துள்ளது.
- அலுவலர்களின் வேறுபட்ட நிலையிலான பணித்திறன் உயர்அலுவலர்களால் இலகுவாக கண்காணிக்கப் படுவதால் புலத்தில் அவர்களுடைய பணியின் திறன் சிறப்பானதாக உள்ளது.
- இணையவழியில் விண்ணப்பங்கள் பெறப்படுவதால் எவ்வித விடுதலுமின்றி சிறந்த முறையில் கணக்கு வைக்கப்படுகிறது.
- மேலாண்மை தகவல் அமைப்பு (Management Information System) அறிக்கைகள் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படுவதால் கட்டுப்பாட்டு அலுவலர்களான மாவட்ட ஆட்சியர் மற்றும்

கீழ்நிலை அலுவலர்களால் அதன் செயல்பாடுகளை கண்காணிக்கவும், இடையூறுகளை ஆய்ந்தறிவதற்கும் சரியான நடவடிக்கை எடுப்பதற்கும் ஏதுவாக இருக்கிறது.

### 6.7.1 பதிவுத்துறை தரவு தளத்துடன் நில ஆவணங்களை ஒருங்கிணைத்தல்

- கணினிமயப்படுத்தப்பட்டு நில ஆவணங்கள் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளதால் நிலஉரிமை மாற்றம் குறித்த நடவடிக்கைகளை வலைத்தளத்தில் கிடைக்கப்பெறுகிற தகவல்களுடன் உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே, நிலப்பரிவர்த்தனைகளை பத்திர பதிவுத்துறை அலுவலர்கள் அனுமதிக்கின்றனர். இதனால் தவறான நிலப்பரிவர்த்தனைகள் தவிர்க்கப்படுகிறது.
- பத்திரப்பதிவு நடவடிக்கைகள் முடிவுற்றதும் அந்நடவடிக்கை விவரங்கள் தன்னியல்பாக தமிழ்நிலம் மென்பொருளுக்கு மாற்றம் பெறுவதற்கும், அதன்படி அ–பதிவேடு மற்றும்

சிட்டாவில் நிலஉரிமை மாற்றங்கள் குறித்து தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 6.8 இயக்ககத்தின் பணிகளை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

### 6.8.1 குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் விதி எண். 110–இன்கீழ் அறிவித்ததன்படி 100 குறுவட்டங்களில் குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இது, பொதுமக்கள் குறுவட்ட அளவர்களை எளிதாக தொடர்பு கொண்டு தங்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள உதவிகரமாக இருக்கிறது. மேலும், அரசாணை (நிலை) எண்.164, வருவாய் [நிஅ–II] துறை, நாள் 04.05.2017–இல் அரசு அனுமதித்துள்ளபடி ரூ.7.68 கோடி மதிப்பீட்டில், மேலும்

50 குறுவட்டங்களில் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் உருவாக்கப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 6.8.2 உயர் அலுவலர்கள் மற்றும் குறுவட்ட அளவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்

கணினிப்படுத்தப்பட்ட புலப்படங்களை இணையவழி பராமரிப்பிற்கு கொண்டு வந்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு வழங்குவதற்காக 1140 குறுவட்ட அளவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் மூன்றாம் தலைமுறை தரவு அட்டைகளுடன் கூடிய 50 மடிக்கணினிகள் உயர் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### 6.8.3 சி.யூ.ஜி (CUG) வசதியுடன் சிம் கார்டு வழங்கப்பட்டது

பட்டா மாற்றம் மற்றும் இதர அலுவலகம் சார்ந்த தகவல்களை பரிமாறிக் கொள்ள ஏதுவாக அலைபேசியில்

பொருத்தி, குறிப்பிட்ட எண்களுக்கு மட்டும் பேசக்கூடிய வகையில் (Closed User Group) குறுவட்ட அளவர்கள், ஆய்வாளர்கள், துணை ஆய்வாளர்கள் மற்றும் சார் ஆய்வாளர்கள் ஆகியோருக்கு 1,600 சிம்கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

### 6.8.4 காலிப்பணியிடங்கள் நிரப்புதல்

அரசால் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 16.05.2011 முதல் தற்போது வரையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 1,459 நில அளவர்களும் மற்றும் 485 வரைவாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் 340 நிலஅளவர் பதவிகளும் மற்றும் 291 வரைவாளர் பதவிகளும் விரைவில் நிரப்பப்படும்.

### 6.8.5 போட்டோ சின்கோ அச்சகத்தை நவீனப்படுத்துதல்

சென்னை மத்திய நிலஅளவை அலுவலத்தின் போட்டோ சின்கோ அச்சகம் ரூபாய் ஒரு கோடி செலவில்

நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரையில் ரூ.42.34 இலட்சம் மதிப்பிலான இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன் எஞ்சியுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும். இவ்வச்சகம் 93 வருடங்களுக்கு பிறகு தற்போது புணரமைக்கப்படுகிறது. இது, பொதுமக்கள் மற்றும் இதர துறையினருக்கு தேவைப்படும் பலவகைப்பட்ட வரைபடங்களை வழங்கும் வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

### 6.8.6 நில ஆவணங்களை பாதுகாப்பதற்கு இணைப்பு கட்டடம்

மாநிலமெங்கும் உள்ள பழமையான விலைமதிப்பற்ற நில ஆவணங்களான பிளாக் வரைபடம், கிராம வரைபடம், வட்ட மற்றும் மாவட்ட வரைபடங்கள் ஆகியவற்றினை, பாதுகாத்து வைப்பதற்காக நில அளவை இல்ல வளாகத்தில் ரூ.2.20 கோடி செலவில் ஒரு இணைப்பு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## 6.9 நிலஅளவைத் துறைக்கு விருதுகள்

### 6.9.1 இணையவழி பட்டா மாறுதல் திட்டத்திற்கு 2016–ஆம் ஆண்டிற்கான நல் ஆளுமை விருது

இத்துறையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மற்றும் ஆற்றிய பணிகளை அங்கீகரிக்கும் வகையில் **2016–ஆம் ஆண்டுக்குரிய நல் ஆளுமைக்கான விருதும்,** ரூ.2.00 இலட்சம் ரொக்கப்பரிசும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் **15.08.2016–**இல் நடைபெற்ற 70–வது இந்திய சுதந்திர தின விழாவில் இத்துறைக்கு வழங்கப்பட்டது. இவ்விருது அனைத்து நில ஆவணங்களையும் கணினிப்படுத்தி இணையவழி பட்டா மாறுதலை நடைமுறைப்படுத்தியமைக்கும், பொதுமக்களுக்கு நிகழ்நிலைப் படுத்தப்பட்ட நில ஆவணங்களை இணையத்தில் எந்நேரத்திலும் எங்கிருந்தும் பார்க்கவும் தேவையானால் அ–பதிவேடு மற்றும் சிட்டா நகலை இணையம் மூலம்

பதிவிறக்கம் செய்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டதற்காக வழங்கப்பட்டதாகும்.

### 6.9.2 CSI–நிகிலெண்ட் மின் ஆளுமை விருது

இத்துறையில் இணையவழியில் உட்பிரிவு செய்து பட்டா மாறுதல் செய்யும் "AMMA Land Records Online Mutation for Title Transfer" திட்டத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்தியதற்காக இந்திய கணினிகள் அமைப்பால் மதிப்புமிக்க **2015–2016** ஆம் ஆண்டுக்கான CSI–நிகிலெண்ட் மின் ஆளுமை விருது **09.12.2016** அன்று இத்துறைக்கு வழங்கப்பட்டது.


CSI-Nihilent e-Governance Awards 2015-16


The Award of Recognition

is hereby conferred upon

AMMA Land Records Online Mutation for Title Transfer
Department of Survey & Settlements
Government of Tamil Nadu



**CSI – நிகிலெண்ட் மின் ஆளுமை விருது 2015–16**




புலப்படங்கள் கணினிமயமாக்கல்
கொலாப்லேண்ட்  மையம் – தஞ்சாவூர் மாவட்டம்



நில ஆவண மேலாண்மை மையம்
திருப்பெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்



**டிஜிட்டல் இந்தியா பயிற்சி மையம் – நிலஅளவை பயிற்சி நிலையம், ஓரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்**



**DGPS** மற்றும் **RTK** தொழில்நுட்பத்தைக் கொண்டு
மறுநில அளவை பணிகள் ஆய்வு – திருவள்ளூர் மாவட்டம்

## 6.10 நிலவரித்திட்டம்

தொன்றுதொட்டு, அரசின் முக்கிய நிதி ஆதாரம் நிலத்திலிருந்து பெறப்பட்டது. நிலத்தின் விளைச்சலில் ஒரு பகுதியை, அரசு வசூலிப்பது வழக்கமாகும். இவ்வாறு பொருளாக வசூலிப்பது கடினமாக இருந்ததால், அதன் பணமதிப்பு, நிலவருவாய் என அழைக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. 'நிலவரி' நிர்ணயிப்பதற்காக கடைப்பிடிக்கப்படும் முறை, நில வருவாய் நிலவரித்திட்டம் எனப்படுகிறது. நிலவரி நிர்ணயிப்பதற்காக கடைப்பிடிக்கப்படும் முறையில், மண்ணின் தரம், விளைச்சலின் தன்மை, அதன் பண்புகளின் அடிப்படையில் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு நிலவரி நிர்ணயிக்கப்படுகிறது.

ஆரம்பத்தில், ஜமீன்தார்கள்/ இனாம்தாரர்கள் போன்ற நில உடமையாளர்கள் மூலம் நிலவரி வசூலிக்கப்பட்டது. எப்போதும் மண்ணின் உற்பத்தி திறனுக்கு ஏற்ப இல்லாமல் நில உடமையாளர்களால் அதிக தொகையாக நிலவரி வசூலிக்கப்பட்டதால், அறிவியல்பூர்வமாக நிலவரி நிர்ணயம் செய்யவும் அதனை

நேரடியாக ரயத்துகளிடமிருந்து (விவசாயிகளிடமிருந்து) வசூலிக்கவும் ஏறத்தாழ 1879–80–ஆம் ஆண்டு முதற்கொண்டு "இரயத்துவாரி நிலவரித்திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டது. சுதந்திரத்தின்போது, தமிழ்நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் ரயத்துவாரி நிலவரித்திட்ட முறை நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தது. ஆனால், ஜமீன் எஸ்டேட் மற்றும் இனாம் எஸ்டேட் பகுதிகளில், ஜமீன்தார்கள்/ இனாம்தாரர்கள் தொடர்ந்து, ரயத்துகளிடமிருந்து வரிவசூல் செய்து அரசுக்கு செலுத்தி வந்தனர். இரயத்துகளுக்கிருந்த சுமையை குறைப்பதற்காகவும், நில உடமையாளர்கள் என்ற பிரிவினரை மொத்தமாக நீக்குவதற்காகவும், பல்வேறு நில உடமையாளர்கள் ஒழிப்பு சட்டங்கள் இயற்றப்பட்டன. அவைகளில் பெரும்பாலான சட்டங்களின் கீழ் நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட்டு பின்வரும் சட்டங்களின் கீழ் நிலவரித்திட்டப் பணிகள்/ மேல்முறையீடுகள் நிலுவையிலுள்ளன.

1. தமிழ்நாடு எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1948 (தமிழ்நாடு சட்டம் XXVI/1948)

2. தமிழ்நாடு இனாம் எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963)

3. தமிழ்நாடு சிறு இனாம்கள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963)

4. தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969)

இனாம் மற்றும் மைனர் இனாம் ஒழிப்பு சட்டங்களின் கீழ், நில உடமையாளர்கள் நீக்கப்பட்டு நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இன்றைய நிலையில் பின்வரும் கிராமங்களைத் தவிர இதர பகுதிகளில் நிலவரித்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

### 6.10.1 தமிழ்நாடு இனாம் எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றல்) சட்டம். 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963)

தமிழ்நாட்டில் உள்ள இனாம் எஸ்டேட்டுகளில் இருந்த நில உடமையாளர்களின் உரிமையைக் கைப்பற்றவும், அந்த எஸ்டேட்டுகளில் இரயத்துவாரி நிலவரித்திட்டத்தினை அறிமுகப்படுத்தவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது. இச்சட்டத்தின் கீழ் அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த கிராமங்களில் நீதிமன்ற வழக்குகளுக்கு உட்பட்ட பின்வரும் கிராமங்களைத் தவிர, இதர அனைத்து கிராமங்களிலும் நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட்டுவிட்டன.

| வ. எண். | கிராமத்தின் பெயர் | வட்டம் மற்றும் மாவட்டம் |
|---|---|---|
| 1. | அரையபுரம் தட்டிமால் படுகை | பாபநாசம் வட்டம் தஞ்சாவூர் மாவட்டம் |
| 2. | சூரியநாராயணபுரம் | பட்டுக்கோட்டை வட்டம் தஞ்சாவூர் மாவட்டம் |
| 3. | இராமச்சந்திரன் கோயில்பத்து | தரங்கம்பாடி வட்டம் நாகப்பட்டினம் மாவட்டம் |

| வ. எண். | கிராமத்தின் பெயர் | வட்டம் மற்றும் மாவட்டம் |
|---|---|---|
| 4. | கழனிவாய்ப்பட்டி | திருமயம் வட்டம் புதுக்கோட்டை மாவட்டம் |
| 5. | சென்னசந்திரம் | ஒசூர் வட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 6. | திம்மசந்திரம் | |
| 7. | உளியாளம் | |

### 6.10.2 தமிழ் நாடு சிறு இனாம் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றல்) சட்டம். 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963)

தமிழ்நாட்டில் உள்ள சிறு இனாம்தாரர்களின் உரிமையை அரசு கைப்பற்றி அவற்றில் இரயத்துவாரி நிலவரித்திட்டத்தினை அறிமுகப்படுத்த இச்சட்டம் வழி வகை செய்கிறது. இச்சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட இனாம் கிராமங்களில் நீதிமன்ற வழக்குக்கு உட்பட்ட பின்வரும் கிராமங்களைத் தவிர இதர அனைத்து கிராமங்களிலும் நிலவரித்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | கிராமத்தின் பெயர் | வட்டம் மற்றும் மாவட்டம் |
|---|---|---|
| 1. | காரணப்பட்டி | இலுப்பூர் வட்டம் புதுக்கோட்டை மாவட்டம் |
| 2. | கோதண்டராமபுரம் | இலுப்பூர் வட்டம் புதுக்கோட்டை மாவட்டம் |
| 3. | நிலையப்பட்டி | இலுப்பூர் வட்டம் புதுக்கோட்டை மாவட்டம் |
| 4. | அகஸ்தியம்பள்ளி | வேதாரண்யம் வட்டம் நாகப்பட்டினம் மாவட்டம் |
| 5. | தாரிக்கொம்பன் | இளையான்குடி வட்டம் சிவகங்கை மாவட்டம் |
| 6. | பைரசந்திரம் | ஒசூர் வட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 7. | இளையசந்திரம் | |
| 8. | மாரசந்திரம் | |

இக்கிராமங்களை பொறுத்தவரையில், சம்மந்தப்பட்ட எஸ்டேட் உடமையாளர்/ இனாம்தாரர்களால் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்குகள் காரணமாக நிலவரித்திட்ட பணிகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. இன்றைய நிலையில், இராமச்சந்திரன் கோயில் பத்து கிராமத்தை தவிர இதர இனங்களிலிருந்த சட்டத்தடைகள் நீக்கப்பட்டுள்ளதால், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

## 6.10.3 தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 24/69)

நீலகிரி மாவட்டம் கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்களில், ஜென்மம் எஸ்டேட்களில் ஜென்மிகளுக்கு இருந்த உரிமையை எடுத்துக்கொள்ளவும் இரயத்துவாரி நிலவரித்திட்ட முறையை அறிமுகப்படுத்தவும் இச்சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் தொடரப்பட்டன. இதில், மொத்தம் உள்ள **80,087.74** ஏக்கர் ஜென்மம் நிலங்களில், **45,101.46** ஏக்கர் பரப்பில் இதுவரை நிலவரித்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள **34,986.28** ஏக்கர் பரப்பில் நிலவரித்திட்டப் பணிகள் முடிக்கப்பட வேண்டியுள்ளது. உயர்நீதிமன்றத்திலும் உச்சநீதிமன்றத்திலும் சில குத்தகைதாரர்கள் மற்றும் ஜென்மிக்களால் பல வழக்குகள் தொடரப்பட்டிருந்ததால், இப்பணிகள் தாமதப்படுத்தப்பட்டு முடிக்க இயலவில்லை. தற்போது பல வழக்குகளில் தீர்ப்புரை அளிக்கப்பட்டதாலும், உச்சநீதிமன்றம் தமிழ்நாடு சட்டம் **24/69–**ஐ செல்லத்தக்கதாக தீர்ப்பளித்ததாலும், நிலவரித்திட்டப் பணிகளை முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| வ. எண் | விவரங்கள் | விஸ்தீரணம் (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. | மொத்த ஜென்மம் நிலங்கள் | 80,087.74 |
| 2. | நிலவரித்திட்டம் முடிக்கப்பட்ட மொத்த பரப்பு | 45,101.46 |
| 3. | நிலவரித்திட்டம் முடிக்கப்பட்ட பரப்பில் வனத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டது | 11,204.47 |
| 4. | நிலவரித்திட்டப்பணி முடிக்கப்பட வேண்டிய பரப்பு [(1)–(2) ] | 34,986.28 |

நிலவரித்திட்டப் பணிகள் மேற்கொள்வதற்காக மீதமுள்ள **34,986.28** ஏக்கர் பரப்பை பொறுத்தவரையில், மேற்படி தமிழ்நாடு சட்டம் **24/69,** பிரிவு **8,9,10–**களின் கீழ் பெறப்பட்ட மனுக்களை முடிவு செய்யுமாறு நிலவரித்திட்ட அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலரை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. இன்றைய நிலையில் மனுக்களின் நிலை பின்வருமாறு:-

| | |
|---|---|
| பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | **566** |
| முடிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | **420** |
| நிலவரித்திட்ட அலுவலரிடம் நிலுவையிலுள்ள மனுக்கள் | **146** |

இம்மனுக்களை முடிவு செய்தபின், மேற்படி **34,986.28** ஏக்கர் பரப்பில் நிலவரித்திட்டப் பணிகளை, நிலவரித்திட்ட அலுவலரால் முடிக்கப்படும்.

## 6.10.4 திட்டங்கள்

### 6.10.4.1 நத்தம் நிலவரித்திட்டம்

அரசாணை (நிலை) எண்.**1971**, வருவாய்த்துறை நாள் **14.10.1988**–இல் சென்னை பழைய நகரம் நீங்கலாக, மாநிலத்திலுள்ள அனைத்து கிராமங்களிலுள்ள நத்தம் வீட்டு மனைகளிலும் விவசாய நிலங்களில் இருந்த வீட்டுமனை பகுதிகளிலும், நிலவரித்திட்டப் பணி மேற்கொள்ள உத்தரவிடப்பட்டது. அதன்படி பணிமுன்னேற்றத்திலுள்ள நீலகிரி மாவட்டத்தில் **51** கிராமங்களும் திருவள்ளூர் மாவட்டத்தில் 7 கிராமங்களும் தவிர இதர அனைத்து கிராமங்களிலும் இப்பணி முடிக்கப்பட்டுள்ளது.

**6.10.4.2 மலை கிராமங்களில் வருவாய் பின் தொடர் பணி**

மாநிலத்திலுள்ள 67 மலை கிராமங்களில், மலை நிலஅளவைப் பணிகள் முடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வருவாய் பின் தொடர் பணி தொடங்க உத்தரவிடப்பட்டது. இப்பணி, 61 மலைக் கிராமங்களில் முடிக்கப்பட்டு 6 கிராமங்களில் பணி நடைபெற்று வருகிறது.

**6.10.4.3 நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் வருவாய் பின்தொடர் பணி**

மாநிலத்திலுள்ள அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளிலும் (சென்னை பழைய நகரம் தவிர) வருவாய் பதிவேடுகளிலுள்ள பதிவுகளை இன்றைய நிலையில் மேம்படுத்தவும், நிலஉடமைதாரர்களுக்கு பட்டா வழங்கவும், வருவாய் நிர்வாக பணிகளுக்காக நில ஆவணங்களை தயாரித்து அளிக்கவும் வருவாய் பின் தொடர்பணி தொடங்க உத்தரவிடப்பட்டது.

இதன்படி, மாநிலத்திலுள்ள 12 மாநகராட்சி மற்றும் 125 நகராட்சிகளில், இப்பணி 10 நகராட்சிகளில் முழுவதுமாக முடிக்கப்பட்டுள்ளன. இப்பணி, 5 மாநகராட்சிகளிலும் 63 நகராட்சிகளிலும், 75 தனி வட்டாட்சியர் அலகுகளின் மூலம் நடைபெற்று

வருகின்றன. மீதமுள்ள நகராட்சிகள்/மாநகராட்சிகளை பொறுத்தவரையில், இப்பணி தற்போது நடைபெற்று வரும் அலகுகளில் பணி முடிக்கப்பட்டவுடன், அவ்வலகு, பணி தொடங்கவேண்டிய நகராட்சிகள்/ மாநகராட்சிகள் மறு அமர்வு செய்யப்பட்டு பலகட்டங்களாக பணி தொடங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் 2011 முதல் 2017 வரை 9,01,468 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 6.11 வக்ஃப் சொத்து கணக்கெடுப்புப் பணி

வக்ஃப் கணக்கெடுப்பு ஆணையராக நியமிக்கப்பட்டுள்ள நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரின் கட்டுப்பாட்டிலும், மேற்பார்வையிலும் வக்ஃப் கூடுதல் ஆணையர்களாக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட வருவாய் அலுவலர்களால் அவர்களது ஆட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வக்ஃப் சொத்து கணக்கெடுப்பு பணி மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகிறது. இப்பணி இதுவரை 23 மாவட்டங்களில் முடிக்கப்பட்டு இதர மாவட்டங்களில் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**ஆர்.பி. உதயகுமார்**
வருவாய்த்துறை அமைச்சர்